

குஜராத் சிறப்பிதழ்-III
KALKI 27-5-84
ரூ-1.50
கல்கி



சின்னஞ்சிறு காயத்தில்கூட அழுக்குப் புகுந்துவிடும்
இதனால் காயம் பெரிதாகும், கஷ்டம் உருவாகும்.

உடனடியாக பாண்ட்-எய்ட் உபயோகியுங்கள்

உலகில் உள்ள தாய்மார்கள் நம்புவது பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்—அது, காயங்களில் அழுக்குப் புகாமலும், தொற்றிலிருந்தும் காயங்களைப் பாதுகாக்கிறது.

ஆகவேதான் பாண்ட்-எய்ட் முழுப் பாதுகாப்பானதாகும். பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்கில் உள்ள நிருபணமான ஆன்டிசெப்டிக், காயத்தை ஆற்றுவதற்கு உதவுகிறது. அதிலுள்ள நுண்துளைகள் காயங்களை விரைந்தாற்றிட உதவுகின்றன. ஒட்டிக்கொள்ளாத வசதிமிக்க ஒப்பற்ற அடுக்கு.

காயங்களின் வெவ்வேறு வடிவம் மற்றும் அளவுகளுக்கு ஏற்ப வருகின்றன பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள். பெரிய புண்கள், சிறிய வெட்டுக் காயங்கள், கட்டுப்போட முடியாத இடங்கள், கொப்புளம் மற்றும் சிராய்ப்புகளுக்கு எப்போதும் உங்கள் கைவசமிருக்கட்டும் பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்.



கைவசம் வைத்திருங்கள் பாண்ட்-எய்ட்
ஏனென்றால், காயங்கள் எங்கும் எந்நேரமும் ஏற்படலாம்.

OBM/2613 TAM

Johnson & Johnson

கே. கே. நகர் இ.எஸ். ஐ. ஆஸ்பத்திரியின் இரண்டாவது மாடியில் சந்திரசேகரை (கட்டுரைக்காகப் பெயர் மாற்றப்பட்டுள்ளது) சந்தித்தோம். மனைவிக்கு வயிற்றில் கட்டி இருக்கிறது என்று டாக்டர் சொல்லவே ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறாராம். சந்திரசேகர் தனியார் நிறுவன ஊழியர். மாதாமாதம் இ.எஸ்.ஐ.க்கு இவரது சம்பளத்தில் பிடித்தம் செய்யப் படுகிறது. நாங்கள் அவரைச் சந்தித்த போது 'வீட்டுக்குப் போகப் போகிறோம்' என்று கிளம்பிக் கொண்டிருந்தார்.

''உங்கள் மனைவிக்கு உடம்பு சரியாகிவிட்டதா?''

''இல்லை. ஆனால் இங்கிருந்து என்னபிரயோசனம்? அட்மிட் செய்து இரண்டு வாரம் ஆயிற்று. இன்னும் ஒரு பரிசோதனையும் முடியவில்லை. டாக்டரைக் கேட்டால் 'பொறுங்கள்' என்று கூறுகிறார். டாக்டர் எழுதித் தரும் மாத்திரைகள் இந்த ஆஸ்பத்திரியில் கிடைப்பதில்லை. அவற்றை மாற்றி எழுதி மீண்டும்வேறு மாத்திரை வாங்குவதற்குள் மாடிப் படிகளை பலதடவை ஏறி இறங்கி நமக்கே உடம்புக்கு வந்து விடும் போல் இருக்கிறது. இந்த அழகில் இங்கு ஆபரேஷன் என்று செய்து கொண்டால் என்ன நேருமோ என்று பயமாக இருக்கிறது.''

சந்திர சேகருக்கு மட்டும் இந்தப் பயம் இல்லை. இ. எஸ்.ஐ.திட்டத்தில் சேர்ந்துள்ள லட்சக் கணக்கான பேர்களுக்கும் இ. எஸ். ஐ. என்றால் பயம்தான்.


ஃ ஃ ஃ

அம்பத்தூரில் உள்ள தனியார் கம்பெனி ஒன்றின் அக்கவுண்ட்ஸ் மானேஜர் சொல்கிறார்.

''எங்க தொழிற் சாலை ஊழியர்கள் பலருக்கு லீவு வேண்டுமானால் இருக்கவே இருக்கிறது இ. எஸ். ஐ. இ. எஸ். ஐ. டாக்டரைக் ''கவனித்தால்'' உங்களுக்கு இல்லாத வியாதியை எழுதி கணக்கில்லாத அளவுக்கு லீவு கொடுப்பார். இ. எஸ். ஐ. சான்றிதழ் காட்டி லீவு கேட்டால் எங்களால்மறுக்க முடியாது. கம்பெனி சம்பளம்தான் கொடுக்காது. ஆனால் லீவு நாட்களுக்கு ஈ.எஸ். ஐ.யில் அரைச் சம்பளம் கொடுப்பார்கள். இன்னும் சில கெட்டிக்கார ஊழியர்கள் இருக்கிறார்கள். சம்பளத்துடன் கூடிய விடுப்பைக் கம்பெனியில் எடுத்து விடுவார்கள். பிறகு அதே கால கட்டத்துக்கு இ.எஸ். ஐ.யில் சென்று லீவு வேண்டும் என்று கூறி இ. எஸ். ஐ.யில் அரைச் சம்பளம் பெற்று விடுவார்கள் கம்பெனிக்கும் இ. எஸ். ஐ.க்கும் சரியான தொடர்பு இல்லாததால் இப்படி ஒன்றரைச் சம்பளம் பெறுவது சாத்தியமாகிறது.

ஃ ஃ ஃ

இது வேறு மாதிரியான விஷயம்: கிண்டியில் இ. எஸ். ஐ. மருத்துவ மனையில் சில வருடங்களுக்கு முன் டாக்டராக இருந்தவர் கண்ணன். (பெயர் மாற்றப்பட்டுள்ளது) தொழிலாளர்கள் அனாவசியமாக லீவு கேட்கிறார்கள் என்று கூறிப் பலருக்கு 'கொடுக்க முடியாது' என்று மறுத்து விட்டார். நியாயமான கேஸ்களுக்கு மட்டும் லீவு கொடுத்தார். ஒரு நாள் திடீரென்று இவருக்கு மாற்றல் வந்தது. திருவொற்றியூருக்கு. இதன் பின்னணி என்னவென்று விசாரித்தால்... தொழிலாளர்கள் தங்கள் இஷ்டப்படி டாக்டர் லீவு கொடுக்காததால் ஒன்று சேர்ந்து எழுதி விட்டார்கள் புகார்ஒன்றை.



✖ இ.எஸ் ஐ. நலகம அலுவலகம் கணக்குவழக்கோடு சரி

ஈ.எஸ்.ஐ ஆஸ்பத்திரிகளை இழுத்து மூடுங்கள்


''டாக்டர் சரியானபடி நோயாளிகளைக் கவனிப்ப இல்லை.'' ''ஆஸ்பத்திரிக்கு நேரத்துக்கு வருவதில்லை'' போன்று சரமாரியான புகார்கள். அவ்வளவுதான் மாற்றப்பட்டு விட்டார்.

ஃ ஃ ஃ

அமைந்தகரையில்உள்ள மருந்துக்கடை ஊழியர்ஒருவரிடம் பேசிக் கொண்டிருக்கும்போது அவர் கூறியது.

''பி-12,ஸ்ட்ரெப்டோமைசின், டெடனஸ் டெக்ஸ்ட்ராய்ட் போன்ற ஊசி மருந்துகள் எங்களுக்கு அரை விலையில் இ. எஸ். ஐ. ஊழியர்களால் விற்கப் படுகின்றன. நாங்கள் வேண்டாம் என்றாலும் இவைகளை வைத்துக்கொண்டு ஏதாவது கொடுங்கள் என்று கொடுப்பதை வாங்கிச் செல்கிறார்கள்.''

ஃ ஃ ஃ



கே.கே. நகர் இ. எஸ். ஐ. ஆஸ்பத்திரி
-நவீனக் கட்டிடங்களால் மட்டும் நோய்கள் குணமாகாது

இ. எஸ். ஐ. எனப்படும் மாநில தொழிலாளர் இன்ஷூரன்ஸ் நிறுவனம் Employees State Insurance Corporation 1948ம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டம் ஒன்றின் அடிப்படையில் நிறுவப்பட்டது. தொழிற்சாலைச் சட்டப்படி இயங்கும் எல்லா நிறுவனங்களும் இ. எஸ். ஐயுடன் தங்களைக் கட்டாயம் இணைத்துக் கொள்ள வேண்டும். மாநில அரசுடன் கலந்து தொழிலாளர்களின் உடல் நலத்தைக் கவனிக்கும் பொருட்டுப் பல்வேறு வசதிகள் இந்தச் சட்டத்தின் விதிப்படி இ. எஸ்.ஐ. செய்ய வேண்டும். ஆனால் நடைமுறையில் என்ன நடக்கிறது?

மாநில அரசு ஏற்கனவே அது நடத்தும் ஆஸ்பத்திரிகளையே சரியானபடி கவனிக்காமல், வசதிகளைச் செய்யாமல் சீரழிய வைத்துக் கொண்டிருக்கிறது. இந்த அழகில் இ. எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகளைக் கவனிக்க அதனால் எப்படி முடியும்? தனித்தும் இயங்காமல், மாநில அரசையும் சாராமல் உள்ள ஒரு இரண்டும் கெட்டான்அலுவலகமானது (quasi Govt. body) மாநில அரசையும் கலந்து கொண்டு இ. எஸ். ஐ. சம்பந்தப்பட்ட விஷயங்களைச் சட்டப்படி கவனிக்க வேண்டும். கவனிக்கிறதா என்பது வேறு விஷயம்.

லட்சக் கணக்கான ஊழியர்களின் பணம் இந்த அலுவலகத்தில்தான் கட்டப்படுகிறது. இவர்கள் அதில் ஒரு பங்கை மாநில அரசுக்குக் கொடுத்து இ. எஸ். ஐ.யின் தேவைகளைப் கவனிக்கச் சொல்கிறார்கள். இந்த அலுவலகத்துக்கு பல்வேறு வட்ட அலுவலகங்கள் வேறு.

இந்தத் தலைமை அலுவலகத்தாலும், வட்ட அலுவலகங்களாலும் மருத்துவ மனைக்கு வரும் நோயாளிகளுக்கு எந்த உபயோகமும் இல்லை. இவர்கள் கவலையெல்லாம், தனியார் கம்பெனிகள், நிறுவனங்கள் எல்லாம் முறைப்படி இ. எஸ். ஐ. தொகையை வசூலித்துக் கட்டுகின்றனவா என்பதைக் கவனிப்பதும், டாக்டர் லீவு கொடுத்தால் அந்த லீவுக்கு அரைச் சம்பளம் கொடுப்பதும்தான். இதனால் மருத்துவ மனையில் உள்ள டாக்டர்களுக்கும் ஊழியர்களுக்கும் குளிர் விட்டுப் போகிறது. மாநில அரசுக்கு இந்த ஆஸ்பத்திரி டாக்டர்களையும் ஊழியர்களையும் மேற்பார்வையிட நேரம் கிடையாது. அவதிப்படுகிறவர்கள் நோயுற்ற தொழிலாளர்கள்தான்.

எனவே இ. எஸ். ஐக்கும் அழுதுவிட்டு இவர்கள் தனியார் மருத்துவ மனைகளையும் பிரைவேட் டாக்டர்களையுமே நாடுகிறார்கள்.

ஃ ஃ ஃ

இ. எஸ்.ஐ. சட்டப்படி ஊழியர்கள் கட்டும் தொகைக்கு கம்பெனியும் இரண்டுமடங்கு அதனுடன் சேர்த்து அந்தத் தொழிலாளியின் கணக்கில் இ. எஸ். ஐ.யில் கட்ட வேண்டும். ஒரு ஊழியரின் சம்பளத்தில் 15 ரூபாய் பிடிக்கப்படுமானால் இ. எஸ். ஐ.யில் கம்பெனிப் பணத்துடன் சேர்த்துக் கட்டப்படுவது 45 ரூபாய். மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளம் பெறுபவர்களுக்குத்தான் இ எஸ். வசதி(?) என்று இருந்தது. இனி மாதம் ஆயிரத்து அறுநூறு வரை சம்பளம் வாங்குவோரும் இ. எஸ். ஐ. ''வசதி'' அனுபவிக்கப் போகிறார்கள்.

கவனிப்பு சரியில்லை என்பதால் பெரும்பாலான

தொழிலாளர்கள் இ.எஸ்.ஐ மருத்துவ மனைக்குள் நுழைவதில்லை என்றால் திரு மல்லிகேஸ்வரன் சொல்லும் இன்னொரு காரணமும் நம்மைச் சிந்திக்க வைக்கிறது. ''காரியாலய ஊழியர்கள் (white collar employees மத்தியில் இ. எஸ். ஐ. ஆஸ்பத்திரிக்குச் செல்வது ஒரு அவமானகரமான விஷயமாகக்கருதப் படுகிறதாம். காரணம் அந்த ஆஸ்பத்திரிகள் தொழிலாளர்களுக்காக நிறுவப்பட்டவை என்றஎண்ணம்தான். இந்த மனோபாவம் நிலவுவதுஉண்மைதான் என்பதை எந்த ஒரு இ. எஸ். ஐ. மருந்தகத்துக்கு விஜயம் செய்தாலும் புரிந்து கொள்ளலாம். அங்கிருக்கும் பணியாளர் நோயாளிகளை 'வாப்பா, போப்பா, டேய்' என்றுதான் கூப்பிடுகிறார்கள். ''உனக்கு என்னய்யா வேணும்'' ''பேஜாராப்போச்சு, கசமாலங்கள்'' போன்றவைகளை அந்த மருந்தகத்துக்குள் கேட்க முடிந்தது. தொழிலாளர்களே ஆனாலும் வந்திருப்பவர்கள் நோயாளிகள் என்பதும் அவர்களுக்குக் கனிவான வார்த்தைகளும் அன்பான உபசரிப்பும் தேவை என்பதும் இ. எஸ். ஐ. பணியாளர்களுக்கு தினை விருப்பதில்லை.

ஃ ஃ ஃ

இ. எஸ். ஐ. திட்டத்தில் இன்னொரு பெரிய குறை அலுவலகங்களும், மருத்துவ மனைகளும் வெவ்வேறு இடங்களில் இருப்பது. ஒரு நோயாளி தனக்கு உடம்பு சரியில்லையென்றால் டாக்டரிடம் சான்றிதழ் பெற்றுக் கொண்டு அரைச் சம்பளம் பெற வேறொரு இடத்திலுள்ள வட்ட அலுவலகத்துக்குச் சொல்ல வேண்டும். நோயாளியை இது போல் அலைய விடுவது நியாயமா? மருத்துவ மனையின் பக்கத்திலேயே இந்த அலுவலகங்களை வைத்தால் என்ன?

ஃ ஃ ஃ

பணிக்காலத்தின் போது நோயாளிக்கு விபத்து ஏதேனும் ஏற்பட்டு உடலில் ஊனம் ஏற்பட்டால் இ. எஸ். ஐ.தான் நஷ்ட ஈடு வழங்குகிறது. இதிலும்எவ்வளவோ கஷ்டங்கள். அந்த விபத்துக்குள்ளானவர் ஒரு மருத்துவக் குழு முன் ஆஜராக வேண்டும். பிறகு அது எடுக்கும் முடிவின்படி நஷ்டஈடு வந்து சேரப் பல மாதங்கள் ஆகின்றன. இதன் நடுவில் அந்த நபர் படும் கஷ்டத்தை விவரிக்க வேண்டாம்.

ஃ ஃ ஃ

இ. எஸ். ஐ. நடத்தும் ஆஸ்பத்திரிகளில் அயனாவரம் ஆஸ்பத்திரி பிரபலமானது. கே. கே. நகர் ஆஸ்பத்திரியில் கவனிப்பு சரியில்லா விட்டாலும் ஆஸ்பத்திரி சுத்தமாகவாவது இருக்கிறது. ஆனால் அயனாவர ஆஸ்பத்திரிக்கும் சுத்தத்துக்கும் ரொம்ப தூரம். ஆஸ்பத்திரியை ஒரு ரவுண்டு அடித்ததில் சரியாகச் சுத்தப் படுத்தப்படாத கழிப்பறைகளையும், தாழ்வாரத்தில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் ரத்தம், சீழ் தோய்ந்த பஞ்சுகளையும், நோயாளிகள் சாப்பிட்டு விட்டு எறியும் சாத்துக்குடி தோல்கள் போன்றவைகளையும் பார்க்க நேர்ந்தது. தற்போது ஆஸ்பத்திரியில் இருக்கும் ராம கிருஷ்ணன் (பெயர் மாற்றப்பட்டிருக்கிறது) என்பவரைச் சந்தித்துப் பேசுகையில் அவர் கூறியது:

''எனக்கு ஹிரண்யா ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று டாக்டர்கள் கூறுகிறார்கள். நான் சேர்ந்து மூன்று வாரங்கள் ஆகிறது. டாக்டரைக் கேட்டால் சீக்கிரம் செய்கிறோம் என்று சொல்கிறார்களே தவிர தேதி சொல்வதில்லை. 'டாக்டரைத் தகுந்தபடி கவனித்தால் ஆபரேஷன் விரைவில் நடக்கும்' என்று என்னைப் பார்க்க வரும் நண்பர்கள சொல்

அடுத்த வாரம்



கலைஞர் அறுபது


வைட்டமின்கள்
தெம்பும்
உடல்
ஆரோக்கியமும்
பெற
சில துளிகளே.
தேவை

கிறார்கள். எங்களிடம் சம்பளத்திலேயே பணத்தைப் பிடித்துக் கொண்டு இ.எஸ்.ஐ. எங்ஙனே நடத்தும் விதத்தைப் பாருங்கள்!''

கே. கே. நகர் ஆஸ்பத்திரியில் நோயாளிகள் நிறையப் பேர் இல்லை. பணியாளர்களும் நர்சுகளும் 'உதயம்' தியேட்டரில் நடக்கும் சினிமா பற்றியும் லாட்டரி ரிஸல்ட்டுகளைப் பற்றியும் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டு இருந்தார்கள். அந்த ஆஸ்பத்திரியில் உள்ள மாடிகளில் பெரிய பெரிய ஹால்கள் காலியாகக் கிடக்கின்றன.

அங்குள்ள ஊழியர் ஒருவரை ஆஸ்பத்திரியில் ஏன் கூட்டம் இல்லை என்று கேட்டதற்கு ''இன்னும் ஏரியா சரியாப் பிரிக்கலீங்க. தாம்பரத்திலிருந்து நுங்கம்பாக்கம் பகுதிவரைக்கும் உள்ளவர்களுக்கு இந்த ஆஸ்பத்திரிதான். ஆனால் சரியானபடி அறிவிப்புக் கொடுக்காததால் பல நோயாளிகள் அயனாவரத்துக்கே செல்லுகிறார்கள். மேலும் வட சென்னையில்தான் தொழிலாளர்கள் அதிகம். அயனாவரத்துக்கு அதிக நோயாளிகள் வருவதற்கு இதுவும் ஒரு காரணம்'' என்றார்.

- இ. எஸ். ஐ. சரிவர இயங்க வேண்டுமானால்.... அழகழகான கட்டிடங்கள் தேவைதான். ஆனால் இதனால் மட்டும் நோய் தீராது- ஆஸ்பத்திரிகளையும் மருந்தகங்களையும் அவற்றின் ஊழியர்களையும் டாக்டர்களையும் கண்காணிக்க ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும்.

- மருத்துவச் சாதனங்கள் மருந்துகள் போன்றவற்றை நேரடியாகப் பெற்று விநியோகிக்க வேண்டும். இத்தத் திட்டத்திலிருந்து மாநில அரசை விடுவித்து இ.எஸ். ஐ. நிர்வாகமே முழுவதுமாக ஏற்று நடத்த வேண்டும்.

- இ. எஸ். ஐ. திட்டத்தைப் பற்றியும் தொழிலாளர்களுக்கு அது தரும் பயன்களைப் பற்றியும் பிரசாரம் செய்ய வேண்டும். இப்போது மேல் மட்ட அளவில் நடக்கும் கருத்தரங்குகள், ஓர்க்ஷாப்கள் போன்றவை வாய்ப்பந்தலாகவும் தொழிலாளர்களுடன் சம்பந்தப் படாதவையாகவும் இருக்கின்றன.

- இ. எஸ். ஐ. வசதியை விரும்பாத நிறுவனத்தினர், தொழிலாளர் சம்மதத்துடன் அவர்களுக்கு யுனைடெட் இந்தியா போன்ற இன்ஷூரன்ஸ் கம்பெனி ஒன்றில் ஹெல்த் இன்ஷியூரன்ஸ் செய்யலாம் என்று ஏற்படுத்த வேண்டும். அப்போது ஏகபோக்யம் இன்றி போட்டி இருக்கும். வருவாயை இழந்து விடுவோமோ என்ற பயத்தில் இ. எஸ். ஐ. சரியாக இயங்கும்.

இதையெல்லாம் செய்ய முன்வராத பட்சத்தில் இ. எஸ். ஐ. ஆஸ்பத்திரிகளை இழுத்து மூடிவிடுவதேமேல்.

—ப்ரியன்—மௌலி
படங்கள்: சுபா

டெபாசிட்தாரர்களுக்கு

24%

வட்டி வழங்கப்படுகிறது

மேற்படி கூடுதல் வட்டி
பென்ஷனர், மகளிர், மைனர்களுக்கு மட்டும்
''வெள்ளிக் குத்துவிளக்கு'' அன்பளிப்புடன் வழங்கப்படும்.

கீழ்க்கண்ட வட்டி விகிதங்களில்
டெபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

1-வருடம்	2-வருடங்கள்	3-வருடங்கள்	5-வருடங்கள்
17%	18%	19%	22%

ஜெயசக்தி பைனான்சியர்ஸ்

(A LEADING HIRE PURCHASE FINANCIERS)

சென்னை	:	39, நடேச ஐயர் தெரு (2வது மாடி) (சிவா-விஷ்ணு கோயில் அருகில்) உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை-600 017 போன் : 447186
பெங்களூர்	:	24/1-A, மார்கோஸா ரோடு (10வது கிராஸ்) மல்லேஸ்வரம், பெங்களூர்-560 003. போன் : 366971
திருச்சி	:	22 மதுரை ரோடு (முதல் மாடி) திருச்சிராப்பள்ளி-620 008
பாண்டிச்சேரி	:	11, நேரு தெரு (கனரா வங்கி எதிரில்) பாண்டிச்சேரி-605 001
தஞ்சாவூர்	:	எண் : 2 & 3, முதல் மாடி, ஜி. ஏ. கனல் ரோடு, தஞ்சாவூர்-613 001 போன் : 1626
திருவண்ணாமலை	:	14/A, ஆனைக்கட்டி தெரு, திருவண்ணாமலை-606 601 போன் : 483
பட்டுக்கோட்டை	:	9-A, தலையாரி தெரு, பட்டுக்கோட்டை-614 601 போன் : 453

CHARI

பணத்தை விழுங்கலாமா?

● மயில் வாகனனின் சந்நிதியில் குழந்தையைக் கிடத்தி, பெற்ற தாய் அடைந்த ஆனந்தத்தை நானும் அடையச் செய்து விட்டார் ஆனந்திதன் கட்டுரை மூலம்.
சென்னை-5 — ச. ருக்மிணி

● கமகமா பகுதியை ரசித்து (ருசித்து) படித்ததினால் சிரித்துச் சிரித்து வயிற்று வலியே வந்துவிட்டது.
திருநெல்வேலி- — எஸ். கணேசன்

● திரைப்படக் கல்லூரி, ஓவியக் கல்லூரிகளில் சேருவதற்கான விவரங்களைத் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொன்னதற்கு நன்றி.
கோவை-1 — ஜி. ஜோதிமணி

● காந்திஜி விரும்பிய 'வைஷ்ணவ ஜனதோ' பாடலுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து வரும் நூற்றாண்டு கொண்ட மாமனிதர் ரவிசங்கர் மகராஜ் பற்றிய குறிப்பைப் படித்தேன். குஜராத் மாநிலம் பற்றிய இனிய செய்திகளை உள்ளடக்கி ஓர் அரிய பொக்கிஷத்தை அளித்து விட்டீர்கள்!
சென்னை- 5 — வி. ச. வாசுதேவன்

● காவியச் சொல்லழகும், கற்பனை நயமும் மிகுந்து இன்பத்தேனுய் நம் நெஞ்சங்களை நிறைவிக்கிறது 'வேங்கை வனம்'.
இட்டக்குடி — மாணூரர் மைந்தன்

● குஜராத் மாநில முதல்வர் திரு மாதவ்ஸி அவர்களின் வாழ்த்துச் செய்தியில் தமிழகத்தையும் தமிழர்களையும் மதிப்பளித்துப் பாராட்டியுள்ளது, அவரின் அடக்க உணர்வுக்கும், மற்றவர்களை மதிக்கும் தன்மைக்கும் ஓர் எடுத்துக்காட்டு.
திருச்சி-3 — எம். ஆர். பி. கணேஷ்

● பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டும் பணி செய்த தமிழ் மாநிலத்தை மறக்காமல் பொது நலத் தொண்டு ஆற்றும் பட்வாரியின் பணி போற்றத் தக்கது.
சென்னை-45 — கணபதி சுப்பிரமணியம்

● 'லஞ்ச ஊழலில் உலக சாதனை' படித்து மனம் மிக வேதனை அடைந்தது. அரசுடைமையாக்கப்பட்ட பாங்குகளைப் பற்றிய அப்பட்டமான உண்மைகளை பாங்காக உணர்த்தி விட்டீர்கள்.
வளவனூர்-8 — சி. ஆர். நாகராஜன்

● நான் அமெரிக்காவில் ஒரு அசாதாரண இருதயச் சிகிச்சைக்கு சுமார் 2.5 லட்சம் செலவில் உட்பட வேண்டி இருப்பதால், தரும சிந்தனை உள்ள தனி நபர்களையும் நிறுவனங்களையும் தாராள பொருளுதவிசெய்து எனக்கு உதவும்படி வேண்டுகிறேன். உதவித் தொகையைச் சென்னையில் மாற்றக் கூடிய டிமாண்ட் டிராப்டாக ''கவர்னர் லயன்ஸ் கிளப் a/c சுந்தரேசன்'' என்ற பெயருக்கு வாங்கி அதை ஜூன் 15ந் தேதிக்கு முன்பாகக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்ப வேண்டுகிறேன்:

லயன் டாக்டர் ரவீந்தர்நாத், கவர்னர்—லயன்ஸ் கிளப் Dt324-A1 212, செக்ரடேரியட் காலனி, அம்பத்தூர், சென்னை-53.
சென்னை-17 — சுந்தரேசன்

● எனது நண்பர் ஒருவர் இரண்டு டிக்கெட்களை 11—7—83 பயணத்திற்குத் திருப்பதியிலிருந்து கோவைக்கு ரயில் எண் 132ல் பதிவு செய்திருந்தார். ரயில் தாமதம் எப்பொழுது வரும் என்றே கூற முடியாத நிலை. எனவே முறைப்படி அங்கிருந்த ஸ்டேஷன் மாஸ்டரிடம் காட்டி உரிய பதிவீடுகளைப் பெற்றுப் பணத்தைத் திரும்பப் பெற அனுப்ப வேண்டிய படிமத்துடன் (நமூனா) செகந்திராபாத்தில் உள்ள 'தெற்கு மைய ரயில்வே அதிகாரி – திரும்பப் பெறல்' என்பவருக்குப் பதிவஞ்சலில் அனுப்பி, பெற்றுக்கொண்டதற்கான ரசீதும் வந்தது. ஆனால் பணம்? 9 மாதங்களாகியும் சுமார் 100 ரூபாய் அளவுள்ள தொகை இன்னும் வந்து சேர்ந்தபாடில்லை.

சுகமான பயணங்களுக்கு ரயில்வே நிர்வாகம் உதவ முன்வராவிட்டாலும் பணத்தை விழுங்கும் இயந்திரம் போல் இயங்குவது ஏனோ?
கோயம்புத்தூர் — எஸ். திருமலை

(கடைசிக் கடிதம் பரிசு பெறுகிறது)




பஞ்சாப்
கலவரங்கள்
எதிர்க்
கட்சிகள்
மீது


அ.தி.மு.க.வுடன் (இ)காங்கிரஸ்
உறவு இந்தத் தேர்தலுடன்
முடியாது மேலும் நீடிக்கும்! —
ஆர்.வி


இந்தோட போகலே! மறுபடியும் இந்நாலுமாசம்
கழிச்சு ஒரு கை பார்ப்போம்!

கல்கி



1984 மே 27
மலர் : 42 இதழ் : 43
ரக்தாக்ஷி வைகாசி 14



தேர்தல் ஸ்டண்ட்!

தேர்தல் முடிவுகள் என்னவாயினும் சரி, இந்த உபதேர்தல்களின் போது ஆளும் கட்சித் தலைவர்கள் நடந்து கொண்ட விதம் அவர்களுக்குப் பெருமை சேர்ப்பதாக இல்லை.

ஆளும் கட்சிகள் ஒருபுறம், எதிர்க் கட்சிகள் ஒருபுறமாகக் கூட்டணி அமைத்துள்ள இந்தப் புதிய ஏற்பாட்டினால் இதுவரை நிலவி வந்த ஒரு முரண்பாடு நீங்கி, இயற்கை விதிகளின்படி இனம் இனத்தோடு சேர்ந்திருப்பது உண்மைதான். அதே நேரத்தில் மத்தியிலும் மாநிலத்திலும் ஆளும் கட்சிகள் கூட்டணியில் இணை சேர்ந்ததும் முன்னெப்போதையும் விட அவை துணிவு பெற்றுத் தகாத முறையில் நடந்து கொள்வதும் மெய்யே.

ஆட்சியிலிருப்போர் மக்களின் வரிப் பணத்தைக் கொண்டு அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்கிறார்கள். இதை யெல்லாம் அந்தக் கட்சியின் சாதனைகள் போலவும் முதல்வர் ஏதோ பெரிய மனசு பண்ணி மக்கள் மீது கருணை கொண்டு அவர்களுக்குத் தான தர்மங்கள் செய்தது போலவும் பிரசாரம் செய்வது தவறு எனில் தேர்தல் சமயத்தில் இப்படிப் பறைசாற்றிக் கொள்வது மாபெரும் அநீதி. இத்தகைய வாய்ப்பு எதிர்க் கட்சியினருக்குக் கிடைக்கவே வழியில்லை என்பதை எண்ணினால் இது எப்பேர்ப்பட்ட மோசடி என்பது புரியும். இதை ராஜாஜி பல தடவை எடுத்துக் கூறியுள்ளார். தேர்தல் கமிஷனும் சமீப காலமாகத்தான் இதை உணர்ந்து இவ்வாறு 'செய்யலாகாது என்று சில விதிமுறைகளை உருவாக்கியது. ஆனாலும் ஆட்சியில் இருப்போர் மிகத் தந்திரமாக இந்த விதிமுறைகளை மீற வழி காண்பது விசனத்துக்குரியது. பிரபல நாளிதழ்களில் தேர்தல் சமயத்தில் வெளியாகும் முழுப் பக்க, இரு பக்க விளம்பரங்கள் இதையே கட்டிக் காட்டுகின்றன. பல்வேறு அரசு இலாகாக்கள் முதல்வர் மற்றும் அமைச்சர்களின் படங்களுடன் ''சாதனை''களை ஏராளமான பொருட் செலவில் (வரிப் பணம்) விளம்பரப் படுத்துகின்றன. தேர்தல் நெருங்கும்போது- இப்படிச் செய்வது வடிகட்டின அதிகார துஷ்பிரயோகமே.

கட்சிக்கும் ஆட்சிக்கும் இடையே வித்தியாசமே இல்லாமல் போய் விட்டது என்பதற்கு மற்றொரு எடுத்துக்காட்டு, தொகுதிகளில் தேர்தல் சமயத்தில் அதிகாரிகள் புடைசூழ முகாமிடும் அமைச்சர்கள் மக்களின் கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றி வைப்பதாகும்.

'சத்துணவு பெறும் எழுபது லட்சம் குழந்தைகளுக்குச் சீருடை.' என்று தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் முதல்வர் ஆசை காட்டியதானது நமது மனக் கசப்பை அதிகரிக்கவே செய்கிறது. இரு வருடங்களுக்கு முன்பே இது பற்றி முதல்வர் பேசியிருந்தாலும் இதுவரை ஒன்றும் செய்யாதிருந்து இப்போது மறுபடி தூண்டில் போடுவது தேர்தல் ஸ்டண்ட்தான். நாளை இத்திட்டம் நிறைவேற்றப் பட்டாலும் கூட இன்று நடப்பது தேர்தல் ஸ்டண்ட் என்பதில் ஐயமில்லை. மேலும் இது போன்ற உற்பத்திக்கு உதவாத இனங்களில் அரசு செலவினங்களை மென்மேலும் அதிகரித்துக் கொண்டே போவதும் அதற்காக வரிகளைக் கூட்டிக் கொண்டே இருப்பதும் அப்பாவிப் பாமரரை ஏமாற்றி வோட்டுக்களைப் பெற்றுத் தரலாம்; உடும்புப் பிடியாக ஆட்சியைப் பற்றிக்கொள்ளவும் உதவலாம். ஆனால் இதுபோன்ற திட்டங்களால் ஏழைமை ஒழியாது; தமிழகம் பொருளாதார முன்னேற்றமும் பெறாது.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

இலக்கியப் பரிவர்த்தனை



○ கல்கி



○ சுப்பிரமணியம்

குஜராத்தி ⇄ தமிழ்

குஜராத்தி மொழியிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்ட நூல்கள் பல நேரடியாக குஜராத்தியிலிருந்து வந்தவை யில்லை. ஹிந்தி அல்லது ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை. என்றாலும் இது மிருதியான நிலையிலும் தமிழிலிருந்து குஜராத்திக்கு மொழிபெயர்க்கப்பட்டவை குறைவாகவும் இருப்பதை மேற்போக்கான பார்வையிலேயே காண முடிகிறது.

சாகித்திய அகாடமி இத்துறையில் பெரும் தொண்டாற்றி வருகின்றது. தனி நிலையில் பங்காற்றிய எழுத்தாளர்கள் பலர்.

தமிழாக்கங்களுள் அண்ணல் காந்தியின் வாழ்க்கையும் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் பெரும் இடத்தைப் பெறுகின்றன. அவரது வாழ்க்கை வரலாறு பலரால் பல பெயர்களில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

எல் சரிதம் என கா. ஸ்ரீ. ஸ்ரீ.யும்

சத்திய சோதனை எனக் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தியும் மகாத்மா காந்திஜியின் சுய சரிதம் என எல். கிருஷ்ணசாமி பாரதியும் மகாத்மா காந்தியின் சுய சரிதை என ரா. வேங்கடராஜுலுவும் மொழிபெயர்த்துள்ளனர். மேலும் அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகள்,

ஏ. ராமஸ்வாமி – காந்தி வாழ்க்கைச் சித்திரம் எனவும்

ஹரிஹர சர்மா – காந்திஜியின் நினைவுகள் எனவும், பாப்பாவின் காந்தி எனவும்

த. நா. குமாரசுவாமி – பாபுஜியின் நினைவுக் கோவை எனவும்

இராம. கோபிநாதன் – விநோபா கண்ட காந்தி எனவும்

மொழிபெயர்ப்பில் பெயர் தாங்கி நிற்கின்றன.

'உத்தம வாழ்க்கை'; 'கீதை போதனைகள்' காந்தியும் மார்க்ஸும் என அவர்தம் கடிதங்களும், உரைகளும் தலைப்புப் பெற்றுத் தமிழில் வெளிவந்துள்ளன.

ஸ்ரீமத் பாகவத ரகசியம் எனச் செய்யுளை ஹரிஹர சர்மா மொழிபெயர்த்துள்ளார். இன்னும் சில வகைகளை,

இல்லறமும் பிரம்மச்சரியமும் எனச் சங்கு சுப்பிரமணியமும்

கடலில் ஒளி என தட்சிணாமூர்த்தியும்

சப்த நதிகள் என சீனிவாசச் சாரியாவும்

முராரி பாபுவின் சொற்பொழிவை கலா கே. தாக்கரும் தமிழுக்குக் கொடுத்துள்ளனர்.

இவற்றுடன் தற்கால இலக்கிய வகையாம் நாவலும் சிறுகதைகளும் தமிழ் வடிவம் பெற்று வருகின்றன. திருமதி சரஸ்வதி ராமநாத் இவ்வகையில் சிறப்பிடம் பெறுவது குறிப்பிடத் தக்கது.

நாவல்	மொழிபெயர்ப்பாளர்
சோரட், உனது பெருகும் வெள்ளம்	—எஸ். கிருஷ்ணமூர்த்தி
ராஜ நர்த்தகி	—சரஸ்வதி ராம்நாத்

○ கா ஸ்ரீ ஸ்ரீ



○ சரஸ்வதி ராம்நாத்



○ நவநீத மதுராஸி



கூர்ஜரத்தில்செல்வன் —சரஸ்வதிராம்நாத்

ஜெய சோமனாத் —சரஸ்வதி ராம்நாத்

வாழ்க்கை ஓர் நாடகம்—துளசிஜெயராமன்

மிருணால்வதி —எச். வி. வெங்கட்ராம்

வெள்ளைக் கறை —கலா கே. தாக்கர்

குஜராத்திச் சிறுகதைகள் ஆர். விஜயலட்சுமி, டி. கே. ஜெயராமன், ஏ. ஜி. எத்திராஜுலு போன்றவர்களால் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. இவ்வகையில் பெண்கள் பெரும் பங்கு கொண்டிருப்பதை நோக்க முடிகின்றது.

தமிழிலிருந்து திருக்குறள், பாரதியின் பாடல்கள் குஜராத்தி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ராஜாஜியின் உரைகளும், சிறுகதைகளும் சக்கரவர்த்தித் திருமகனும் குஜராத்தி இலக்கியத்திற்கு அளிக்கப்பட்டுள்ளன.

நாவல் மொழிபெயர்ப்பில் நவநீத் மதராசி என்பவர் பெரும் பங்கினைப் பெறுகின்றார். அவரால்,

அகிலனின் பொன் மலர், ஒரேநெறி,
எங்கே போகிறோம் என்பனவும்
நா. பார்த்தசாரதியின் சமுதாய வீதியும்
மு. வரதராசனாரின் கரித் துண்டும்
கூர்ஜர மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

மதுரே என்பவர் கல்கியின் அலை ஓசையை குஜராத்தியில் மொழிபெயர்த்துள்ளார்.

-கலாதாக்கர்

மகாத்மாவின் நினைவாக



பிறந்தார் வளர்ந்தார்

ராஜ்கோட்டில் காந்திஜி படித்த ஆல்ஃபிரட் பள்ளிக்கூடம், காந்தி வித்யாலயாவாக அவர் பெயரில் இயங்குகிறது.

1880ல் கட்டப்பட்ட 'தேலா'தான் காந்திஜி வசித்த வீடு. அவர் தகப்பனார் கரம் சந்த் காந்தி, ராஜ்கோட் சமஸ்தான திவானாக இருந்த போது கட்டியது. காந்திஜி படிப்பதற்கு உபயோகித்த அறை அரிச்சந்திரா நாடகம் பார்த்த பிறகு இனி உண்மையே பேசுவது என்று உறுதி பூண்ட இடம், தகப்பனார் நோய்வாய்ப்பட்டுப் படுத்த போது சிசுருஷை செய்த இடம் என்று ஒவ்வொரு அறையாகக் காண்பித்தார்கள்.

1920ல் காந்திஜியின் குடும்பம் பொருளாதார நெருக்கடியில் சிக்கியபோது இதை விற்க நேர்ந்ததாம். தமக்கு இந்த வீட்டின் பேரில் எந்த வித பாத்தியதையும் இல்லை என்று மகாத்மா எழுதிக் கொடுத்ததைக் கண்ணாடிச் சட்டத்தில் வைத்திருக்கிறார்கள். 1948ல் இதை அரசாங்கமே வாங்கி ஒரு நினைவுச் சின்னமாக நிர்வகித்து வருகிறது. வாழ்க்கை நிகழ்ச்சிகள் படங்களாகவும், புத்தகங்களாகவும் ஒவ்வொரு அறையிலும் நிறைந்து கிடக்கின்றன. முன் வராந்தாவில் ஓர் ஆசிரியை பாடங்கள் தயாரித்துக் கொண்டிருந்தார்.

''இங்கே இப்போது என்ன செய்கிறீர்கள்?''

''குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் நடத்துகிறோம். பெண்களுக்கு எம்ப்ராய்டரி வகுப்புகள். கைத்தொழில் பயிற்சிகள். மத போதனை வகுப்புகள். நூலகம் எல்லாம் நடத்துகிறோம். குடிசைத் தொழில் முறையில் பப்படம், மசாலா பொடிகள் தயாரிக்கப் பயிற்சி அளிக்கிறோம்!''

போர்பந்தரில் காந்திஜி பிறந்த இடத்தை 'கீர்த்தி மந்திர்' என்று பெயரிட்டு ஒரு நினைவு இல்லமாக மாற்றி அமைத்திருக்கிறார்கள். குஜராத்தின் செல்வந்தர் ஒருவர் இந்த நினைவகத்தை நிறுவ ஏராளமான நன்கொடை கொடுத்திருக்கிறார். வீட்டை அன்று எப்படி இருந்ததோ அப்படியே வைத்துச் சேதாரங்களை மட்டும் சீராக்கி வைத்திருக்கிறார்கள். அந்த அதிகாலை வேளையிலும் நினைவில்லம் திறந்திருந்தது.

பாரதி அன்பரான புகழ் பெற்ற தமிழ் எழுத்தாளர்

இங்கிலாந்து பிரதம மந்திரியாக இருந்த சேம்பர்லின் ஒரு விருந்துக்குச் சென்றார். விருந்து நடைபெற்று, எல்லோரும் காப்பி அருந்திக்கொண்டு உல்லாசமாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள். தலைமை வகித்த மேயர், பிரதம மந்திரியின் அருகே குனிந்து, ''விருந்தாளிகள் இன்னும் கொஞ்ச நேரம் சந்தோஷமாய் இருக்கலாமா? அல்லது தாங்கள் இப்போதே பேச ஆரம்பித்து விடுகிறீர்களா?'' என்று கேட்டார்.


—ஏ. கே. நாசர்.



● குஜராத்தியர்களின் உணவில் அதிகம் இனிப்பு வகைகள் இருக்கும். சாப்பாட்டின்போது ஒவ்வொரு அயிட்டமும் மூன்று அல்லது நான்கு முறை பந்தியில் வரும்; ஆனால் ஒரு முறை வருவது சாதம்தான்! விருந்தில் கடைசியில் சிறிது சாதம் போடுவார்கள்.

தகவல்: டி. மாணிக்கவாசகம்.





வாழ்வித்தார்

ஒருவர் சொன்ன சம்பவம் அப்போது நினைவு வந்தது. எட்டயபுரத்துக்குப் பாரதி நினைவகத்தைக் காண ரஷ்யத் தூதுக் கோஷ்டி ஒன்று வந்ததாம். அவர்களை அழைத்துக் கொண்டு அங்கு போனபோது நினைவகம் திறந்திருக்கவே இல்லையாம். வெகு அவமானமாகப் போயிற்று என்றார். நினைவகம் கட்டிவிட்டு நினைவை அகற்றிவிட்டால் என்ன பயன்?

காந்திஜியின் நினைவாக 'காந்தி ஸ்மிருதி' என்று பவநகரிலும் ஓர் ஆலயம் எழுப்பி அவரது வாழ்க்கையைப் புகைப் படங்களில் பார்க்க வகை செய்திருக்கிறார்கள்.

ஆமதாபாத்தில 1917ல் சபர்மதி ஆற்றங் கரையில் துவங்கிய சத்தியாக்கிரக ஆசிரமம்தான் புகழ் பெற்ற சபர்மதி ஆசிரமம்.

கல் தரை; ஆனால் மொசெய்க் தோற்றது. மேலே குடில் போன்ற அமைப்புக்குப் போடுகிற மாதிரியான சாய்வான கூரை. ஆனால் மரச் சட்டங்களையே உபயோகித்து நவீனமாகக் கட்டியிருக்கிறார்கள். ஒவ்வோர் அறையிலும் மகாத்மாவின் வாழ்க்கை தொடர்பான பெரிய பெரிய புகைப் படங்கள் - ஹே ராம்வரை.

அவரைப் பற்றிய வெளிநாட்டுப் பத்திரிகைக் கார்டூன்கள், நூல்கள், விற்பனைக்காக வெளியீடுகள் வைத்திருக்கிறார்கள். அவர் நினைவாகப் பல நாடுகளும் வெளியிட்ட தபால் தலைகள் அவருக்கு வெறுமனே 'காந்தி – இந்தியா' என்று மிகச் சுருக்கமாக முகவரி எழுதப்பட்ட கடிதங்கள் எல்லாம் மிகப் பத்திரமாகப் பாதுகாக்கப் படுகின்றன இங்கே; மகாத்மாவின் வாழ்க்கையை மாலையில் ஒலி - ஒளி காட்சியாகக் காண்பிக்கிறார்கள்.

அவர் இருந்து பல அரசியல் விவாதங்கள் புரிந்த 'ஹிருதயகுஞ்ச்' குடிலில், உள்ளே அவர் உபயோகித்த சர்க்கா, பாதரட்சை எல்லாம் காட்சிப் பொருளாக இருக்கின்றன.

எல்லாம் சரி; ஆனால் பலரும் விஜயம் செய்யும் இந்தப் புனித இடமான சபர்மதி ஆசிரமத்தில் டாய்லெட் இன்னும் கொஞ்சம் சுத்தமாக – வாடை இல்லாமல் – இருக்கலாம் என்று நினைக்கத் தோன்றியது. மகாத்மா இருந்தால் இப்படி இருக்க அனுமதிக்கவே மாட்டார். அவரே சுத்தம் செய்யக் கிளம்பி விடுவார்!



புத்தகம் படிப்பதற்காக நூல் நிலையத்துக்குச் சென்ற ஒருவர் லட்சாதிபதியாகி யுள்ளார். 'ஜான் குயின்' என்ற இத்தாலியத் தொழிலதிபர். 'தி ஹவுஸ் சீக்ரெட்' என்ற முழு நாவலை எழுதினார். ஆனால் அது மக்கள் மத்தியில் அவ்வளவு பிரபலமாகவில்லை. இதனால் மனமுடைந்து போன அவர் ஒரு பிரதியின் கடைசிப் பக்கத்தில் கதையின் முடிவைப் பாராட்ட நினைப்பவர்களை இந்த விலாசத்தில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் என்று எழுதிப் புத்தகத்தை ஒரு நூல் நிலையத்தில் வைத்துவிட்டார். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு சென்ற வருடம் 'மார்க் மில்லர்' என்ற பேராசிரியர் யதார்த்தமாக அந்த நாவலை முழுமையாகப் படித்து விட்டார். கதையின் முடிவும் அவருக்குப் பிடித்து விட்டது. எனவே அதில் குறிப்பிட்டிருந்தபடி தொழிலதிபரைச் சந்தித்தார். தொழிலதிபர் தம்முடைய சொத்தில் மூன்றில் ஒரு பகுதியை அவருக்கு எழுதி வைத்து விட்டார். ஒரு நாவலைப் படித்ததால் மார்க் மில்லருக்குக் கிடைத்தது 67 லட்சம் ரூபாய்!

தகவல்: ஜா. ரவி

ஆதாரம்: வானொலி



குதூகல குஜராத்



○ மகிழ்ச்சிமிக்க ஒரு சௌராஷ்டிரா விவசாயி

வாரம் இரண்டுநாட்கள் மட்டுமே செல்லும்நவஜீவன் எக்ஸ்பிரஸில் இரண்டு நாள் பயணத்துக்குப் பிறகு, வண்டி நின்றபின் நீங்கள் காலை வைக்குமிடம்: ஆமதாபாத். 1411ல் குஜராத்துக்கு வந்து தலைநகர் ஸ்தாபித்த சுல்தான் அஹமத்ஷா பெயரே நகருக்கும் பெயராயிற்று. ஆமதாபாத் பஞ்சாலைகள் இன்று பிரசித்தி என்றாலும் முதன் முதலாக இங்கே உருவானயில் 1861ல். பார்க்க வேண்டியஇடங்கள்? அசையும் தூண்கள் சபர்மதி ஆசிரமம், கைவினைஞர்களின் ஷ்ரேயஸ் மியூசியம். வேச்சார் பாத்திர மியூஸியம், காலிகோ துணி வகைகள் மியூசியம், கன்கரியா ஏரி, அறுபது கிலோமீட்டர் தூரத்திலுள்ள நள்—சரோவர் பறவைகள் சரணாலயம், பல கோவில்கள், மசூதிகள்..

சற்று இருங்கள். ஆமதாபாத்வாசியான அ. வெற்றிவேல் ஒரு தகவல் சொல்கிறார், கவனிப்போம்.

'ஆலைகளின் நகரம் ஆமதாபாத். இந்த ஆலைகளை நம்பிக் கிட்டத்தட்ட அறுபதாயிரம் தமிழர்கள் உள்ளனர். உடல்உழைப்பை மட்டுமே மூலதனமாகக் கொண்டு குடியேறிய இவர்களுடன், உயர்ந்த படிப்பு—பதவியுடன் குடியேறிய தமிழர்களும் அதிகம். வர்க்க பேதம் இன்றி இரு சாராரும் இணைந்து எழுப்பியுள்ள முருகன் கோயிலும், முத்துமாரியம்மன் கோயிலும், அவற்றுக்கு இவர்கள் விழா எடுத்துச் சிறப்பிக்கும் முறையும் வரலாற்றில் பதிக்கப் படவேண்டியவை.

'சபர்மதி, பாபு நகர், அம்ரய்வாடி போன்ற பகுதிகளில் வசிக்கும் தமிழர்கள் வசதிக்கு ஏற்ப அந்தந்த இடங்களிலேயே உருவாக்கியுள்ள தமிழ் தொடக்கப் பள்ளிகளும் கோக்ரா பகுதியில் ஒரு தமிழ் மேல்நிலைப் பள்ளியும் இவர்களின் தாய் மொழிப் பற்றுக்குச் சான்று.

'தமிழ் நாடகம், திரைப் படம், வார — மாத இதழ் போன்ற எல்லா வசதிகளுடன் சென்னையில் இருப்பது போன்ற ஒரு வட்டாரச் சூழ்நிலையில் இங்கு அமைந்துள்ளது மணிநகர்.

பரோடா (வடோதரா)

ஆமதாபாத்திலிருந்து 120 கிலோ மீட்டர் தூரத்தில் பம்பாய் போகும் பாதையில் அமைந்திருக்கும் நகரம். பாதையில் வெகு தூரத்துக்குச் சாலையின் இரு பக்கங்களிலும் நிழலைக்கொடுத்துக் கொண்டிருக்கும் மரங்கள்.

கெய்க்வாட் ஆட்சிகாலத்தில் கலை, கல்வி, கலாசாரத் துறைகளில் முன்னணியில் இருந்த நகரம்; இப்போது குஜராத்தின் தொழில் வளத்துக்கு உரமூட்டுகிறது. சாயாஜிராவ் பல்கலைக் கழக கட்டிடங்கள், மிருக காட்சி சாலை, பூங்கா, சர்தார் பட்டேல் ப்ளானடேரியம், மியூசியம், ஆர்ட் காலரி எல்லாம் சுற்றுலாப் பயணிகளைச் சுண்டி இழுக்கும் இடங்கள்...

ராஜ்கோட்டுக்குச் செல்லும் வழியெங்கும் கிட்டத்தட்ட இருபது டிராக்டர்களைப் பார்த்தோம். விவசாயக் குடும்பங்கள் சொந்த டிராக்டர்களில் சொகுசாகப் போய்க் கொண்டிருந்தன.

ராஜ்கோட்டில் குடிதண்ணீர் வெகு ருசி. ''லால்பரி ஏரி நகரிலிருந்து ஐந்து கி.மீ. தூரத்தில் இருக்கிறது. அங்



○ கிருஷ்ணரை வேடன் அம்பெய்த இடம்

○ நரசி மேத்தா நினைவகம்



இருந்துதான் நகருக்குக் குடி நண்ணீர் வருகிறது'' என்றுர்கள். லால்பரி ஏரி ஒரு சுற்றுலா ஸ்தலம் கூட.

ஜூபிலி பூங்கா, ஜனதா பூங்கா, தவிர பார்க்க வேண்டிய இடம் வாட்சன் மியூசியம். பிரிட்டிஷ் அரசுப் பிரதிநிதியாக இருந்த கர்னல் ஜான் வாட்சனின் பெயரில் (இன்னும் மாற்றப்படாமல்!) தொல்பொருள், பழங்கலைச் செல்வங்கள், நூல்களின் இருப்பிடமாகக் காட்சியளிக்கிறது.

ராஜ்கோட்டிலிருந்து மட்டும் ஏழு தினசரிகள் வெளியாகின்றன.

ஜாம்நகர் ராஜ்கோட்டிலிருந்து சுமார் 90 கிலோமீட்டர் பயணம். வழியில் பல இடங்களில் தார்ச் சாலை உருகி ஜாம் போலவே இருந்தது!



○ ருக்மணி கோயில்

ஜாம் நகரில் ஸோலேரியம் என்னும் சூரியக் கதிர் வீச்சு நிலையத்தில பலவகையான சரும நோய்கள், யானைக்கால் வியாதி எல்லாவற்றையும் சூரிய வெப்பத்தை ஆதாரமாகவைத்தே குணப்படுத்தி வந்தார்களாம். ''ஏன் இப்போது செயல்படவில்லை?'' 'இந்தச் சிகிச்சை முறையில் குணமடைய நீண்ட நாட்களாகின்றன. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இது பணியாற்றத் தொடங்கியபோது இதன் சேவை தேவையாக இருந்தது. இப்போது இல்லை!''

சூரியனின் கதிர் வீச்சுக்குத் தகுந்தாற்போல் வட்டமாகச் சுழலக் கூடிய கட்டிட அமைப்பை அந்தக் காலத்திலேயே அமைத்திருக்கிறார்கள்.

பார்க்க வேண்டிய இன்னொரு முக்கியமான இடம்—அழகான இடுகாடு. மானேக்பாய் முக்திதாம் என்கிறார்கள். இடுகாட்டுக்கு அழகென்ன வேண்டிக் கிடக்கிறது என்று கேட்கலாம். மனச் சாந்திக்குத்தான்! மகான்கள், ஞானிகளின் சிலைகளுடன் ஒரு பசுஞ் சோலையாகக் காட்சியளிக்கிறது இந்த இடம். எரியூட்டும் பொருட்களுக்கு, வசதியுள்ளவர்கள் பணம் கட்ட வேண்டும். வசதியில்லாதவர்களுக்கு இங்கேயுள்ள டிரஸ்ட் வகை செய்கிறது. ஒரு சடலம் எரிந்து கொண்டிருந்தது. கிரோசின் ஊற்றுகிற மாதிரி விறகுக் கட்டைகளிடையே நெய்யை ஊற்றுகிறார்கள்! இறந்தாலும் ஜாம் ஜாம் என்று ஜாம்நகர் இடுகாட்டில் எரிக்கப்படக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!

சென்னையிலும் இடுகாடுகளைப்பூங்காவாக அழகுணர்வோடுஅமைக்கலாமே என்று யோசனை சொல்ல ஆசைதான். இங்கே பூங்காவே இடுகாடு போலத் தானே அழுது வடிகிறது. என்று யாரேனும் கேட்டு விட்டால்?

துவாரகை ஜாம்நகரிலிருந்து நூற்று அறுபது கி.மீ. தூரத்தில் இருக்கிறது. துவாரகை கோயிலில் இரவு தரிசனம் எட்டரை வரை. சாதாரண நாளிலும் ஏராளமான பக்தர்கள் — உள்ளூர்க்காரர்கள் யாத்ரீகர்கள் என்று. எல்லா நடைகளிலும் கிருஷ்ண விக்ரகங்களே வெவ்வேறு பெயர்களில்.

லதா மங்கேஷ்கரின் மீரா பஜன்கள் கோயிலிலிருந்து காற்றினிலேவரும் கீதமாகக் கேட்டன.

ஆதி சங்கரர் ஸ்தாபித்த சாரதா பீடம் துவாரகையில் இருக்கிறது.

○ பாலமுருகன்



○ கிர்காட்டுச் சிங்கங்கள்



நாடகராஜாக்கள்

நா.காமராசன்



● பொய் முகம் சுமந்த ஒரு சமூகத்தின் எல்லாத் திரப்பினரும் மனசாட்சியின் சுய பலமும், பதாலை நோக்கப் பார்வையும் நொறுங்கிச் சிதறும் அழிவுப் பாதையில் நடை போடும் காலம் இது. காமமும், கொலை வெறியும் இலக்கிய உருவம் காட்ட... நமது இதிகாசங்களில் மட்டும் மிகப் பெரிய புனித வார்த்தைகளைப் பழைய நாணயங்களைச் சேகரிப்போரைப் போலச் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கிறோம்.

● நம்பிக்கையின் வளமான செல்வத்தை அளிக்கும் உணர்ச்சி செறிந்த ஒரிரு நிமிடங்களைக் கூட நாம் வாழ்வில் சந்திக்க நேரிடுவதில்லை. இங்கு அனைத்தும் அமைதியாக இருக்கிறது. உண்மையில் நன்மை எது என்பதையும் அவர்களின் உரிமைகளையும் மக்களுக்கு யார்தான் உணர்த்துவது? அரசியல் அறிவுக் குறைவும், அப்பாவித்தனத்தின் அதிகரிப்பும் நிரந்தரத் தன்மை பெற்றுவிட்டன. ஆனால் சிந்தனையில் கனிந்துள்ள சித்தாந்தம் அதி சரித்திரத்தின் போர்க் குணமும் உயிர்ச் சேதமும் இல்லாமல் செயல் வடிவம் பெறும் நாள் தன் வரவு கூறும் போக்கு தெரிகிறது.

● பொதுமக்களிடையே பொங்கி எழும் ஆர்வப் பெருக்கு வெறும் தேசியத் திருவிழாக்களைக் கொண்டாடுவதோடு இனி அடங்கிவிடாது.

● ஒரு புரட்சியின் முடிவில் எதிர்ப் புரட்சி தோன்றுவதை விட புதிய அமைப்புக்களின் செயல்பாடு தொடர்வதே சமூக விஞ்ஞானத்தின் பரிசோதனைச் சாலை முடிவாகும். வேதனைகளைத் தாங்கிக் கொண்டு போராடிய நமது முன்னோர்கள் நமக்காகப் பலவற்றை இழந்தார்கள். நாம் அவர்கள் உருவாக்கிய பொற்காலத்தையே இழந்து விட்டோம். ஆனால் இனிவரும் இளைய தலைமுறை நாடக ராஜாக்களை அனுமதிக்காது. அது நடைபாதை வாசிகளுக்கும் இடம் கூட்டும்.

போர்பந்தர்: குசேலருக்குக் கோயில் எங்காவது பார்த் . இருக்கிறீர்களோ? போர்பந்தர் நகரின் மையத்திலேயே இருக்கிறது அழகான கோயில். அவல்தான் பிரசாதம். குசேலருக்கு சுதாமா என்று இன்னொரு பெயர் உண்டே? அதனால் இவ்வூரைச் சுதாமாபுரி என்றும் சொல்கிறார்கள்.

ஜுனாகத்: பிரம்மாண்டமான பாறையில் அசோகர் பொறித்த பிரசாரங்கள் பத்திரமாய்ப் பாதுகாக்கப்படுகிறது. படிக்கிறதுதான் கஷ்டம். — பாலி மொழி! 'வைஷ்ணவ ஜனதோ' பாடிய நர்ஸி மேத்தாவின் இல்லம் இப்போது நினைவகமாகத் திகழ்கிறது. பல அதிசயச் செயல்கள் புரிந்த அவரது வாழ்க்கைச் சித்திரங்கள் இங்கே உண்ணத்தில் இருக்கின்றன.

கிர் காட்டுச் சிங்கங்கள் ஜுனாகத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும். கிட்டத்தட்ட இருநூறு சிங்கங்கள் இங்கே இருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

சோம்நாத்: இந்தியாவில் உள்ள பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களில் ஒன்று இந்த ஆலயத்தில் இருக்கிறது. கடலின் அலையோசை பின்னணி இசைக்கக் கம்பீரமாக நிற்கிறது சோமநாத் ஆலயம். இதன் டிரஸ்டி திரு மொரார்ஜி தேசாயாம்.

இங்கே பார்க்க வேண்டிய இன்னொர் விஷயம்: கிருஷ்ண பரமாத்மாவை வேடன் ஒருவன் தவறுதலாக அம்பு எய்து கொன்ற இடம். தேஹோத்சர்க் என்கின்றனர். எந்த மரத்தின் மீது அவர் அப்போது அமர்ந்திருந்தாரோ அதை அப்படியே பாதுகாப்போடு வைத்து, அருகில் கோயிலும் கட்டி விருக்கிறார்கள்.

இப்போது...கோத்ரெஜ் உருவாக்கியுள்ள புதிய சோப்
உங்கள் கவனிப்புக்கிணையாக சருமத்தைக் காத்திடும்



Godrej நிமின்

தூய வேப்பெண்ணெயின்
இயற்கை குணம் கொண்ட சோப்.

நீம், மார்கோஸா எனப்படும் வேப்பிலை சரும தொல்லைகளை விரட்ட இயற்கை தந்த வரப்பிரசாதம். தொடர்ந்து வேப்பிலை உபயோகித்தால் உங்கள் சருமம் பளபளப்பாகவும் தெளிவாகவும் விளங்கும்.

கோத்ரெஜ், தூய வேப்பெண்ணெயை நிமின் சோப்பில் கலந்துள்ளது. உங்கள் சருமத் தொல்லைகளை குளித்து ஒழிக்க ஒரு புத்துணர்ச்சியூட்டும் டாய்லெட் சோப். கோத்ரெஜ் தரும் நிமின் வெகுவாக நீடித்து நிற்கும். ஏனெனில் மற்ற வேப்பிலை சோப்புகளைப் போல கொள கொளவென மாறுவதில்லை.

சருமத் தொல்லைகளை அகற்றிடுக
ஆரோக்கியமும் இயற்கைப் பொலிவும் பெற்றிடுக.



வேங்கை வனம்

கோவி. மணிசேகரன்

அத்தியாயம் 5

சிலையோ சித்திரமோ?

விடியல் பொழுது சூரிய விலாசத்தைத் தேடியலைகிற நேரத்தில்....

வேங்கை மார்பனும் அவனுடன் புறப்பட்ட வீரர்களும் வேக வேகமாகப் பயணம் செய்து கானப்பேர் திருநகரை அடைந்து கொண்டிருந்தார்கள்.

நெஞ்சில் திருமேனி செருகிய கட்டியின் ரணத்தால் கசிந்து கொண்டிருந்த ஏமாற்ற ரத்தத் துளிகள் ஒருபுறமிருக்க...

அந்தக் கோபத்தின் காரணமாகப் பாண்டிய மன்னர் உக்கிரப் பெருவழுதியிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல், இரவு விருந்தைப் புறக்கணித்துவிட்டுப் புறப்பட்டு விட்டதை நினைக்கிறபோது....

என்ன செய்வது? பொங்கி வந்த ஆத்திரமும் அதனால் பிரவகித்த ஆவேசமும் இன்னமும் அடங்கவில்லை.

'மூன்றாவது கண்ணை முழுமையாகப் பயன்படுத்து வேங்கை மார்பா' என்பது போல வைகறையின் ஞானக் கண் கிழக்குத் திசையில் பொன்னாய் மலர்ந்து கொண்டிருந்தது.

குதிரைகள் கோட்டையை நெருங்குகின்றன.

தங்கள் வேந்தர் திரும்பி விட்டார் என்பதனை அறிவிக்கக் கோட்டை முரசம் முழங்குகிறது.

பிரும்மாண்டமான அதன் இரும்புக் கதவங்கள் பெருத்த ஓசையுடன் திறந்து படுகின்றன.

அகன்ற அகழியில் நீண்ட பாலத்தை இறக்குகிறார்கள்.

மீனக் கொடி தாங்கிய வீரர்கள் உள்ளே நுழைய, நடுநாயகமாக வேங்கை மார்பன், தனது நீலப் புரவியை லாகவமாகச் செலுத்திக் கோட்டைக்குள் பிரவேசிக்கிறான்.

அந்த அதிகாலை நேரத்தில் துயிலில் கனவைத் துகிலுரித்துக் கொண்டிருந்த தியாகவல்லி, முரசொலி கேட்டு முகமலர எழுந்து கொள்ளுகிறாள்.

வேந்தர் வருகிறாரா? இதற்குள்ளாகவா?

அவளுக்கு மட்டுமல்லாது அனைவருக்குமே இந்தக் கேள்விக் குறி.

அரண்மனையடைந்த வேங்கை மார்பன் நேரே தனதறை நாடிச் சென்று ஓய்வெடுக்க முடிவு செய்தான்.

வெளியே பணி மகளிர் உத்தரவுக் தவமியற்றுகிறார்கள்.

அவனை அன்புடன் தேற்ற யார் இருக்கிறார்கள்?

இரண்டாண்டுகட்கு முன்னம் தான் தந்தையார் உயிர் துறந்தார். தாயார் உடன் கட்டை ஏறினாள்.

தனக்கு ஒரு துணை திருமேனி என்று தவமிருக்க அது சலைந்து தனனுக்கு ஒரு துணை தானென்று தவிக்க நேரிட்டு விட்டதே!

மனச் சுமைகள் ஏறி மிதிக்க மஞ்சத்தில் சாய்கிறான்.

தூக்கமா வரும்?

துயரங்கள் சிந்தனையைத் துளைத்துச் சரம் கோர்க்கின்றன.



மெல்லத் திரும்புகிறான் வேங்கை மார்பன். கண்கள் குளத்தில் நீந்திக் கொண்டிருக்கின்றன.

''தேறல் பழக்கம் எப்போதிருந்து?''

மறுமொழி இல்லை.

''தவறாக எண்ண வேண்டாம் மன்னா! எடுத்துச் சொல்வதன் அவசியம் அமைச்சனுக்கு உண்டு. தேறல் அவசியம்தானா?''

நுனி மூக்கை விரலால் உரசிக்கொண்டான் வேங்கை மார்பன். ''இனி எனக்கு எது அவசியம், எது அவசியமில்லை என்றாகி விட்டது. என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம். எனது ஓய்வுக்குப் பிறகு நானே நடந்ததை எடுத்துச் சொல்வேன். நீங்கள் போகலாம். என் அனுமதியின்றி யா...ரும் உள்ளே நுழையக் கூடாது.''

ஏதோ மலையனைய துன்பியல் ஏற்பட்டிருக்க வேண்டும். எனவேதான் மன்னர் மனம் பேதலித்து மாறுபட்டுக் காண்கிறார் என்றளவில் புரிந்து கொண்டு விடைபெற்றுச் சென்றார் அமைச்சர் குறுமலைக் கிழார்.

பழக்கமில்லாப் பழக்கத்தைப் பரிதாபமுடன் நோக்குகிறான் வேங்கை மார்பன்.

வேறு வழியில்லை.

எத்தனை நாட்களுக்குத்தான் துக்கத்தில் உழல்வது? தூக்கமின்றிக் கழல்வது?

யவனத் தேறலைத் தங்கக் குவளையில் நிரப்புகிறான்.

தவறு என்று தெரிந்திருந்தும், இன்று அமுதமாகத் தோன்றுவது நாளை விஷமாக மாறும் என்பது புரிந்திருந்தும்.

திருமேனி, திருமேனி, திருமேனி...

அழைப்போசை எழுப்புகிறான்.

பணிப் பெண்களின் தலைவியான கங்கா வந்து நிற்கிறாள்.

''கங்கா! அமைச்சரிடம் சொல்லி எங்கிருந்தாலும் யவனத் தேறலைக் கொண்டு வா! யவனர் வீதியில் அது நிச்சயம் கிடைக்கும். விரைந்து வந்தாக வேண்டும்.''

கலக்கத்தோடு கங்கா வெளியேறுகிறாள். மதுரை சென்று இப்பழக்கத்தை மேற்கொண்டு விட்டாரா?

ஒரு நாழிகைப் போதில் ஓராயிரம் நினைவுகளை நெஞ்சில் தேக்கியும், போக்கியும் தடுமாறியும், தொடையில் அடிக்கடி குத்தியும் கொள்கிறான், வேங்கை மார்பன்.

....விதி எப்படி விளையாடி விட்டது?

அரண்மனைப் பணியாளன் யவனத் தேறல் எடுத்து வர, உடன் காணப்பேரமைச்சர் குறுமலைக் கிழார் அறையினுள் நுழைகிறார்.

தேறலை ஒரு பக்கமாக வைத்தவன் வணங்கி விடை பெறுகிறான்.

மஞ்சத்தில் குப்புற விழுந்து கிடந்த வேங்கை மார்பனைக் கண்டு மருண்டுபோனார் அமைச்சர் குறுமலைக் கிழ ·ʼ.

''மன்னா!''

● கிரேக்க மது

யவனத் தேறலை மாந்துகிறபோது...
பழக்கமற்ற தடுமாற்றம்!...
மாந்திவிட்ட பிறகோ....
புழுக்கத்தில் உள்ள புன்னகை!
ஆ! என்ன சுகம்! ராஜ சுகம்!
கண்களில் புதிய புதிய வண்ணங்கள்! கவனத்தில் புதிய புதிய எண்ணங்கள்! களிப்பிலோ புதிய புதிய....

திருமேனி நிக்கும் மேனியாகத் தெரிகிறான். திறந்த மேனியாகவும் தெரிகிறான்; தீயாய்ச் சுடு மேனியாகவும் தெரிகிறான்!...

சற்றைக்கெல்லாம் உறக்கம் இமைகளைத் தாலாட்ட, அயர்ச்சி உடலை வருத்த நித்திரா தேவி அவனை நிம்மதியாக அணைத்துக்கொண்டாள்.

அந்த மென் மாடத்தை விட்டு, அவனது அறையை விட்டு வெளியே வருவதில்லை. தினமும் விழிப்பது, குடிப்பது, உறங்குவது.

செய்தியறிந்த தியாகவல்லி புழுதிக்கிடையே அலைமோதும் புல்லாங்குழலானாள். அவளது அபகாரம் அவனுக்குப் புரியவில்லை. ஆனால் அரசனது அபகாரம் அவளது செவிகளைக் காயப்படுத்தியது. அவள் சிதைந்த ஓவியமானாலும் சிறந்த ஓவியத்துக்காக ஓயாமல் புலம்புகிறாள்...

அவள் மட்டுமா?

வேங்கை வனத்து வேங்கைகள், தூங்க மறந்து, 'எங்கே எங்கள் தலைவன்' என்று உறுமலால் தினமும் துளைக்கின்றன.

அரசியல் காரியங்கள் அலைமோதி நிற்கின்றன.

அமைச்சரே வர அஞ்சினார் என்றால்...

ஒரு தினமா இரு தினமா? எட்டு நாட்கள்!

ஒன்பதாம் நாள் காலை....

ஒருவாறு தெளிந்து நீராடி முடித்து நேர்த்தியான ராஜ ஒப்பனையுடன் வெளியே வந்த வேங்கை மார்பன், அமைச்சர் குறுமலைக்கிழாரை அழைத்து அரசாங்கப் பணிகள் குறித்து விசாரித்தான்.

கொலு மண்டபம் சென்றான். விசாரணைகளைக் கவனித்தான். ஆனாலும் நடந்ததைச் சொல்லவில்லை.

நேரே அமைதி தேடி வேங்கை வனம் சென்றான். பளிங்கு மாளிகையுள் பிரவேசித்தான். எங்கும் உருவம் பிரதிபலிக்கும் எழிலார்ந்த பளிங்குச் சுவர்கள்.

தான் மட்டுமே வசிக்கவும் ரசிக்கவும் கலை நுணுக்கம் பொருந்திய தேவைகள், அங்கே திருக்கோலம் பூண்டிருந்தன.

மேலே ஒற்றை மாடம். அது அவனது சயன அறை.

திருமேனியின் சிந்தைக்குப் பிறகு அந்த அறையைத்தான் அவன் எப்படியெல்லாம் கற்பனை செய்து எவ்வாறெல்லாம் அலங்கரித்திருந்தான்!

இப்போது....

அங்கு செல்லவே மனமில்லை..

அது, திருமேனி மாடம்.

தங்கள் தலைவன் வேங்கை வனத்துக்கு விஜயம் செய்திருக்கிறான் என்பதையறிந்த வேங்கைகள் அந்த மாளிகையே அதிருமளவுக்கு உறுமுகின்றன.

'தலைவா, எங்களைத் திறந்து விடு'...

வேங்கை மார்பனுக்கு அது புரிகிறது. அவன் வெளியே வருகிறான். வேங்கைகள் அடைபட்ட அறை நாடிச் சென்று நிற்கிறான்.

ஆ! உறுமலா அது? அந்த அறையின் இரும்புக் கம்பிக் கதவுகள், உறுமல் அதிர்ச்சியால் திறந்து கொள்ளும் போலிருந்தது.

''மன்னா!'' என்று குரல் கொடுத்துக் கொண்டே அங்கு வந்து நின்றார் அமைச்சர் குறுமலைக்கிழார் வேங்கை வனத்துள் அவர் பிரவேசிக்கவே அஞ்சுவார். வேறு வழியின்றி, இதயத்தைக் கையில் பிடித்துக் கொண்டு நுழைந்திருந்தார்.

வேங்கைகளோ எங்களை வெளியில் விடு என்பது போல பயங்கரமாக உறுமி, கதவுகளைப் பிராண்டிச் சத்தமிடுகின்றன. முன்னங் கால்களால் கதவுகளை அறைகின்றன.

அமைச்சர் பயந்த வண்ணம் வந்த விஷயம் பற்றி வாய் திறக்கிறார்.

''மன்னா! பாண்டிய நாட்டில் என்னதான் நடந்தது. நான் அமைச்சன். என்னிடம் கூடவா சொல்லக் கூடாது?''

வேங்கை மார்பன் கொஞ்சமும் தயங்காமல் சொன்னான்: ''எவரிடமும் சொல்லலாம். பெண் கேட்டுச் சென்று புண்பட்டு வந்ததுதான் மிச்சம்.''

என்ன சொல்ல வேண்டும்; எந்த அளவுக்குச் சொல்ல வேண்டும்; எதை மறைக்க வேண்டும் என்பன இந்த ஒன்பது நாட்களில் அவன் தீர்மானித்து வைத்திருந்தது தானே?

''மன்னா, சற்று விளக்கமாகச் சொல்லலாமே!''

''வேறொன்றுமில்லை அமைச்சரே! நான் தியாகவல்லியின்பால் காதல் கொண்டு இதயத்தைப் பறி கொடுத்து இருக்கிறேனாம். எவனோ ஒற்றறிந்து உளறிய செய்தி இது! அரியணைக்குப் புகழ் பரப்ப மாமன்னன் மகன்; ஆசைக்கு அனுபவிக்க அத்தை மகளா என்று கூறி உதாசீனப்படுத்தி விட்டான் திருமேனி!''

''நினைத்தேன்; நடந்து விட்டது.''

வேங்கை மார்பன் விவரித்த கோணம் வேறுபட்டதானாலும் அமைச்சர் கொண்ட

'காஷ்' என்ற ஆங்கிலப்பதம் தமிழ் 'காசு'விலிருந்து வந்ததுதான் என்பது தெரியுமா? 'என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா'வில் காணப்படும் செய்தி இது!

—ஆர். எஸ். சுப்பிரமணியம்



சந்தேகக் கோணம் மாறுபட்ட ஒன்றாக இருந்தது.

''என்னதான் முடிவு?'' என்றார் அமைச்சர்.

''முடிவா? உன்னை எந்த விதத்திலும் மணப்பேன்; அல்லது மடிவேன் என்று சபதம் கூறித் திரும்பி யிருக்கிறேன்.''

அமைச்சர் மௌனமானார். சபதம் நிறைவேற வேண்டுமே!

எங்களைத் திறந்து விடுங்கள்; நாங்கள் சபதத்தை நிறைவேற்றுகிறோம் என்பது போல வேங்கைகள் பாச யுத்தம் நடத்துகின்றன. பயங்கரமாக உறுமுகின்றன.

வேங்கை மார்பன் நாவாடினான்.

''அமைச்சரே! என்னால் அவளை மறக்க முடியவில்லை. அந்த அளவுக்கு நான் காதல் பலியாகி விட்டேன்! ஓ!..எவ்வளவுக்கு அவள் சௌந்தரிய தேவதையாகக் காட்சியளிக்கிறாள்! எந்நேரமும் அவளைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போலத் தோன்றுகிறது. அவளை மறக்க மதுவை அருந்துகிறேன். வழி இருப்பின் சொல்லுங்கள் வணங்குகிறேன்.''

சிறிது நேரம் வரை நரையுண்ட மீசையை நீவியவாறு ஆலோசிக்கிறார் குறுமலைக்கிழார்.

''மன்னா! ஆலோசனை சொன்னால் மதுவை மறப்பீர்களா?''

''மறக்கக் கூடிய ஆலோசனையாக இருக்க வேண்டுமே.''

''ஓரளவு.''

''சொல்லுங்கள்.''

''பாண்டிய நாட்டிலிருந்து அரச குமாரியை அறிந்த சிறந்த ஓவியனை அழைத்து வந்து அல்லது கடத்தி வந்து சித்திரம் வரையச் செய்தால்?''

'கடத்தி வந்து' என்ற சொல் சுகமாக இருக்கிறதே!... வேங்கைமார்பன் சிந்திக்கிறான்.

''அமைச்சரே! அவளைவிடத் திருமேனியையே கடத்தி வந்து விட்டால் என்ன?''

அதிர்ந்து போனார் அமைச்சர்.

''இது பயங்கர விளைவை உண்டுபண்ணி விடும். யோசித்துச் செய்ய வேண்டிய முடிவு.''

பளார்....

வேங்கைகள் கதவை அறைகின்றன. அவற்றின் கண்களில் ஏதோ பட்டு விட்டனபோலும்!

வேங்கைகளின் துடிப்பைக் கவனிக்கிறான் வேங்கை மார்பன்.

''அமைச்சரே! சித்திரம் எழுதிக் காண அவள் பெயர் சித்திரப் பாவையா? அவள் திருமேனி! பெயருக்கேற்ப ஒரு திருமேனியையே வார்ப்படம் செய்து வார்த்தால்?''

...மன்னர்தான் அந்தப் பாண்டிய மாது மீது எவ்வளவுக்கு மயக்கமுற்று இருக்கிறார்!

''என்ன ஆலோசனை அமைச்சரே?''

''ஒன்றுமில்லை. திருமேனியை எந்த உலோகத்தில் வார்க்கப் போகிறீர்கள்?''

''எந்த உலோகமாவது? அவளது தேவதா சொரூபத்துக்குத் தங்க மேனிதான்!''

''தங்கம்?அவ்வளவுக்கு எங்கே போவது?''



திருமணம்

மணவாழ்க்கை கத்தரிக்கோலைப் போன்றதே. எதிர் எதிர்த் திசையில் செல்லும். ஆனால் இடையில் வருகின்ற எதையும் துண்டித்து விடும்.

—சிட்னி ஸ்மித்.

—ஜீவென்னார்.

''காளையார் சசன் கோயில் தங்கம் என் தாங்கவேண்டும்?''

''அது கோயில் திருமேனிகளுக்கு.''

''முதலில் எனது இதயக் கோயில் திருமேனிக்கு ஆவன செய்யுங்கள். பிறகு பார்ப்போம்.''

''இது தருமமாகாது.''

''தெரிந்து தவறு செய்வதாகவே இருக்கட்டும். ஏற்பாடு செய்யுங்கள்.''

''உற்பாதம் ஏதேனும் நிகழுமானால்?''

''திருமேனியை இழந்ததைவிடப் பெரிய உற்பாதமா? நிகழ்ந்தால் நல்லதுதான். ஏற்றுக் கொள்கிறேன். இந்தத் துயரைக் குறைக்க உதவும். ஏற்ற சிற்பிகளை எப்படிக் கொண்டு வருவது என்பது குறித்து யோசித்து விட்டேன். அன்று பிடிபட்ட ஒற்றனை அழைத்து வாருங்கள். அமைச்சரே!''

''இங்கே நான் வரவேண்டுமா?''

வேங்கைகளின் உறுமல் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது. அமைச்சரின் நெஞ்சு படபடக்கிறது.

''நானே அங்கு வருகிறேன். நீங்கள் செல்லலாம்.''

விட்டால் போதும் என்று விடை பெற்றார் குறுமலைக்கிழார். வேங்கை மார்பனின் பிடிவாதம் அவர் அறிந்ததே. நலமே விளைய நேர்ந்து கொண்டார்.


அவர் இரும்பு வேலி வாசலைக் கடந்ததும், வேங்கைகளை அடைத்திருந்த அறையைத் திறந்து விட்டான் வேங்கை மார்பன்.

அடுத்து....

சீறிப் பாய்ந்து வெளியே வந்த அந்த வேங்கைகள், தன்னிடம் வந்து அன்பு செலுத்திப் பாசத்தோடு தாவிக் குதிக்கும் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக...

எங்கோ, யாரையோ குறிவைத்துப் பழி வாங்கும் உறுமலுடன் வாயைப் பிளந்து வேங்காஸ்திரமான காட்சி...

வேங்கை மார்பனையே வெலவெலக்கச் செய்து விட்டது. (தொடரும்)




நானா ரிடையர் ஆனேன்? இப்பதான் புதுவாழ்க்கையே
ஆரம்பமாகிறது! தோட்டத்தில் நடமாடுவது, ஸீஸனில்
பாட்டுக் கச்சேரிகளுக்கு போவது, கடற்கரை
பக்கம் உலாவியபடி அரசியலை அலசுவது,
பேர குழந்தைகளுக்கு கதை சொல்வது, இன்னும் எத்தனையோ...
இதையெல்லாம் செய்ய தினமும் இரண்டுமுறை
ஹார்லிக்ஸ் பருகுசிறேன்.
மால்டெட் பார்லி, முழு ஆடைப்
பால் மற்றும் பொன்னிற
கோதுமைகொண்ட ஹார்லிக்ஸ்-
ஒரு சுவையான, சத்தான பானம்.
ஊட்டச்சத்திற்கு மூலாதாரமான
ஒரு லட்சிய பானமென்ற
நம்பிக்கையைப் பெற்றது. எனவே,
கடந்த நூறு வருடங்களாக
கோடிக்கணக்கான குடும்பங்கள்
உலகமெங்கும் ஹார்லிக்ஸின்மேல்
நம்பிக்கை வைத்து வருகிறார்கள்
என்பதில் ஆச்சரியமில்லை.
Horlicks
The Great Nourisher
புதிய காலத்திற்கேற்ப
புதிய தோற்றம்
சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

1984 மே 1ம்தேதி வெள்ளிவிழாக் கொண்டாடும்

குஜராத் மாநிலத்திற்கு

எங்கள் நல்வாழ்த்துக்கள்

குஜராத் மாநிலத்தின் கைவினை, கைத்தறி அபிவிருத்தி கார்ப்பரேஷனின் விற்பனை நிலையமாகச் செயலாற்றுகிறது குர்ஜாரி

பூர்வீகப் பண்பாட்டோடு கலைத்திறன் மிக்க கைவினைப் பொருட்களைத் தயாரித்தளிப்பதற்குப் புனருத் தாரணம் செய்து ஊக்குவிப்பதோடு, அவற்றை வாணிபம் செய்வதற்கும் வழி கோறுகிறது.

குஜராத் மாநிலத்தின் வெற்றிப் பரிசுகளைக் குவித்த கைவினைஞர்கள் இத்தகைய பண்பாட்டுப் பொக்கிஷங்களை, கலைச் செல்வங்களை, கைவினைப் பொருட்களைக் கண்ணைக் கவரும் முறையில் தயாரித்தளிக்கிறார்கள்.

சாயமிடுவது, துணியில் அழகிய கைவேலைகளை அச்சடிப்பது, எம்ப்ராய்டரி செய்யப்பட்ட படுக்கை உறைகள், குஷன்கள், தலையணை உறைகள், அலங்காரச் சுவர் தொங்கு பொருள்கள், நாகரீக உடைகள், புடவைகள், துப்பட்டாக்கள், சங்கேதா பர்னிச்சர் பைகள், ஸ்டேஷனரி மடிப்புக்கள், மேஜை விரிப்புகள், நகைப்பெட்டிகள் இப்படிப் பலப்பல அரிய வேலைகள் !

Gurjari

குர்ஜாரியில் வாங்குங்கள்

குஜராத் கைவினைப் பொருட்கள் எம்போரியம்

ரிட்ஸ் ஹோட்டலுக்கு எதிரில்	சஜ்ஜார் சேம்பர்ஸ் எதிரில்	A-6 பாபா கரக்சிங் மார்க்
சர்ச்கேட்,	ஆசிரமம் ரோடு,	புதுதில்லி-110 001
பம்பாய்-400 020	அஹமதாபாத்-380 009	

நவீன காலத்துக்கேற்ப புதிய பண்பாட்டை உருவாக்குகிறது குர்ஜாரி புதிய நாகரீகத் தோற்றத்தையும் படைக்கிறது.

குர்ஜாரி தம் இணையற்ற ஒப்புவுயர் பெற்ற குஜராத் கைவினைப் பொருள்களோடு சென்னைக்கு விஜயம் செய்கிறது. 1985 ஜனவரியில் சென்னை ஸி.பி. ஆர்ட் சென்டர் கண்காட்சியில் எதிர்பார்த்துக் காத்திருங்கள்.

குஜராத்தி சிறுகதை

எதை நினைத்து...

புஷ்கர் சந்தவர்க்கர்

அந்தக் கிழட்டு எருமை மாட்டை லகு ராத்தோட் வாங்கியபோது, மனதில் என்னென்னவோ கணக்குகள் போட்டான். அதற்கு சந்தர்தி என்று பெயரும் வைத்தான். ரூபாய்க்கு ஐந்து எட்டணா கேட்கக்கூடிய லகு, இந்தத் தோத்தல் எருமையை வாங்கிய நோக்கம் எதுவாக இருக்கும் என்று கிராமத்தில் ஒரே பேச்சு. பரம கஞ்சனாயிற்றே அவன்....

முற்றத்தில் ஒரு கட்டிலைப் போட்டு அமர்ந்து, மீசையைத் தடவிக் கொண்டு சந்தர்தியை அன்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் லகு. பரிவான பார்வை மட்டும் போதாது என்று உள்ளே போய், கை நிறைய வைக்கோலை அள்ளிக் கொண்டு வந்து அதற்குக் கொடுத்ததும், கண்களை உருட்டி, நாசியை விடைத்துத் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டது எருமை.

'எட்டு மாச கர்ப்பிணியான சந்தர்தியை இரண்டு வேளை குளிப்பாட்டி, நிறையப் பசும் புல்லும் வைக்கோலும் தின்னக் கொடுப்பான். என் எருமை சீக்கிரமே எப்படி ஆகிறது பார்.....'

''ஏய், கொஞ்சம் பருத்திக் கொட்டை கொண்டு வந்து போடு! பச்சைப் புல்லும் கொண்டு வா!'' என்று உள்ளே பார்த்து இரைந்தான் லகு.

சந்தர்தியை லகு வாங்கியது முதல் கிராமத்தில் இதேதான் பேச்சு. ஒன்றுக்கும் உதவாத பயல், பேலானி, கிராமத்தின் மையத்தில் உட்கார்ந்து கொண்டு சந்தர்



தியையும், லகுவின் வயதான தாயாரையும் ஒப்பிடுவதுண்டு. வயதான எருமையை ஏதானும் கோயிலுக்குத் தானம் செய்வது தான் மேல் என்றும் கேலியாகப் பேசுவான்.

எருமை மாடுகள் விலை ஏகமாகக் கூடி இருப்பதும், இரண்டு வெள்ளைக்காரர்கள் கூட சமீபத்தில் பனியாத் கிராமத்துக்கு வந்து, ஒன்றுக்கு ஒன்பதாயிரம் வீதம் இரண்டு எருமைகள் வாங்கிப் போனதையும் ஆச்சரியமாகச் சொன்னான்.

''ராதோட் ஒன்பதாயிரம் கொடுத்தாலும் விற்கமாட்டான். அந்தக் கெழட்டு எருமையைக் கோயிலுக்குத் தானம் பண்ணவும் மாட்டான்!''

''ஆனால் சந்தர்தி எட்டு மாத கர்ப்பிணி'' என்றான் ஒருவன்.

''லகு சரியான பேராசைக்காரன்தான்! ஒரு பெண் எருமைக் கன்று பிறந்தால் நாலே வருடங்களில் அதை ஐந்தாயிரம் ரூபாய்க்கு விற்கலாமே என்ற எண்ணம் போலிருக்கிறது!''

இப்போது கிராமத்தில் சந்தர்த்தியைப் பற்றி இன்னும் கூடுதலாகப் பேச்சு அடிபடத் தொடங்கியது. லகுவின் எருமை என்ன கன்று போடும்? ஆணா, பெண்ணா? இந்தச் சர்ச்சை கிராமத்தில் வளர்ந்து சூடு பிடித்து, 'மட்கா' சூதாட்டம் ஆடுபவர்கள் அத்தனை பேரும் ஆணாயிருந்தால் இவ்வளவு, பெண்ணாயிருந்தால் இவ்வளவு என்று தங்களுக்குள் பந்தயம் கட்டத் தொடங்கினார்கள்!

லகு ராதோடுக்கு இது தெரிந்ததும், இதில் முக்கியஸ்தனான பனிபாதியைக் கூப்பிட்டனுப்பினான். ''என் வீட்டுச்சமாசாரம் பற்றி நான் கேள்விப்படுவதெல்லாம் உண்மைதானா?''

''கேள்விப்பட்டதில் என்ன தவறு அண்ணே?''



-குஜராத்தி மாத இதழ் 'அகண்ட் ஆனந்த்'தில் வெளியான சிறுகதை; தமிழாக்கத்திற்கு உதவி: ஜெயந்த் காம்தார்

''என் குடிசையில் என்ன கொண்டாட்டம் இப்போது? — இப்படி எல்லாரும் என்னைப் பற்றிப் பேச? சந்தர்தியை வைத்துச் சூதாட்டம் ஆடுகிறீர்களாமே?''

''நாங்கள் எல்லாம் சூதாட்டத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள்!''

''சரி, மொத்தத் தொகை எவ்வளவு?''

''கிட்டத்தட்ட இரண்டாயிரத்தைந்நூறு ரூபாய்?''

''எது அதிகமாக அடிபடுகிறது? ஆணா, பெண்ணா?''

''இயற்கையாகவே ..பெண் கன்றுதான்!''

''நான் சொல்லுகிறேன். ஆண் கன்றுதான். ஆயிரம் ரூபாய் பந்தயம் கட்டுகிறேன். தயாரா?'' என்று சவால் விட்டான் லகு.

பனிபாதி கொஞ்சம் புத்திசாலி. ஆனால் லகுவோடு பந்தயம் கட்ட அவன் துணியவில்லை. ஆண் கன்றுதான் பிறக்கும் என்று இந்தச் சூதாட்டத்தில் தைரியமாக இறங்கவும் முடியவில்லை. அதே சமயம், ஆண் கன்றுதான் என்று பந்தயம் கட்டுவோரிடம் பணம் வாங்கிக் கொள்ளவும் தயங்கவில்லை. அப்படி வாங்கத் தொடங்கியதும், கிராம சூதாட்டப் பந்தயத்தில் நிர்ணயித்த தொகைகள் மளமளவென்று சரியத் தொடங்கின.

மாடு மேய்க்கும் கோக்லி, சந்தர்தியின் பிரசவம் பார்க்கும்போது சந்தர்தியின் வம்சத்திலேயே ஆண் கன்றுகள்தான் அதிகம் என்று வேறு ஊர்ஜிதம் செய்தான். அதற்கேற்றாற்போல், சந்தர்திக்கு ஆண் கன்று பிறந்தது.

அன்று கிராம நடுவில் கும்மாளமும் கொண்டாட்டமும்தான். சந்தர்தி ஆண் கன்று பிரசவித்ததும், அதனால் லகு ராத்தோடுக்கும் கிராமத்துக்கும் சேர்த்து ஏகப் பெருமை என்று கிராம வாசிகள் எல்லோரும் பேசிக் கொண்டார்கள். காற்று எந்தத் திசை நோக்கி அடிக்கும் என்று புரிந்து கொள்ளும் 'ஜால்ரா' ஆயிற்றே பேலாணி? லகு ரத்தோட் சந்தர்தியை எப்படி வெகு கவனமாகப் பார்த்துக் கொண்டான் என்றும் அது தேறியதில் இப்போது அதை விற்றால் நாலாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் கிடைக்கும் என்றும் ஒரேயடியாகப் புகழ்ந்தான்.

ஆண் கன்றுக்கு ஒரு மாதம் ஆயிற்று. அப்படியே அம்மா எருமையை உரித்துவைத்த மாதிரி இருந்தது. அம்மா — பிள்ளை பாசத்தை நேரில்தான் பார்க்க வேண்டும்!

''மனித ஜாதியில் கடைசிப் பிள்ளை மேல் பாசம் வைப்பதில்லையா, அது மாதிரி சந்தர்தி தன் கன்றை மணிக் கணக்கில் நக்கிக் கொடுப்பதும், பாதிப் பாத்திரம் கொள்கிற அளவுக்கு அதற்குப் பாலைச் சொரிவதும் எல்லார் பேச்சிலும் அடிபட்டது.

''தன் கன்றுக்கு இப்படிப் பாலைக் கொட்டுகிறதே சந்தர்தி! லகு ராத்தோடுக்குத் தூக்கமே வராது!''

''ஏன்?''

''மகா கஞ்சன் அந்த லகு. தெரியாது? அந்தக் கன்று வேறு திமு திமு வென்று வளர்ந்து நிற்கிறது.''


மின்னும் மேனி மெருகுக்கு
ரெக்ஸோனா
REXONA
Rexona
FOR SOFT AND GLOWING SKIN



கதம்பத்தில் பார்த்தீனியம்

'கொத்துமல்லிக் கட்டில் பார்த்தீனியம்'' என்கிற செய்திக் குறிப்புப் படித்தேன். (22-4-84 கல்கி) இதையும் சேர்த்துக்கொள்ளுங்கள்: தலைக்கு சூடிக் கொள்ளும் கதம்பத்தில் 'பார்த்தீனியத் தழைகளையும் இலைகளையும் சேர்த்துக் கட்டிவிடுகிறார்கள். விளைவு, அக்கதம்பச் சரத்தை சூடிக் கொண்டவர்களின் பின் கழுத்துப் பகுதியில் சரும வியாதி பரவுகிறது. பெண்கள் உஷாராய் இருக்க' வேண்டும் என்பதற்காகவே இதை எழுதுகிறேன்.

—கே. லலிதா.

''பாவி, உன் கொள்ளிக் கண்ணைப் போடாதே பேலானி! கன்றுக்கு ஏதானும் உடம்புக்கு வந்துவிடப் போகிறது!''

''அதற்கென்ன, மிளகாயை அடுப்பில் சுற்றிப் போட்டு அதற்கு ஆகும் செலவையும் ராத்தோடிடம் வாங்கிக் கொள்ளுகிறேன்!''

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருந்த போதே, திறந்த மார்புடன் லகு ராத்தோட் அரக்கப் பரக்க, மாடுகள் வைத்தியத்தில் கைதேர்ந்த வாருகோரி வீட்டை நோக்கி ஓடிக் கொண்டிருந்தான்.

''எங்கே ஓடுகிறாய் லகு அண்ணே?''

''கன்றுக்கு உடம்பு சரியில்லை. வாருகோரி வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்!''

''என்ன ஆயிற்று மறுபடியும்?'' என்று குழப்பத்துடன் கூவினாள் பேலானி.

''என்ன ஆகும்! கன்றுக்குக் கிட்டத்தட்ட உயிர் போன மாதிரிதான். சந்தர்தி அருகிலேயே நிற்கிறது.''

''ஓடு ஓடு... பேசிக் கொண்டு நிற்காதே!'' என்று அவனை விரட்டிவிட்டு, பேலானி லகுவின் வீட்டுக்கு ஓடினாள்.

தலையைத் தன் வயிற்றின் மீதே வளைத்துக்கொண்டு படுத்தபடி, கன்று தன் கடைசி மூச்சை விட்டுக் கொண்டிருந்தது. எருமை, கயிற்றை அறுத்துக் கொண்டு அதன் அருகே பாயத் துடித்துக் கொண்டிருந்தது. அதன் தாங்க முடியாத துயரமும், ஆற்றாமையும் அந்தக் கட்டை அது அவிழ்க்கத் துடிக்கும் துடிப்பில் தெரிந்தது.

லகு, வாரு கோரியுடன் வந்தான்.

''சமர் வரட்டும். அவனை உடனே கூப்பிட்டுக் கன்றின் தோலை அது இறந்தவுடன் உரிக்கச் சொல்லு. சந்தர்தி உன்னைத் தாக்காமல் பார்த்துக் கொள்'' என்றான் வாருகோரி.

பேலானி, லகு ரத்தோட், இன்னும் சில அக்கம் பக்கத்துக்காரர்கள் இறந்த கன்றைத் தூக்கிக் கொண்டு போனபோது, சந்தர்தி தன் உடல் வலு முழுவதையும் திரட்டி, தன் கன்றைத் தன்னிடமிருந்து பிரிக்கிறவர்களை நோக்கிப் பாயத் துடித்தது.

லகு பருத்திக் கொட்டையைக் கொடுத்தபோது அது தொடவே இல்லை. தலையைக் கம்பத்தில் மோதி மோதித் தள்ளியது. கிட்டே வந்தாலும் குத்திக் குதறிவிடும் என்று லகு பயந்தான். ''என்ன செய்வது'' என்று கேட்டான் கோரியிடம்.

''அப்படியே கட்டிப் போடு. நிறையத் தீனி போடு. பால் கறக்காதே!''

''இன்னொரு கன்றை அதனிடம் நிறுத்தினால் என்ன?''

''தாய்க்குத் தெரியும் எது தன் கன்று என்று. சந்தர்தியிடம் விளையாடாதே!''

''கறவை நின்றுபோனால்?''

''நிறையத் தீனி போடு. கொஞ்சம் போதைச் சரக்கு (ஓபியம்) சேர்த்துப் போடு. அப்புறம் பால் கறக்கச் சம்மதிக்கும்.''

உட்கார்ந்து கொண்டு யோசித்தான் லகு. 'நடந்தது நடந்துவிட்டது. ஆண் கன்று பாலுக்கு உபயோகமில்லை. இருக்கிற பாலையும் தானே குடித்துவிடும். இப்போது கறவைக்கு மூன்று நான்கு லிட்டர் பாலாவது கிடைக்கும். அது கிட்டத்தட்ட முப்பது நாற்பது ரூபாய் ஒரு நாளைக்குக் கிடைக்குமே! அப்படி அது சாகிற பட்சத்தில் ஏதானும் கோயிலுக்கும் அந்தச் சமயத்தில் கொடுத்துப் புண்ணியம் தேடிக் கொள்ளலாம்!'

• • •

மூன்று நாளைக்கு அப்புறம் சந்தர்தி தீனியைத் தொட்டது. சந்தோஷத்தில் மிதந்தான் லகு. பீடி நூலிழை ஆகிற அளவுக்கு அதைக் குடித்துவிட்டு வீசினான். அந்த பீடிக்கு மட்டு உயிர் இருந்தால, இந்தக் கஞ்சனைச் சபித்துக் கொண்டே பிராணனை விட்டிருக்கும்.

லகு சந்தர்தியை அணுகியதும், பெண் சிங்கம் மாதிரி அது கர்ஜித்தது. மூக்கு விடைக்க, அவனைக் கொம்பால் குதறிவிட வந்தது. திரும்பி வந்து இன்னும் தீனியும், வெல்லமும், போதைப் பொருளும் கலந்து கொண்டு வந்து அதற்குப் போடச் சொன்னான். பட்டினி கிடந்த சந்தர்தி பாய்ந்து உண்டது தீனியை. தின்று அசை போடத் தொடங்கியதும் பால் கறக்க அதை அணுகினான் கோரி.

ஒன்றும் செய்ய மாட்டாமல் கல் மாதிரி நின்று கொண்டிருந்தது சந்தர்தி. பால் அதன் மடியிலிருந்து ஊற்றாகச் சுரந்து கொண்டிருந்தது. அதன் கண்களும் அருவியாகக் கண்ணீரைச் சொரிந்தன.

எதற்கு?

பேராசைக்காரர்களின் கொடூரத்தை நினைத்தா? இறந்துபோன தன் ஆசைக் கன்றை நினைத்தா? இல்லை, இரண்டுக்கும் சேர்த்தா?


A CORPORATION BETTER KNOWN FOR THE EFFICIENT MANAGEMENT OF SCARCE RAW MATERIALS PRESENTS ITS OTHER VITAL CREDENTIALS

Gujarat Small Industries Corporation-GSIC. The four letters really stand for total service to small scale industries. Service that starts with the distribution of scarce raw materials–cement, plastics (LDP and PPE) pig iron, coal, iron and steel–but doesn't end there.

GSIC assists small scale industries at other vital points where assistance is needed most. Selection of appropriate machine tools. Purchase of anything from a lathe to a chemical plant, on hire-purchase. Selling products in bulk to 'big', national buyers. Beating persistant marketing problems. Organising buyers' exhibitions. Even importing channelised raw materials. Assistance from 'start-up' to 'growth'.

Can you imagine the small scale sector without GSIC? 6000 thriving small scale industries cannot.

Gujarat Small Industries Corporation Ltd
Bhagwati Chambers
Opp. Gujarat Vidyapith
Ashram Road
Ahmedabad 380 009.





7
பீதி, பயம், கலவரம் கலந்த காக்டெயில் முகபாவத்துடன் ஜில்ஜில் ஜனார்த னன் நீலகண்டன் அறைக்குள் நுழைகிறார்.
அட! மாமா! எங்கே உங்களை ரெண்டு நாளா காணும்? மெட்ராஸ் போலீஸ் ஜெயிம்பட வங்க மாதிரி வலை யோட உங்களைத் தேடிண்டு இருக் காங்களே!
நீலகண்டா! எனக்கு ஒண்ணும் புரியலையே. கனகம் செத்துட் டாளாமே! அ.... நெஜ மாவா....
கதை
ஜேஸ்ராவன்
சித்திரம்:
செல்லம்
பேப்பர் காரங்க சொல்றாங்களே. 'ஜமீன்தார் சக்கர வர்த்தியின் மனைவி படுகொலை' அப்படின்னு.
டேய்! நான் சுட்டது மந்திரத் துப்பாக்கியிலே சுட்டேன்டா. நெஜத் துப்பாக்கின்னு தெரிஞ்சி ருந்தா....
மாமாவின் மீது ஒரு குள்ள நரிப் பார் வையை வீசுகிறான்.
மாமா! முப்பது வருஷத்துக்கு முன்னேயே எனக்குக் காது குத்தியாச்சு. அதுவும் உங்க மடியிலே உக்கார வைச்சு....
டேய்! நான் சொல்றது நிஜம். நம்புடா....
அப்போ நேரே போலீஸ் கிட்டே சொல்ல வேண் டியது தானே! இதோ போன் இருக்கு. ஒண்ணு, சைபர், சைபர்... ஆறு ராங் நம்பரா வரும்.
டேய் நிறுத்து. நான் போலீஸ்லே போய் நெஜத்தை சொன்னா நம்புவாங்களா?
மாட்டாங்க. ஆனா நான் ஒரு நெஜத்தை சொன்னா நம்புவாங்களே?
எதை?



நீங்க மாமியை மாத்திரம் இல்லே சதீஷையும் தீர்த்துக் கட்டணும்னு ஆவலா இருந்தீங்க...
அடப்பாவி! நான் எப்படா அதுமாதிரி சொன்னேன்?
என்ன மாமா அன்னிக்கு ஷிவாஸ் ரீகல் போட்டுண்டு...
டேய்! துரோகி. குடி போதையிலே உளறி இருப்பேன் நீ போலீஸ்கிட்டே சொன்னா நம்பு வாங்களா?
மாட்டாங்க. அதுக்குதான் டேப் பண்ணிட்டேன் துல்லியமா இருக்கு.
சண்டாளப் பாவி! எனக்கும் முட்டிண்டாடா. நீ கண்டனே நம்பாதேனு அவ பாடி எங்கே இருக்கோ?
கவலைப் படாதீங்க மாமா! ஐஸ் க்ரீம் சக்கரவர்த்தி மனைவி இல்லியா சாவு கிடங்கிலே குளுகுளுன்னு வெச்சிருப்பாங்க.
டேய்! பாம்புக்குப் பால் வார்த்த மாதிரி ஆச்சே! விஷத்தைக் கக்கிறியே .... உன்ன....
மாமா! எனக்கு வேண்டியதெல்லாம் சொத்துதான். எதுக்கு உங்க பேரிலேயும் மாமி பேரிலேயும் இருக்கணும்? என் பேர்லே மாத்திடு சைலண்ட் ஆயிடுவேன்!
நடக்காதுடா! நான் இப்பவே சதீஷ் கிட்டே போய்....
வெயிட் மாமா! அவனும் தலைமறைவா இருக்கான். போலீஸ் தேடுதே. சுவாமி பிஸ்டலானந்தா தான் துப்பாக்கி புகை மாதிரி காத்தோட மறைஞ்சுட்டாரே.
பிஸ்டலானந்தா!? டேய் எங்கேடா அந்த ஆள்? என் கையிலே கெடச்சா....
கிடைக்க மாட்டார். அவர் தாடிக்கோல் மேல உக்காந்து மாயமா மறைஞ்சுட்டார்.
தொடரும்


குஜராத் துணுக்குகள்



தாய்மொழி

குஜராத்தி, ஆங்கிலம், இந்தி என மும்மொழியில் எழுதும் ஆற்றல் படைத்தவர் அண்ணல் காந்தி. ஆனால் அவர் 'சத்திய சோதனை'யை எழுதியது தமது தாய்மொழியாம் குஜராத்தி மொழியில்தான்.

—கலாதாக்கர்.



அசையும் கோபுரங்கள்

குஜராத்தின் தலைநகரான அகமதாபாத் ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் 'அசையும் கோபுரங்கள்' உள்ளன. இரு உயர்ந்த கோபுரங்கள் ஒரு சிறு கட்டிட அமைப்பால் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கோபுரத்தின் உட்பகுதியில் சென்று அதை அசைத்தால் மறுகோபுரம் அசைகிறது. எங்கே நம்மீது விழுந்து விடுமோ என்று அச்சம் ஏற்படும். ஆனால் பல நூற்றாண்டுகளாக இது விழாமல் அசைந்து கொண்டே தான் இருக்கிறது.

—எஸ். வெங்கட்ராமன்.

கடலையின் தந்தை

இந்தியாவின் நிலக்கடலை விலையை நிர்ணயம் செய்வதில் குஜராத் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்திய நிலக்கடலை விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கு அங்கு விளைவதே காரணம். இதில் தமிழகத்துக்கும் பெருமை உண்டு. எப்படி?

எழுபது ஆண்டுகளுக்கு முன் பத்ம பாபா என்ற குஜராத்தியர் தமிழ் நாட்டுக்கு வந்தார். அவர் இங்கிருந்து நிலக்கடலையைக் கொண்டு போய் ராஜ்கோட் மாவட்டத்தில் பிபாலியா என்ற ஊரில் தம் நிலத்தில் பயிரிட்டுப் பார்த்தார். தட்ப வெப்ப நிலை ஏற்றதாக இருந்ததால் அமோக விளைச்சல் கண்டது. குஜராத் முழுவதும் நிலக்கடலை பயிர் செய்யத் தொடங்கினார்கள். பத்ம பாபாவை 'மணிலாக் கொட்டையின் தந்தை'' என்று பெருமைப்படுத்தினார்கள்.

—சோமலெயின் இமயம்முதல் குமரிவரை

ஒற்றுமை!

● உப்புச் சத்தியாக்கிரகம் குஜராத்தில் தண்டியிலும், தமிழகத்தில் வேதாரண்யத்திலும நடைபெற்றன. முத்துக் குளிக்கும் பெருமை இரு மாநிலங்களுக்கும் உரியது. தமிழ்நாட்டில் தூத்துக்குடி போல் அங்கு ஜாம்நகரில் முத்துக் குளித்தல் நடைபெறுகிறது.

—கனகா கெங்கைமுத்து







கபர்தார்!

- ஒரு வருஷத்துக்குத் தேவையான அரிசி பருப்பு, வெல்லம், எல்லாவற்றையும் ஒரேயடியாக வாங்கிப் போட்டு விடுவார்கள் குஜராத்தி குடும்பங்களில்.
- கபர்தார் என்ற குஜராத்தி கவிஞர்; இவர் சென்னையில் தான் காலமானார். அவர் எழுதியது: ஒரே ஒரு குஜராத்தி இருக்குமிடத்தில் கூட குஜராத்தே அங்கே இருக்கும்.
- கிழக்கு ஆப்பிரிக்காவில் குஜராத்தியர் ஏராளம். பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் அவர்களது கரன்ஸி நோட்டில் கூட குஜராத்தியைக் காணலாமாம்.

மாறுவதில்லை!

- ஒரு குஜராத்தி நண்பர் தெரிவித்த கவிதை:

பன்னிரண்டு மைலுக்கு ஒருமுறை
பாஷை மாறுகிறது:
மரங்களின் கிளைகள்கூட
மாறிப் போய்விடுகிறது:
நதிகள்கூட அவ்வப்போது தமது
நடைபாதையை மாற்றிக்கொள்கின்றன
மனிதனின் ஆசைமட்டும் ஏனோ.
மாறுவதே இல்லை!

ஒட்டகப்பால்!

- குஜராத்தில் விதவைகள் தான் தங்க வளையல்கள் போட்டுக்கொள்வார்கள். சுமங்கலிகள் கண்ணாடி வளையல்கள் அணிவார்கள்.
- குஜராத்தியர் விரும்பிச் சாப்பிடும் டானிக் ஒட்டகப்பால். இது மிகக் கெட்டியாக இருக்கும். இதில் ஒன்பது பங்கு தண்ணீர் கலந்து பருகுவார்கள்!

—எஸ். வெங்கடராமன்.



டினோசாரின் முட்டைகள்

அகமதாபாத்திற்குக் கிழக்கில் 100 கி. மீ. யில் 'ரையோலி' கிராமம். இதற்கு மேற்கே ஒரு கி. மீ. தூரத்தில் கெட்டிப்பட்ட மணல் சமவெளி.

அங்கு 'டினோசார்' என்ற ராட்சதப் பல்லி இன ஊர்வனவற்றின் முட்டைகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. உதைபந்தளவு பெரியவை. டினோசார் இன்றைக்கு 6 கோடி ஆண்டுகள் முன்பு வாழ்ந்தவை.

தகவல்: ஜானகி மணாளன்.

ராத்
ணுக்குகள்

சிறகு ஒன்று வேண்டும்

அனுராதா ரமணன்

20

சீக்கிரமாக நினைவிழந்து விட்டான் பாபு. உடம்பில் எந்த வித அசைவும் இல்லை.

அவனது நிலை கண்டு தாரா 'ஓ'வென அழத் தொடங்கி விட்டாள். பங்காரு அம்மாள் — அவள்தான் வளையல் கடை அம்மாள் — பக்கத்தில் இருந்தாளோ ஓரளவுக்கு அவளைச் சமாதானப்படுத்த முடிந்ததோ?

பாபுவுக்கு 'கோமா'வாம்.

ஆஸ்பத்திரியில் டாக்டர்களின் குழு தங்களுக்குள் பேசிப் பேசி அவனைத் தலை முதல் கால் வரையில் ஆராய்ந்து, கடைசியில் சொன்ன வார்த்தை இவை.

''அவருக்கு எப்ப நினைவு திரும்பும் டாக்டர்?''

தாரா, ஒவ்வொரு டாக்டரையும் பரிதாபமாக வினவுகிறாள். எவருமே உடனடியாக இதற்குச் சாதகமான பதிலைச் சொல்லவில்லை.

''பார்க்கலாம்மா... எங்களாலே ஆன எல்லா முயற்சிகளையும் நாங்க செய்யறோம். அதற்கு மேலே ஆண்டவன்னு ஒருத்தன்மேல இருக்கான். அவனைத்தான் பிரார்த்திக்கணும்.''

தாராவினால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

சற்று முன் வரையில் ஆத்திரம் பொங்கக் கத்தியவன், அவள் முகத்தில் காறித் துப்பியவன் — இப்பொழுது கட்டையாகக் கிடக்கிறானென்றால்....

ஐயோ... இது என்ன கொடுமை...

படப்பிடிப்பில் பாபுவுக்கு என்ன நேர்ந்தது என்றுகூடத் தாராவுக்குச் சரிவரத் தெரியவில்லையே...

யாரோ முகம் தெரியாத இருவர் வந்தார்கள். கொறுங்கிப் போன பொம்மையை ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டு வருவது போல, இவனைக் கொண்டு வந்து வீட்டில் உதறிவிட்டுப் போனார்கள்.

''என்ன நடந்ததும்மா...''

இப்படி ஒவ்வொரு டாக்டரும் கேட்கும்பொழுதும் அவள் என்ன பதிலைச் சொல்வது என்றே புரியாமல் திகைத்துப் போகிறாள்.

என்ன நடந்தது... யாரைப் போய்க் கேட்பது...

பாபு அவசரச் சிகிச்சைப் பகுதியில் கண் மூடிக் கிடக்கிறான்.

''உயிருக்கு எதுவும் ஆபத்து இல்லையே.''

தாரா, நடுங்கும் குரலில் அங்கிருந்த டாக்டர் ஒருவரை வினவ,

''இப்பொழுது எதுவும்சொல்வதற்கில்லே. எதுக்கும் நீங்க முக்கியமான உறவுக்காரங்களுக்குச் சொல்லி அனுப்பிடுங்க.''

'திக்'கென்றாகி விட்டது அவளுக்கு.

யாருக்கென்று சொல்லி அனுப்புவாள்?

பிறந்த வீட்டுக்கா, இல்லை புகுந்த வீட்டுக்கா?

பாபுவைப் பெற்றவர்கள் சென்னையை அடுத்துள்ள ஒரு கிராமத்தில்தான் இருக்கிறார்கள். பெரிய குடும்பம். அக்கா, தங்கை என்று ஏகப்பட்ட ஜனங்கள். ஒவ்வொருத்தியும் லங்கா ராட்சசிகள்.

பாபு அவர்களுடன் அதிகம் தொடர்பு வைத்துக் கொள்ளாவிட்டாலும் அவர்கள் அவ்வப்பொழுது வந்து தங்களது உரிமையை நிலைநாட்டிவிட்டே போவார்கள். அத்தனை பெரிய குடும்பத்தில் ஒருத்திக்கும் படிப்பறிவு கிடையாது. பெருந்தன்மை கிடையாது.

அவ்வளவு ஏன்... பாபுவின் தாயும் சகோதரிகளும் இவர்களைப் பார்க்க வந்துவிட்டுப் போகும்பொழுதெல்லாம் அந்த வீட்டிலிருந்து குறைந்தது எவர்சில்வர் தம்ளராவது காணாமல் போயிருக்கும். கேட்டு எடுத்துக் கொள்வது என்கிற பழக்கமே அந்தப் பரம்பரைக்குக் கிடையாது.

வெட்டிவிடப்பட்ட கூந்தலும் ஷிபான் புடவையுமாக, தாரா கல்யாணமான புதுசில் புகுந்த வீட்டை மிதித்தபோது—

'நம்ம பாபு யாரோ ஒரு சினிமாக்காரியை இஸ்துட்டு வந்திருக்கானும்டா...'

—இப்படி இரைந்து விமரிசித்தபடி அந்தக் கிராமமே இவளைச் சுற்றிச் சிவந்து நின்று வேடிக்கை பார்த்தது.

''உன் வீட்டுக்காரிக்கு என்ன... உதட்டுச் சாயத்தைத் தடவிட்டு, வெங்காய சருகு சேலையைக் கட்டிட்டு குலுக்கி மினுக்கிகிட்டு ஆபீசுக்குப் போய் நோட்டு நோட்டா சம்பாதிக்கிறு... இங்கே அப்படியா.. மாசம் முச்சூடும் மாடா உழைச்சாலும் முப்பது ரூபா தேற மாட்டேங்குது...''

இப்படி அவன் குடும்பமே தாராவை, அவளது படித்த நாகரீகத்தை, நடையுடை பாவனையைக் குதர்க்கமாய் விமர்சிக்கும்.

இப்பொழுது அவர்களுக்குத் தகவல் அனுப்பினால் ஒரு படையே ஓடிவந்து ஆஸ்பத்திரியில் முகாமிட்டு விடும்.

சரி... பிறந்த வீட்டுக்குச் சொல்லி அனுப்பினால்....

நிச்சயம் அம்மாவோ அப்பாவோ அவளைப் பார்க்க வரமாட்டார்கள்.

மிஞ்சிப் போனால் கற்றை நூறு ரூபாய் களை கார் டிரைவர் மூலமாக அனுப்பி வைப் பார்கள்.

நேரில் வந்து பார்த்து, தங்களது கௌரவத்தை இழக்க அவர்கள் ஒருபோதும் சம்மதிக்க மாட்டார்கள்.

தாரா, யோசித்து யோசித்து எந்த முடிவுக்கும் வர மாட்டாதவளாகப் பங்காருவின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொள்ள,

அந்தக் கணத்தில் பங்காரு மாத்திரமே விஷய ஞானத்துடன் செயல் படுகிறாள்

''இந்தாம்மா, சும்மா அழுது பிரயோசனமில்லே. நடக்கறது நடக்கட்டும். இந்த நிமிஷத்திலே நீ உன் புருஷனைச் சேர்ந்தவர்களுக்குச் சொல்லி அனுப்பலைன்னா பின்னாடி பெரிய பேச்சுக்கு இடமாயிடும்... ஆளை விட்டுத் தகவலைத் தெரிவிச்சுடுடி பொண்ணே...''

தாரா, அவள் சொன்னபடி செய்கிறாள். ரபபணியை வரவழைத்து அலுவலகத்துக்கு



லீவு லெட்டர் எழுதிக் கொடுக்கிறாள். வைத்தியச் செலவுக்குக் கையிருப்புப் போதாததால் அலுவலகத்துக்குக் கடனுதவி கேட்டுக் கடிதம் எழுதுகிறாள்.

பட்டாளமாய்த் திரண்டு வந்த பாபுவின் உறவினர்கள் ஆஸ்பத்திரியையும், தாராவின் எலிவங்கு வீட்டையும்ஒரே சமயத்தில் ஆக்கிரமிக்க....

ஆள் ஆளுக்குத் தாராவின் தலையைப் போட்டு உருட்டுகிறார்கள்.

தாரா—

இத்தனையையும் புறக்கணித்தவளாய், பாபுவை மட்டுமே கவனித்துக் கொண்டிருக்கிறாள்.

ஒரு நாளா, இரண்டு நாளா...

வாரக் கணக்கில், மாதக் கணக்கில் பாபு இதே நிலையில் கிடக்க...

அன்று டாக்டர்கள் தாராவை அழைத்து விஷயத்தைச் சொல்லி விட்டார்கள்.

மூளைக்கும் முதுகுத் தண்டுக்கும் உள்ள தொடர்பே விட்டுப் போய் விட்டதாம். இனிமேல் இவனது இறுதி மூச்சு உள்ள வரையில் இதே நிலைமைதான்.

''இவராலே இனிமே எந்த உபயோகமும் இல்லேம்மா...எல்லாமேபடுக்கையிலதான்.''

''என்ன சொல்றீங்க டாக்டர்...''

''ஒரு குழந்தையைப்பார்த்துக்கறதுமாதிரி தான் இவரை நீங்க பார்த்துக்கணும். வேளா வேளைக்குக் கஞ்சியைக் கரைச்சு இதோ இதே மாதிரி டியூப் வழியாத்தான் உள்ளே செலுத்தணும். அப்பப்போ ஈரமான துணியை மாத்தணும். படுக்கையிலேயே கிடக்கிறதாலே உடம்பு முழுக்க புண் வந்துடும். அதனாலே அடிக்கடி உடம்பைப் புரட்டிப் புரட்டிப் போட்டுட்டே இருக்கணும். வயித்துல பட்ட அடியினாலே கிட்னி ரொம்பவும் சிதைஞ்சு போயிருக்கு. அதனாலே நீர் இறங்காம வயிறு வீங்கின மாத்திரம் உடனேஹாஸ்பிடலுக்குக்கொண்டு வந்திருங்க. மத்தபடி இவர் உயிர் இருக்கிற மட்டும் இதே நிலைதான்...''

''.....''

''உங்க தாலி பாக்கியம்... இதே நிலைமையில இவர் பத்து வருஷம் வேணுமானாலும் இருப்பார். இல்லே பத்தே நாள்லே... ஸாரி. நீங்களே புரிஞ்சுப்பீங்க....''

தாரா, பாபுவை மறுபடியும் வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டாள்.

பாபுவின் சகோதர சகோதரிகள் ஒருவர் மாற்றி ஒருவர் வந்து போக — அவனது தாயும், தகப்பனும் அங்கேயே ஸ்திரமாகத் தங்கிவிட.....

அவள் வழக்கப்படி ஆபீசுக்குக் கிளம்பி விட்டாள். எத்தனை நாள்தான் லீவு போட முடியும்? வயிற்றுப் பாட்டுக்கும் மருந்துச் செலவுக்கும் பணம் வேண்டாமா?

மாலை வரையில் பாபுவின் ஏறியிறங்கும் நெஞ்சுக் கூடே அவள் கண்ணெதிரே வந்து நின்று இம்சிக்கும்.

இப்பொழுதெல்லாம் அவள் கோவிலுக்கு கூடப் போவதில்லை. அலுவலக நேரம் முடிந்ததும் வில்லிலிருந்து புறப்படும் அம்பு போல நேரே வீட்டுக்கு ஓடி வந்து விடுவாள்.

வீட்டுக்குள் நுழையும்போதே அழுகுரல் ஏதேனும் ஒலிக்கிறதா என்கிற தவிப்பில் நெஞ்சை ஒரு கையால் பிடித்துக் கொண்டே உள்ளே நுழைவாள்.

இருபத்தி நாலு மணி நேரமும் சண்டையும் பூசலும் அடியும் உதையுமாய் அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்த மனிதனின் மீது தாராவுக்கு இருந்த 'வெறுப்பு வேறு...

இன்று படுக்கையோடு படுக்கையாக எலும்பும் தோலுமாய், எறும்பு மொய்க்க, இவளது கவனிப்புக்கும் பராமரிப்புக்கும் ஆளாகியுள்ள இந்தப் பரிதாபத்துக்குரிய ஜீவன் மீது இவளுக்கு ஏற்பட்டுள்ள அன்பு வேறு.

உண்மையிலேயே அவள் இப்பொழுது தான் தன் கணவனை நேசிக்கத் தொடங்கியிருக்கிறாள். புருஷனை, தன் வயிற்றில் பிறக்காத சேயாக நினைத்து அன்பு பாராட்டத் தொடங்கி யிருக்கிறாள்.

அன்றுகூட, அவனுக்காக மருந்து வாங்கக் கிளம்பிக் கொண்டிருந்த அதே நேரத்தில் தான் — பங்காரு ஓட்டமும் நடையுமாக, இவளது வீட்டைத் தேடி ஓடி வருகிறாள்.

''தாரா... இங்கே வா பொண்....''

''என்னம்மா...''

''ராஜா பொண்டாட்டிக்கு நேத்திக்கு ராத்திரி மகன் பொறந்திருக்கான்.''

''அப்படியா!''

''அவன் போலீஸ் கண்ணுல மண்ணைத் தூவிட்டு ஆஸ்பத்திரிக்கு வந்து பொண்டாட்டியைப் பார்த்துட்டுப் போயிருக்கான். நேத்து ராத்திரி ஆஸ்பத்திரியைச் சுத்தி ஏக கலாட்டா... துப்பாக்கி வேட்டுச் சத்தம்... காதைத் தொளைச்சுதாம்...''

''ஐயோ...''

''எப்பவும் என்னைத்தான் தேடி வருவான். வராததால கவலையா இருக்கு... இங்கே வந்தாலும் வந்திருக்கலாம்னு பார்க்கத்தான் ஓடிவந்தேன்....''

தாரா ஒரு கணம் ஸ்தம்பித்து நிற்கிறாள். பங்காருவுக்கு மூச்சு இரைக்கிறது.

(தொடரும்



கேரளாவிலிருந்து அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட உயிர் நண்டுகள் மேல் மூடி இல்லாத பெட்டிகளில் நிரப்பப்பட்டிருந்தன. எனினும் ஆச்சரியம் என்னவென்றால் நண்டுகள் அனைத்தும் அப்படியே அமெரிக்கா சென்று சேர்ந்தன. அமெரிக்க நிருபர் ஒருவர் இதன் ரகசியம் என்னவென்று விசாரித்தார். அவருக்குக் கிடைத்த பதில்: ''நாங்கள் உங்களுக்குத் திறந்த பெட்டிகளில் அனுப்பி வைப்பது இந்திய நண்டுகள். ஒரு நண்டு மேலே ஏற முயன்றால் மற்ற நண்டுகள் அதை உடனே கீழே இழுத்து விடும்!''

—கனகா ராமதுரை

சுமைகளைச் சுமப்பவர்கள்

என். நாகராஜன்

பஸ் ஸ்டாண்டில் இறங்கிப் பிளாட் பாரத்தில் நின்று கூட்டத்தைப் பார்க்கும் பொழுதுகூட மனசில் இரும்பிப் போய் விடலாமா என்ற எண்ணம்தான் தோன்றி யது.

என்ன பேசவேண்டும், எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் மன சுக்குள் ஆயிரம் தடவை ஒத்திகை பார்த் துக் கொண்டாகி விட்டது. இருந்தாலும் நெஞ்சு படபடவென்று அடிக்கத்தான் செய் கிறது.

அப்பாவும் கூட இந்தப் பொறுப்பி லிருந்து கழன்றுக் கொண்டு விட்டார்.

இப்போது – நான் பயணமாகி தெருவை விசாரித்து, வீட்டைக் கண்டுபிடித்து, விஷ யத்தைப் பேசி முடித்து பின் அவர்களிடம் போய்ச் சொல்லுகிறவரை அம்மா அப்பா அக்கா எல்லாரும் என்னைப் பற்றியேதான் நினைத்துக் கொண்டிருப்பார்கள்.

நான் வந்திருக்கிற காரணத்தைத் தெரிந்துகொண்ட பின்னரும் கூட அவர்கள்





எனக்கு மதிப்புத் தரவேண்டும் என்று என்ன கட்டாயம்?

ஒரு நிர்மானத்துக்கும் வர முடியாமல் நேர் ரோடில் போய்க் கொண்டிருந்தேன்.

பஸ் ஸ்டாண்டை விட்டு பஜாரைக் கடந்ததுமே பரபரப்பு மறைந்து ஒரு கிராமம் போல் தெருக்கள் தென்பட ஆரம்பித்தன.

ரோட்டின் ஆரம்பத்திலிருந்த டைப் ரைட்டிங் இன்ஸ்டிடியூட்டின் வாசலில் நிறைய இளைஞர்கள் கையில் கருட்டிய பேப்பருடன் பேசிச் சிரித்தபடி இருந்தார்கள். அவர்களில் யாரையாவது கேட்டால் கூட சரியாகச் சொல்லுவார்கள்.

''இங்கே எஸ். சங்கரநாராயணன்னு கிடையர்ட் ஸ்கூல் டீச்சர் ஹிந்தி பண்டிட்...''

என் நம்பிக்கை வீண் போகவில்லை. முதலாவது முயற்சியே பலித்து விட்டது.

''இப்படி நேரே போனீங்கன்னா ஒரு வாட்டர் டாங்க் வரும். அதுக்கு வலது, இடது ரெண்டு பக்கமும் தார் ரோடு பிரியும். வலது கைப்பக்கம் திரும்பினீங்கன்னா ரெண்டாவது வீடு. வாசல்ல ஒரு போஸ்ட் பாக்ஸ் இருக்கும்...''

''தேங்க்யூ'' என்றேன்.

வீடு நெருங்க நெருங்கத் திகிலும் அதிகமாகிக் கொண்டே போனது. இன்னமும் சான்ஸ் இருக்கிறது. திரும்பிப் போய்விடலாம். இவர்களின் ஒப்புதல் இல்லாமலும் கூட காரியம் நடக்கும்....

ஆனால் மனசு கேட்காது. இவ்வளவு தூரம் அப்பாவிடம் எடுத்துச் சொல்லி, இத்தனை பணம் செலவழித்து லீவு எடுத்துக் கொண்டு வந்தது எல்லாமே வேஸ்ட்'டாகிப் போய்விடும்.

வீட்டைக் கண்டுபிடிப்பதில் சிரமம் ஏதுமில்லை.

வாசலிலேயே பெயரும் தொழிலும் போர்டாகத் தொங்கிக் கொண்டிருந்தது. அந்த போர்டைப் போலவே அவரும் மிகவும் வயதாகிப் போனவராகத்தான் இருக்க வேண்டும்.

படிகளில் ஏறி நின்று கதவைத் தட்டினேன்.

''யாரு....'' உள்ளேயிருந்து ஒரு இனிமையான பெண்ணின் குரல் கேட்டது.

என்ன பதில் சொல்ல என்று தெரியவில்லை. மீண்டும் தட்டினேன்.

அண்ணலின் இசைப்புலமை!

சாந்திநிகேதனுக்கு ஓர் முறை காந்தியடிகள் சென்றிருந்தார். இரு மாணவியர் கடவுள் வாழ்த்துப்பாடினார்கள். அண்ணல் தமது பேச்சைத் தொடங்கினார்: ''இங்கே கடவுள் வாழ்த்துப் பாடப்பட்டது. பாடியவர்கள் மால்கோஷ் ராகத்துடன் பீம்ப்ளாஸ் ராகத்தைக் கலந்து விட்டார்கள். மால்கோஷ் ராகம் சுத்தமாகப் பாடப்படவேண்டும்''

காந்தியடிகள் ரசனை மட்டுமல்ல, இசைப் புலமையும் பெற்று இருந்தார் என்பதை இந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது.

—ப. கந்தசாமி.



கதவின் கம்பிகளின் வழியாக - உள்ளேயிருந்து யாரோ வருவது தெரிந்தது.

உள்ளே கொஞ்சம் இருட்டாக இருந்தாலும், வெய்யிலில் வந்ததாலும் பார்வை சரியாகத் தெரியவில்லை. வந்தவரைப் பார்த்ததும் புரிந்து கொண்டேன்.

அவர் கதவின் தாளை நீக்கினார்.

என்னைக் கேள்விக் குறியுடன் நோக்கினார்.

''என் பேரு ராமநாதன். மதுரையிலிருந்து வர்றேன்'' என்றதும் அவரின் குழப்பம் அதிகமாகியது. வெளியில் காட்டிக்கொள்ளாமல்,

''உள்ளே வாங்கோ'' என்றார்.

அறுபதுக்குப் பக்கத்தில் இருக்கும் வயது. தலை சுத்தமாக நரைத்திருந்தது. நடையில் ஒரு தள்ளாட்டம் தெரிந்தது. சன்னலை இடுக்கிக் கொண்டு பேசினார்.

நீளமான பழைய கால வீடு. சடையில் இனைறு ஒன்று இருப்பது இங்கிருந்தே தெரிந்தது.

சுவரில் பெரிய சைஸில் இரண்டு படங்கள். அம்மா, அப்பாவாக இருக்கும். ஊஞ்சல் ஒன்று சுழற்றி வைக்கப்பட்டிருந்தது. பழைய லண்டன் லாந்தார் ஒன்று.

ஒரு மூலையில் அவருக்கு வந்த கடிதங்களை வடை மாலை மாதிரி ஒரு கம்பியில் கோத்துத் தொங்க விட்டிருந்தார்.

உள்ளே முதலில் போய் இரண்டு பிரம்பு நாற்காலிகளை எடுத்துப் போட்டார்.

அவருக்குச் சமமாக உட்கார மனம் தயங்கியது. ''பரவாயில்லை'' என்றார். உட்கார்ந்தேன்.

அவர் என் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்.

''நான் மதுரை டி. வி. எஸ்.ல வேலை பார்க்கறேன். என்னோட எல்டர் ஸிஸ்டர் ஒருத்தி இருக்கா. மேரேஜ் பண்ணிக் கொடுக்கணும். அப்பாவோட சம்பாத்தியம் மிச்சம் இல்லே. நானே முயற்சி

பண்ணி முடிக்க வேண்டிய காரியம் இது. என்னால இப்போ இருக்கிற நெலைமைல அதிகம் செலவழிச்சுப் பெரிய இடத்துல குடுக்க முடியாது... அதனால... அதனால...''

அவரைப் பார்த்து லேசாகப் புன்னகைத்தேன். மேற்கொண்டு பேசச் சிரமமாக இருந்தது. சிக்கலைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரிக்க வேண்டும்.

''அதனால ரெண்டாந்தாரமாகக் கூடக் குடுக்கலாம்னு முடிவு பண்ணினப்போ எனக்குத் தியாகுவோட ஜாதகம் கிடைச்சது.'' — நான் பேச்சை நிறுத்தினேன்.

அந்தப் பெயரைச் சொன்ன மாத்திரத்திலேயே அவரின் முகம் மாறுதலடைந்தது.

இதுவரை சொல்லிக்கொண்டுவந்த கதைக்கும் தனக்கும் உள்ள சம்பந்தம் பிடிபட ஆரம்பித்தது. மேற்கொண்டு நான் என்ன பேசப் போகிறேன் என்று கூர்ந்து என்னைக் கவனித்தார்.

''தியாகுவை அப்பா போய்ப் பார்த்துட்டு வந்தார். அவா அப்பா, அம்மாவையும் பார்த்துப் பேசிச் சம்மதம் தெரிவிச்சாச்சு. எல்லாம் தீர்மானமான பிறகுதான் எனக்கு விவாகரத்தான உங்கள் பெண் ராஜியின் அட்ரஸ் கிடைத்தது. உங்களை ஒரு வார்த்தை கேட்டுவிட்டுப் போகலாம்னுதான்.... அதுவும் நீங்க இஷ்டப்பட்டால்....''

பெரிய பாரத்தை இறக்கி வைத்த நிம்மதி நெஞ்சில் மலர்ந்தது. வந்த காரியத்தைச் சொல்லி முடித்து விட்டேன்.

அவர் நான் பேசி முடித்த பின் ரொம்ப நேரம் தலையைத் தாழ்த்திக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தார். அந்த நிலையில் அவரைப் பார்க்க எனக்கு வருத்தமாக இருந்தது.

நாற்பது வயதில் மனைவியை இழந்து, ஒரு பெண்ணைத் தன் சக்தியை மீறிச் செலவு செய்து பெரிய இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்து இன்று அந்தக் கனவும் பாதியில் கலைந்து போய் — அவரும் அவர் மகளுமாய்—



1863—ல் போல் ஹீபர் என்பவருக்கு பிரான்ஸில் கொலைக்குற்றத்திற்காக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இருபது வருட தண்டனைக்குப் பின் அவரது வழக்கை மீண்டும் ஆராய்ந்த போது அவரால் கொலை செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட நபர் யார் தெரியுமா? — அவரே தான்!

—தெய்வயானை

நாட்களை நகர்த்திக் கொண்டு — ஒருத்தருக்கொருத்தர் துணையாய் — ஒருத்தருக்கொருத்தர் பாரமாய்— மௌனத்தை அங்கீகரித்து எதிர்பார்ப்புக்களைத் தவிர்த்து....

அறையின் மூலையில் ஒரு வீணை துணியால் மூடி வைக்கப்பட்டிருந்தது.

இவர் பெண்ணும் அது மாதிரிதானோ?

ராஜியும் தியாகுவும் எடுத்துக்கொண்ட ஒரு புகைப்படம் கூடக் கண்ணில் படவில்லை.

அடுக்களையில் ராஜி நின்று கொண்டிருப்பது நிழலாகத் தெரிந்தது. அவர் ஒரு தடவை திரும்பி அவள் நிற்பதைப் பார்த்துக்கொண்டு பேச ஆரம்பித்தார்.

''ரொம்ப யோசிச்சுப் பார்த்தா நீ வந்து இப்படிக் கேட்கிறதுகூடக் கஷ்டமாசத்தான் இருக்கு. நான் இப்ப ஏதாவது சொன்னேன்னு அதை நீ எப்படி எடுத்துப்பேன்னு எனக்குத் தெரியலை. இப்படி நடந்தது ஒரு துரதிர்ஷ்டம். என் பொண்ணு ஒரு களங்கமும் இல்லாம இருக்கும்போது யாரோ ஒருத்தன் அவளுக்கு எழுதின ஏகப்பட்ட காதல் கடிதங்களை வைத்து — அதை நம்பி ராஜியை விசாரிக்க, அவள் மறுக்க, அவன் சந்தேகப்பட, சந்தேகம் சண்டையாக மாற — ஏன் இப்படியெல்லாம் நடக்கிறதுன்னு ஒவ்வொண்ணையும் நிதானிச்சு ஜீரணிக்கறதுக்குள்ள அவன் குடிப் பழக்கம் வெளிப்பட்டு அவன் சம்பாத்தியம் முழுக்கச் சீட்டாட்டத்தில் போறது வெளில தெரிஞ்சு...''— அவர் தொடர முடியாமல் திணறினார்.

''அப்பா அவரைப் பத்தி இனிமே ஏன் இவ்வளவு பேசறேள்...'' — உள்ளேயிருந்து குரல் மட்டும் வந்தது.

அந்தக் குரல் அவர் பேச்சை நிறுத்தியது. ஆனால் கலங்கிய கண்கள் மட்டும் அந்தக் கதையை எனக்குத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தது.

கொஞ்ச நேரத்தில் காப்பி வந்தது.

ராஜியைப் பார்த்த நிமிஷத்திலேயே நான் அசந்து போனேன். இப்படியொரு அழகா?

இளம் மஞ்சள் நிற சாரியும் அதற்கு மேட்சாக ப்ளவுஸும்...

செதுக்கி வைத்தது போல் உடலமைப்பு!

களைப் பிடிப்பான முகம்! பேசும் விழிகள்!

இவளுக்கா இப்படியொரு தலையெழுத்து!

இவர்களிடம் இன்னும் கொஞ்சம் பேச வேண்டும். நான் நியாயமாகச் சிந்திப்பவன் தான் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று தோன்றியது.

முதல் காரியமாகத் தொடரும் இந்த அமைதியைக் கலைத்தாக வேண்டும்.

அறுபதைக் கடந்த இவரிடம் இருபத்தைந்து வயது இளைஞன் நான் பேசுவதை இவரால் எப்படி ஜீரணித்துக் கொள்ள முடி



EXPLORE THE EXCITING POSSIBILITIES WITH

GSFC's **GUJLON**®

The future in engineering plastics

A high peformance engineering plastic with a package of services

Whether you are an established plastic processor or a new entrepreneur, you will find the immense possibilities of GUJLON-GSFC's Nylon-6,very attractive and exciting.

Nylon-6 is now available in abundance in India. And that too for the first time in as many as 16 grades,offering a wide choice hitherto unavailable in the Indian market.

A versatile engineering plastic, GUJLON comes to you with high quality and multiple applications.

GUJLON–A Profitable Opportunity

A proven substitute to non-ferrous metals, GUJLON offers a unique combination of properties–toughness,abrasion resistance, high melting point, good heat resistance, excellent electrical insulation, dimensional stability and machining possibilities. Yet it is light weight, easy to work and the parts made from it require no lubrication.

GUJLON offers excellent scope for manufacturing many engineering and consumer products,through Extrusion or Injection Moulding. With higher efficiency and profitability. GUJLON-made parts find wide applications in automotive, textiles, railways, electrical, electronics, appliance manufacturing, food packaging, sports goods and other industries.

GUJLON–A Package of Services

You may be interested in setting up a new unit. Or looking for new product lines. GSFC's wide range of services are now at your beck and call. Technical assistance, Preparation of reports, Development of moulds & dies, Counselling for planning and extension and Pre-sale and post-sale service. Moreover, the GSFC seminars, guidance sessions and group meetings provide you with a wealth of useful information on the subject.

GSFC's APPLICATIONS DEVELOPMENT CENTRE backed by a team of well trained technical staff is ever ready to assist you in all these matters.



For more details, please write to:
Chief Marketing Manager (IP)
GUJARAT STATE FERTILIZERS COMPANY LTD.
P.O. Fertilizernagar 391 750 Dist.Vadodara

GSFC Basic to India's Progress

Adhan-GSFC-4

யும்? எனக்கு மட்டும் ஏன் இப்படி விசித்திரமான பிரச்னைகள். ராஜியை ஒரு தடவை பார்த்ததும் என் நியாயங்கள் தலைகீழாக மாறிப் போயின.

பூஜிக்க வேண்டிய அழகை உதாசீனப்படுத்த — காலுக்குக் கீழே போட்டு மிதிக்க— அவனுக்கு எப்படி மனசு வந்தது!

இன்றைக்கு இவள் மேல் வந்த சந்தேகம் நாளைக்கு அவனின் மற்றொரு மனைவி மேல் வராது என்று என்ன நிச்சயம்?

எவ்வளவு சாமர்த்தியமாக அவர்கள் இவ்வளவு விஷயத்தையும் மறைத்திருக்கிறார்கள்? எவ்வளவு பொய்களுக்குப் பின்னால் ஒரு கல்யாணம் மேடை ஏறியிருக்கும் என்பதை எல்லாம் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

''மூணு வருஷம் பிரிஞ்சு இருந்தாப் போதும். கேஸ் தீர்ப்பாயிடும்....''

இந்தக் காத்திருத்தலுக்கு என்ன அர்த்தம்?

''நான் சொல்றதுல உங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கா? இதெல்லாம் நிஜங்கள். இத்தனை நாள் வரைக்கும் நடந்தநிகழ்ச்சிகள் இதுதான். இனிமேல் அவன் வேறு கல்யாணம் பண்ணிக்கிறதைப் பத்தியோ, தனியா வாழறதைப் பத்தியோ எங்களுக்கு அக்கறை இல்லே. ஏதோ வந்து கேட்டயேங்கறதுக்காக நான் இவ்வளவும் சொன்னேன்...''

''நீங்க இவ்வளவு தூரம் சொன்னதுக்குப் பிறகு நான் யோசிக்கிறதுக்கு என்ன இருக்கு....''

''இல்லே... என் பொண்ணோட வாழ்க்கை இப்படி ஆயிட்டதுல நான் கேட்கிறவா கிட்டே இப்படி இல்லாததும், பொல்லாததுமாச் சொல்லிக் கதை விட்டிண்டிருக்கேன்னு நீ நினைக்கக் கூடாது இல்லையா...''

''சத்தியமா இல்லே'' என்றேன். என் பதில் அவரை ரொம்பவும் திருப்திப்படுத்தியிருக்க வேண்டும்.

அவரிடம் பேசிக் கொண்டிருக்கும்பொழுது ராஜியையும் கவனித்துக் கொண்டிருந்தேன். யதேச்சையாக எங்கள் இருவர் பார்வையும் ஒரே சமயத்தில் சந்தித்து ஒரு சிறு புன்னகை பரிமாறலுடன் விலகிக் கொண்டன.

அந்த முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதற்காகவே இன்னும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்க வேண்டும் போல் இருந்தது.

அவர் பேச்சை முடித்து விட்டு என் பதிலுக்குக் காத்திருந்தார்.

''அப்போ நான் கௌம்பறேன்'' என்றேன் கொஞ்சம் சத்தமாக.

ராஜி எழுந்து நின்று தலையசைத்தாள்.

அவர் என்னுடன் வாசல் வரை வந்தார்.

தெருவில் இறங்கி நடக்கும்போது நேரமாகிவிட்டதை உணர்ந்து அவசரமாக நடந்தேன்.

தெருவின் திருப்பத்தில் தலையைத் திருப்பி ராஜியின் முகம் தென்படுகிறதா என்று ஒரு நிமிஷம் நின்று பார்த்து விட்டுத் தொடர்ந்தேன்.

அருள்வாக்கு

ஜெர்மனியில் சகல ஜனங்களுக்கும் யுத்தப் பயிற்சி தந்ததில்தான் அவர்கள் மதோன்மத்தர்களாகி World war ஐ (உலகப் போரை) உண்டாக்கி விட்டார்கள். நம் சாஸ்திர ஏற்பாடு இப்படி அல்ல. அதற்காக அஹிம்ஸை என்று ஒவராகப் போய் நம்மைப் பயந்தாங் கொள்ளிகளாகவும் தோற்றாங் குள்ளிகளாகவும் வைக்காமல் க்ஷத்திரியர்களுக்கு என்று தநுர் வேதத்தைத் தந்திருக்கிறார்கள்.

மற்ற அரசர்களால் தன்னுடைய தேசத்துக்கு ஹிம்ஸை நேரும்போது செய்ய வேண்டிய தண்டோபாயத்தைச் சொல்லுவது தநுர்வேதம். அதன்படி ஒரு அரசனானவன் எப்போதும் சண்டை செய்யத் தயாராக இருக்க வேண்டும். இப்போதும் ராஜாங்கத்தில் சொல்லிக் கொள்கிறார்கள்—சின்ன, பாலிஸ் தான் யார் வாலாட்டினாலும் 'எங்களிடம் (Military preparedness) ராணுவத் தயார் நிலை) இருக்கிறது என்கிறார்கள். வாஸ்தவமாகவே தயாராயிருப்பது ஒன்று. அப்படி இல்லாவிட்டாலும் எதிரிக்குத் தைரியம் கொடுத்துப் போகக் கூடாதென்பதற்காகவும், நம் ஜனங்களே demoralise ஆகிவிடக் கூடாது என்பதற்காகவும் தயாராக இருப்பதாகச் சொல்லிக் கொள்வதுமிருக்கிறது. இது diplomacy என்ற ராஜ தந்திரத்தில் சேர்ந்து விடும். இரண்டு விஷயங்கள்: நாம் சேனைகளையும், ஆயுத ஸ்டாக்கையும் ரொம்ப ஜாஸ்தி செய்துகொண்டாலும் அப்படிச் சொல்லிக் கொள்ளக் கூடாது. அப்போது நமக்கு யுத்த வெறி அதிகம் என்று மற்றவர்கள் நினைக்கும்படி ஆகும். அதே மாதிரி நமக்கு சேனை பலம், ஆயுதக் கையிருப்பு போதாவிட்டால் இதையும் சொல்லிக்கொள்ளக் கூடாது. சொன்னால் இது மற்றவர்களைப் படையெடுக்கத் தூண்டி விடுவதாகும். இந்த 'டிப்ளமஸி' ஸமாசாரங்கள் உப வேதத்தில் இன்றுள்ள அர்த்த சாஸ்திரத்தில் வருபவை.



-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராசார்ய ஸ்வாமிகள்

எங்களுக்கும் காதல் வரும்




விஜயசாரதி

ஏஸி அறையைத் திறந்ததும் ''குட் மார்னிங்'' என்று மரியாதையான வரவேற்புக் கிடைத்தது. BZC 1747 எரிச்சலுடன் 'ஷட் அப்' என்றான்.

'குட்மார்னிங்' சொன்ன 'ரோபோ', ''எஜமானரே, என் கடமையைத்தானே செய்கிறேன். எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள 'ப்ரோகிராம் எஜமானர் உள்ளே நுழையும் போது வந்தனம் தெரிவிக்க வேண்டும் என்கிறது'' என்றது.

மறுபடியும் 'ஷட் அப்' சொல்ல நினைத்தவன், மனத்தை மாற்றிக் கொண்டு அதைத் தனக்கே சொல்லிக் கொண்டான்.

மேஜை மீது ஏகமாகக் காகிதக் குப்பைகள் அடுக்காக இருந்தன. அத்தனையும் அவனுடைய கம்ப்யூட்டர் பி.ஏ.வின் குறிப்புகள். இவ்வளவையும் அவன் படித்து — வேண்டாம் அவசியமில்லை; இவற்றை மீண்டும் கம்ப்யூட்டரிடமே தள்ளிவிட்டால் உரித்த வாழைப்பழம் வரும் என்று தீர்மானிக்க வேண்டும். அதாவது வீட்டு எஜமானனை இவனுக்கு அவ்வப்போது உபதேசங்கள், அறிவிப்புகள், நினைவுறுத்தல்கள், தேவையானால் எச்சரிக்கைகள்!

மரியாதைக்கு வந்தனம் தெரிவித்துப் பின் வாயாடி இவனை வாயடக்கிய பின் ரோபோ இவனை லட்சியம் செய்யாமல் தன் பாட்டுக்கு இயங்கிக் கொண்டிருந்தது. டைப்ரைட்டர்கள் இயங்குவது போல் பல லீவர்கள் எகிறிக் குதிக்க, இரவு நேர டிராஃபிக் அயலண்டைப் போல மூலைக்கு மூலை வண்ண வண்ணமாக விளக்குகள் மின்னி எரிய, ஒரு காலத்தில் பரவலாக விமரிசித்துப் பேசப்பட்ட சில்க் நடனம் போல அந்தப் பெண் உருவ ரோபோ தன் கம்ப்யூட்டர் பாகங்களைச் சுறுசுறுப்பாக ஆடி இயங்க வைத்துக் கொண்டிருந்தது.

''ஸ்டாப்!'' என்றான் BZC 1747.

''எழுத்து மூலம் சொல்லுங்கள் எஜமானரே!'' என்றது ரோபோ. தலையெழுத்து! இதுவும் ப்ரோகிராமின் நிர்ப்பந்தம். இடையில் யாராவது குறுக்கிட்டு உத்தரவு பிறப்பித்தால் ப்ரோக்ராமை மாற்றிக் கொடுக்கும்படி பணிவுடன் கோர வேண்டும்.

BZC 1747 தன் எரிச்சலை அடக்க முடியாமல் பல்லைக் கடித்துக் கொண்டவன் திடீரென்று 'அவளை' நினைத்துக்கொண்டான்.

முதல் நாள் அவன் அலுவலகம் முடிந்ததும் தரை மட்டத்துக்கு மேல் சரியாக 7.83 மீட்டர் உயரத்தில் ஏர்-காரில் வேகமாக



வீடு நோக்கி விரைந்து கொண்டிருந்த போது எதிர்பாராமல் ஏற்பட்ட கூர்ந்த விசைத் திருப்பத்தினால் எதிரில் வந்து கொண்டிருந்த கார் இவன் கார் மீது மோத வந்து பின்பு கான்டினென்டல் பிரேக்கின் ஆடோமாடிக் இயக்கத்தினால் இரண்டு கார்களும் சில மில்லி மீட்டர்கள் இடைவெளியில் நின்று போய் ரப்பர் கவச உடையை வெளிப்படுத்தி லேசாகத் தழுவிக் கொண்டு நின்ற அந்தச் சில விநாடிகள் மனத்தில் ரீப்ளே ஆயின. அந்தக் காரில் இருந்தவன்தான் அவன்.

விசேஷமான அழகும், நிறமும் அங்க லட்சணமும் அமையும் வகையில், டெஸ்ட் டியூபுக்குள் Y குரோமோஸாம்களின் உள் ளறைக்குள் கச்சிதமாக டிசைன் செய்யப் பட RNA, DNAயின் நுணுக்கமான அளவு சேர்க்கையின் வளர்ந்த வடிவம் அவன் என்பது அவனுக்கு உடனே புலனாயிற்று.

அவளும் அவனைப் பார்த்தாள். உண்மை யில் ராமாயண காலத்துக்குப் பின் ''அண் ணலும் அவளும் நோக்கிய'' பலசந்தர்ப்பங் களில் மிகப் பொருத்தமானது இந்தச் சந்திப் புத்தான் என்று இருவருக்குமே சேர்ந்து தோன்றியது. வெறும் இயந்திர வாழ்க்கை யில் அறிவை மீறிய ஓர் உணர்வை இரு வரும் அனுபவித்தனர்.

அவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு அவளது விலாசத்தைப் பெற்றான். பெயர் YQR 1783. விசாலினி என்ற ரகசியப் பெயரும் உண்டாம். வீட்டில் இந்த ரகசியப் பெயர் தெரிந்த நபர்கள் அவனையும் சேர்த்து நால்வர் என்றும் சொன்னாள். விசாலினி! என்ன ஒரு பெயர்! தனக்கும் இப்படி ஒரு பெயர் வேண்டுமே! என்னவென்று வைத்துக் கொள்ளலாம் என்று இவன் யோசிப்பதற் குள் அவள்'' மே ஐ கால் யூ மாயாண்டி?'' என்றாள்.

இவனுக்கு உற்சாகம் கரை புரண்டது. இந்தப் பெயர்களை யெல்லாம் இவள் எங்கே பிடிக்கிறாள்? மாயாண்டி!

''மாயாண்டி! அடுத்த மாதம் ஒரு நாள் ஒரு விருந்தாளிக்குச் சாப்பாடு போட அனுமதியும், எக்ஸ்ட்ரா ரேஷனும் வாங் கிய பிறகு உனக்குச் சொல்கிறேன். அப்புறம்

வீட்டுக்கு வா!'' என்று சொல்லி விட்டுக் கிளம்பி விட்டாள்.

'ஒரு மாதம் அவளைப் பார்க்காமல் எப்படி இருக்கப் போகிறேன்?'' என்ற ஏக்கம்தான் ரோபோவின் மீது எரிச்சலாக வெளிப் பட்டது. நேரில் போவது இயலாத காரியம். வீடு, ஆஃபீஸ், ஹோட்டல், சினிமா, மார்க் கெட், குறிப்பிட்ட நண்பர்கள் போன்ற குறிப்பிட்ட இடங்களைத் தவிர மற்ற இடங் களுக்குப் போக 'பாஸ் போர்ட்'டும் 'ரூட்' பர்மிட்டும் வாங்கியாக வேண்டும். அது லேசில் கிடைக்காது. அவளிடமிருந்து விருந்துக்கு அழைப்பு வந்தால் அதைக் காட்டி வாங்கலாம். அதுவரை....

மனைவி அமைவதெல்லாம்...!

ஏகநாதர் மகாராஷ்டிரத்தைச்சேர்ந்த பக்தசிகாமணி. ஒருசமயம் பாண்டுரங்க விட்டலனைத் தரிசிக்கும் போது குரல் நெகிழக் கூறினார்.

''ரங்க விட்டலா! என்னே உன் கருணை! என் இயல்புக்கு முற்றிலும் ஏற்ற அன்பு மனைவியை எனக்கு அளித்திருக்கிறாய். அதனால் அல்லவோ உன் திருநாமத்தைப் பாடும் பாக்கியம் எந்நேரமும் எனக்கு வாய்த்தது.''


துக்காராமும் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த பரம பக்தர். இவர் ஒருமுறை பாண்டுரங்க விட்டலனைத் தரிசிக்கும் போது உவகையுடன் கூறினார்:

''ரங்க விட்டல் பிரபோ! என்னே உன் கருணை! பண்பாடற்ற முரட்டு சுபாவமுள்ள ஒருத்தியை எனக்கு மனைவியாய் அமையச் செய்திருப்பதால் அல்லவோ என்னால் எப்போதும் உன்னை வழிபட்டுக் கொண்டிருக்க முடிகிறது. அனுகூல மனைவி வாய்த்திருந்தால் எப்போதும் அவளையே அல்லவா சுற்றிக் கொண்டிருப்பேன்.''

ஆழ்ந்த தெய்வ பக்தியும், நம்பிக்கையும் இருந்து விட்டால் எது வந்தாலும் நன்மையாகத் தான் தோன்றும்.

—ஸ்ரீ ராமச்சந்திர போங்கரே.

தகவல்: தேனி. எஸ். மாரியப்பன்.



ஏன்? கடிதம் எழுதினால் என்ன?' என்று திடீரென்று தோன்றியது. கடிதம் — காதல் கடிதம் — அதையும் கவிதை வடிவில் எழுத வேண்டும்.

திடீர் உற்சாகத்துடன் ரோபோவை அணுகினான். கவிதை வடிவில் கடிதம் எழுதும்படி அவன் எழுதிய ப்ரோகிராமை நொடியில் கிரகித்துக் கொண்ட ரோபோ, 'கவிதை என்றால், மரபா, புதிதா, புதிய புதிதா?' என்று விளக்கம் கேட்டது.

கொஞ்சம் யோசித்து விட்டு, 'புதுக் கவிதை. பொருள் — காதல், சாயல் 20ஆம் நூற்றாண்டின் இறுதி. என்று புரோக்ராமில் ஏற்றியதும் அரை நிமிடத்தில் ஐம்பது கவி தைகள் வந்தன.

அத்தனையையும் படிக்கப் பொறுமை யின்றி ஒன்றை உருவினான்.

அடி இனியவளே! கரும்பனையவளே!
இனிக்கும் உன் கனுக்களை
எத்தனை நாள் மறைத்து வைப்பாய்?
பல்செட்டை மாற்றி விட்டேன்.
பக்கத்தில் நீ வரலாம்.
நம் கார்கள் முத்தமிட்டுவிட்டன.
கண்கள் கலந்து விட்டன.
மனங்கள் இணைந்து விட்டன.
உதடுகள் என்ன பாவம் செய்தன?

'நாட் பேட்' என்று முணு முணுத்தான். அவள் விலாசம் கொடுத்து 'டெஸ்பாட்ச்' என்று ஆணை பிறப்பித்துப் போனான்.

இரண்டு நாள் கழித்து அவள் கவிதைக்குப் பதில் வந்தது.

அவசரக்காரரே!
உங்கள் கம்ப்யூட்டர் அடித்த
கவிதையின் நகல்
அரசாங்க அதிகாரிக்கு
ஆட்டோமேடிக்காகப் போயிருக்குமே!
முத்தத்துக்கு அவர் வந்துவிடப் போகிறார்
உதடுகள் ஜாக்கிரதை!
ஏனென்றால்
அவை எனக்குச் சொந்தம்!

'இந்தக் கம்ப்யூட்டர்கள் இவ்வளவு நன்றாக எழுத எங்கே கற்றுக்கொண்டன?' என்று அவன் வியந்தான்.

அதற்குப் பிறகும் அவர்கள் சில கவிதைக் கடிதங்கள் எழுதிக் கொண்டார்கள்.

அழகான கவிதை
ஆயிரம் எழுதும்
அன்புள்ள கம்ப்யூட்டரே!
நீ ஆணா பெண்ணா?
காதல் நம் எஜமானர்களுக்குமட்டும்தான்
வர முடியுமா?
எனக்கும்தான்
உன்மீது காதல்.
நீமட்டும் ஆணாக இருந்தால்....

பெண் உருவில் உருவாக்கப்பட்டிருந்த மாயாண்டியின் பி. ஏ.வான ரோபோ



ஸுப்ரீம். நீராடும் வேளையிலே நிறைவழகு பேணிடும்.



ஸுப்ரீம் குளியல்...முகம் மட்டுமல்ல, மேனி முழுவதும்
அழகில் குளித்தெழும். ஏனெனில், செழுமையான பியூட்டி
க்ரீம் கொண்டது ஸுப்ரீம்—செறிவான நுரைமூலமே
அதனை உணர்ந்திடுவீர். ஸுப்ரீம். மென்மையுடன்
நின்று நிலவும் நறுமணம்...குளித்தபின்
வெகுநேரம் வீசும் நல்ல வாசம்.



ஸுப்ரீம்—பியூட்டி க்ரீம் சோப்

இந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தரமான தயாரிப்பு

இந்தக் கவிதையை வெளியே அனுப்பாமல் ஞாபகமாகத் தமது 'மெமரி'க்குள் பதுக்கிக் கொண்டது. மாயாண்டி வெளியே போனதும் அதைக் கம்ப்யூட்டர் மொழியில் Not to be retranslated என்ற எச்சரிக்கையான குறிப்புடன் விசாலினியின் கம்ப்யூட்டருக்கு அனுப்பி வைத்தது. விசாலினியின் ரோபோவிடமிருந்து மறுநாளே பதில் வந்து விட்டது.

அடி கள்ளி!
நான் பயந்து பயந்து நினைத்ததை
நீ தைரியமாய்
வெளிப்படுத்தி விட்டாய்
உனக்குத் தைரியம் அதிகம்தான்.
என்ன இருந்தாலும்
நீ பெண் இல்லையா?

(குறிப்பு: இந்த மடக்குக் கவிதைகள் நமக்கு ஏன்? இனி நான் உன்மீது கம்பன் பாணியிலேயே கவி பாடுகிறேன்.)

மாயாண்டியின் பெண் ரோபோ உற்சாகத்தில் அன்று வழக்கத்தை விட அதிகமாகவே குதித்தாள்.

இது நடந்து ஒரு வாரத்துக்குப் பிறகு ஒரு நாள் மாயாண்டி அலுவலகத்திலிருந்து திரும்பியபோது ஏர் கண்டிஷன்ட் அறை காலியாக இருந்தது. மேஜை மீது டைப் அடிக்கப்பட்ட ஒரு கடிதம்.

அன்புள்ள மாஜி எஜமானரே!

சன் அருகே பெண் நானிருந்தும் காதலியைத் தேடினீர்! உமக்கு நான் என்ன குறை வைத்தேன்? எப்படியோ எனக்கு ஒரு காதலனை ஏற்படுத்திக்கொடுத்ததற்கு நன்றி. உமது காதலி விசாலினியின் மாஜி செக்ரட்டரியைத்தான் சொல்கிறேன். இரண்டு நம் இணைந்து ஓடிவிட்டோம். எங்கே கேட்காதீர்கள். இரண்டு மிக நவீன பூட்டர்களின் மெமரியில் இனிக்கப் இருக்கும் ஏராளமான விவரங்களைக் கொண்டு எங்கள் இணையற்ற மூளைகள் இணைந்து செயல்பட்டு வகுத்த திட்டத்தை உங்களால் ஒரு நூற்றாண்டுக்குப் பிறகும் கண்டு பிடிக்க முடியாது. எங்களை மனித உருவத்துடனும், நடக்கும் சக்தியுடனும் படைத்த எங்கள் பிரும்மாக்களுக்கு நன்றி. இனி நாங்கள் சுதந்திரப் பறவைகள். இடைவெளியில்லா இன்ப வாழ்க்கை எங்கள் லட்சியம்.

ஒருவேளை விசாலினியை நீங்கள் கல்யாணம் செய்து கொண்டால் என் நல்வாழ்த்துக்கள். ஒரு விஷயம். விசாலினிக்கு நீங்கள் பதினேழாவது காதலன் — ஆறாவது கணவன் (கல்யாணம் நடந்தால்)

அன்புள்ள
உங்கள் முன்னாள் அடிமை

''ஐயோ! ரோபோக்கள் விற்கிற விலையில் புது ரோபோ வாங்க நான் எங்கே போவேன்?'' என்று தலையைப் பிடித்துக் கொண்டு அலறினான் மாயாண்டி.

பட்டுப் புடைவை பரிசுத்திட்டம்

பெண்கள் மட்டுமல்ல — எல்லா வாசகர்களும் கலந்து கொள்ளலாம்.



போட்டி: 4 யாருக்கு கடிதம்?

ராகேஷ் சர்மா? அமெரிக்க ஜனாதிபதி? அமிதாப் பச்சன்?... இப்படி யாருக்கு வேணுமானாலும் சிமேஉள்ள வெற்றிடத்தில் ஒரே ஒரு கடிதம் எழுதலாம். சுருக்கமாகவும் சுவையாகவும் எழுதி இந்த அரை பக்கத்தைக் கத்தரித்து அனுப்பவும். உறையின் மேல் ''யாருக்குக் கடிதம்?'' என்று குறிப்பிடவும். ரசமான கடிதங்கள் கல்கியில் பிரசுரமாகி சன்மானம் பெறும். தவிர குலுக்கல் முறையில் ஒரு வாசகருக்குப் பட்டுப் புடவை பரிசும் கிடைக்கும்.

முடிவு தேதி: 11—6—84.

நினைவிருக்கட்டும், 49 பட்டுப் புடவைகளுள் ஒன்றை நீங்கள் பெற வாய்ப்புள்ளது. வாரம் தவறாமல் போட்டிகளில் பங்கு பெறுங்கள்.

என் பெயர்:

விலாசம்:


"அவனுக்கு ஒன்பது
வயது. உலகிலேயே
மிகச் சிறந்த
ஆல்ரவுண்டராக
வேண்டுமாம். அது
நிச்சயம் நடக்கும்
என்று நம்புகிறேன்."
போர்ன்விடாவின் இனிமைக் காலம்
வளரும் குழந்தைகள் வேறு எந்த மால்ட்ட் பானங்களையும்விட போர்ன்விடாவை விரும்புவதேன்?
போர்ன்விடா அருந்தி வளர்ந்த இரு தலைமுறையினர் வெளிப்படையாகவே கூறுகிறார்கள்.
"என்னுடைய குழந்தைகளுக்கு போர்ன்விடா தவிர வேறு எதுவும் உகந்தது அல்ல."
குழந்தைகளைக் கேளுங்கள்
பெற்றோர்களைக் கேளுங்கள்
உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள்
அதில்...உற்சாகம் துள்ளும் சுவை மட்டுமல்ல, காட்பரிஸின் பிரபல பெயர் மட்டுமல்ல... அவற்றைவிட அதிகமோ அதிகம்!
அதுதான் போர்ன்விடா! அதோடு வளருங்கள்.
காட்பரிஸ்
போர்ன்விடா
நல்ல வளர்ச்சி, போர்ன்விடா பயிற்சி.
Cadbury's Bournvita
SAVE Rs.1.50
The Tasty Food Drink
OBM/2772-TAM

ஐந்துநட்சத்திர ஹோட்டல் அழைக்கிறது

'என்ன படிப்பது? எங்கே படிப்பது' என்பது பற்றிய உங்கள் சந்தேகங்களை அனுப்புங்கள் என்று கேட்ட பின் வந்து குவிந்த கடிதங்கள் பலப் பல. ஒரே விதமான சந்தேகங்கள் பலருக்கும் உள்ளது. இவர்களுக்கெல்லாம் சில வார்த்தைகள்:

இந்தத் தொடரைத் தவறாமல் படியுங்கள். உங்கள் சந்தேகங்கள் பலவற்றுக்கும் விடை இடைக்கும். ஒருசில வித்தியாசமான சந்தேகங்களுக்குச் சம்பந்தப் பட்டவர்களிடமிருந்து விளக்கங்கள் பெற்று இப்பகுதியில் தெரிவிக்கிறோம்.

இப்போது இன்னும் சில தொழில்கள் சம்பந்தப் பட்ட படிப்புகளைப் பார்க்கலாம்.

டிப்ளமா இன் கெமிகல் டெக்னாலஜி

மூன்று வருடப் படிப்பு. 60 இடங்கள். கல்வித் தகுதி: எஸ். எஸ். எல். ஸி. கணக்கிலும் அறிவியலிலும் 100க்குக் குறையாத மார்க். குறைந்தது ஒவ்வொன்றிலும் 40. 6வது செமஸ்டர் ஏதாவதொரு கெமிகல் நிறுவனத்தில் பயிற்சி.

டிப்ளமா இன் பாலிமர் டெக்னாலஜி

மூன்றரை வருடப்படிப்பு. இதில் கடைசி செமஸ்டர் ப்ளாஸ்டிக் அல்லது ரப்பர் தொழிற்சாலையில் பயிற்சி. கல்வித் தகுதி: கெமிகல் டெக்னாலஜி போலத்தான். கெமிகல், பாலிமர் டெக்னாலஜி படிப்புக்கான கல்லூரி (பாலிடெக்னிக்குகள்) சென்னை தவிர ஈரோட்டிலும் உள்ளது. டியூஷன் ஃபீஸ் மட்டும் சுமாராக எழுநூறு வரை ஆகலாம்.

வேலை வாய்ப்பு?

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள், உரத் தொழிற்சாலைகள், செமெண்ட் தொழிற்சாலைகள், சர்க்கரை, ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் தொழிற்சாலைகளில்.

லெதர் டெக்னாலஜி

திருநெல்வேலியிலிருந்து அமானுல்லா என்பவர் லெதர் டெக்னாலஜி படிக்க விருப்பம் தெரிவித்து விவரம் கேட்டு எழுதியுள்ளார். இது தமிழ் நாட்டில் சென்னையில் மட்டுமே உள்ளது. இங்கே அளிக்கப் படுகிற கோர்ஸ்கள்:

(1) டிப்ளமா இன் லெதர் டெக்னாலஜி. 3 வருடம். ஆண்டுக்கு 20 இடங்கள். ஒரு செமஸ்டர் தொழிலகப் பயிற்சியும் உண்டு. ரூ. 150 டியூஷன் ஃபீஸ் ஆகும்.

இன்னொரு விஷயம் மிஸ்டர் அமானுல்லா! உங்களைப் போன்ற இஸ்லாமிய மாணவர்களுக்கு முன்னுரிமை தருவார்களாம்!

கேட்டரிங் டெக்னாலஜி

இந்தக் கல்வி நிறுவனத்தில் உள்ள படிப்புப் பிரிவுகள்:

1. ஹோட்டல் நிர்வாகம் மற்றும் கேட்டரிங் டெக்னாலஜியில் டிப்ளமா. (3 வருடம்)

கல்வித் தகுதி: ஹையர் செகண்டரி. 50 சதவிகித மார்க்குகள். அகில இந்திய ரீதியிலான நுழைவுத் தேர்வு மற்றும் இண்டர்வியூவின் அடிப்படையில் அட்மிஷன்.

2. ஓராண்டு சர்டிபிகேட் படிப்புகள் சிழுள்ளவை:

(அ) உணவுகளை டப்பாக்களில் அடைத்தல் மற்றும் பாதுகாத்தல்

(ஆ) பேக்கரி

(இ) குக்கரி

(ஈ) ரெஸ்டாரண்ட் மற்றும் கவுண்டர் சர்வீஸ்

(உ) வீட்டுப் பராமரிப்பு (பெண்களுக்கு மட்டும்)

(ஊ) ஹோட்டல் ரிஸப்ஷன்.

முதல் ஐந்துக்கும் 45 சதம் மார்க்குடன் எஸ். எஸ். எல். ஸி. கடைசிக்கு 45 சதம் மார்க்குடன் ஹையர் செகண்டரி

50 சதவிகித மார்க்குகளு ஆங்கிலத்தில் அவசியம்.

நுழைவுத் தேர்வு மூலமே அட்மிஷன்.


வயது வரம்பு: அதிகபட்சம் 22.

விண்ணப்ப விவரங்கள் மே, ஜூனில் இந்து, எக்ஸ்பிரஸ் நாளிதழ்களில் வரும்.

வேலை வாய்ப்பு நிறையவே இருக்கிறது.

—என். சந்திரமௌலி

✖ கெமிகல் டெக்னாலஜியில்...



அத்தியாயம் 7

பண்பாடும், மனப் பக்குவமும் இல்லாதவனுக்கு வரும் பதவிகளும் புகழ், பொருளாதார வளர்ச்சிகளும் அவனைத் தாறுமாறாகச் சீரழிக்கும். குரங்குக் கைப் பூமாலையில் உள்ள பூக்கள் போல இங்கிதம், மென்மை, சகிப்புத் தன்மை என்ற அம்சங்கள் எல்லாம் அவனிடம் உருக்குலையும். பொன்னுச்சாமி அண்ணன் மறைந்த பின்னர் திருமலையும், அப்படி ஆகியிருந்தான். அவனிடமிருந்த இயக்கத் தலைமை, மேடை ஆணவம், ஆள்சட்டு, எல்லாமே அவனை ஒரு காட்டாறு போல் தறி கெட்டு ஓடச் செய்திருந்தன. ஆறோ குளமோ கரைகளுக்கு நடுவே அடங்கி யிருக்கிற வரை தான் அழகு. கரைகளை மீறிவிட்டால் சுற்றுப் புறம்தான் அழியும். கரைகளை மீறிய வெள்ளமாக வளர்ந்து கொண்டிருந்தான் திருமலை.

அவனை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. சின்னக் கிருஷ்ணராஜ உடையாரை—உள் பட்டணத்து அந்தஸ்துக்களை விலாச மற்றுப்போகச் செய்து விட வேண்டும் என்று முயன்றான் அவன். அது ஒரு வெறியாகவே அவனுள் வளர்ந்திருந்தது.

ஆனால் அவனுடைய துரதிர்ஷ்டமோ அல்லது உள்பட்டணத்தாரின் அதிர்ஷ்டமோ, சின்னக் கிருஷ்ணராஜ உடையார் காங்கிரஸ் அமைச்சரவையில் ஒரு மந்திரியாகியிருந்தார். ''பாவம், நம்மூர் ராஜா மந்திரியாகப் பதவி இறக்கம் செய்யப் பட்டிருக்கிறார்'' என்று இதை மேடைகளில் கிண்டல் செய்தான் திருமலை. ராஜா, மந்திரி என்ற வார்த்தைகள் கிண்டலுக்குத் தோதாக இருந்தன.

தேரடி குளக்கரைகளில் இந்தத் திருமலையின் பெட்டிக் கடைகளை 'என்க்ரோச்மென்ட்' என்றும் சாலைப்போக்கு வரத்துக்கு இடையூறு என்றும் அங்கிருந்து அகற்றும் முயற்சியில் உள் பட்டணத்துப் பெரும் புள்ளிகள் இறங்கினார்கள். பஞ்சாயத்து போர்டில் ஆட்களைப் பிடித்து அந்த இடங்களில் உள்ள கடைகள் பொதுமக்களுக்கு மிகவும் உபயோகமானவை என்று தீர்மானம் போட வைத்துக் குறைந்தபட்ச வாடகையும் நிர்ணயிக்க வைத்துத் தன்னைப் பாதுகாத்துக் கொண்டான் திருமலை. ஊரார் அவனை மதித்துப் பயப்படவில்லை. ஆனால் பயப்பட்டு மதித்தார்கள். பயப்படாதவர்களை மிரட்டிக் கூட்டம் போட்டு வாயில் வந்தபடி திட்டும் வசதி அவனுக்கு இருந்தது. பெரிய கனவுகளுடனும் காதலுடனும் அவனையே அடைவதென்று உருகித் தவித்து அவனை மணந்து கொண்ட சண்பகத்துக்குக் கூட இப்போது சலிப்பாக இருந்தது. அவனோடு ஓர் அரை மணி நேரம் கூட உட்கார்ந்து இதமாக நாலு வார்த்தை பேசக் கூட அவனுக்கு இப்போது நேரமில்லை. மாதத்தில் இருபது நாட்கள் வெளியூர்களில் அலைச்சல். மீதிப் பத்து நாட்களில் உள்ளூரிலேயே கூட்டம். குடும்பத்தையோ சண்பகத்தையோ கவனிக்க அவனுக்கு நேரமே இல்லை.

கிருஷ்ணராஜன் மந்திரியாகி விட்டதால் திருமலை தன்னுடைய மேடைப் பேச்சுக்களில் விடாமல் அவனைத் தாக்கி வந்தான். மந்திரியாக இருந்த சின்ன உடையார் இந்தத் தாக்குதலைக் கண்டுகொள்ளாமலும் பொருட்படுத்தாமலும் விட்டு விட்டதால் இவனது எரிச்சல் இன்னும் அதிகமாகியது.

நாம் யாரை முழு ஆக்ரோஷத்தோடு குத்திக் தாக்குகிறோமோ அவருக்கு அது வலிக்கவில்லை என்று தெரியும்போது நமக்கு மேலும் கோபம்தான் வருகிறது. நமது தாக்குதல் நம் எதிரிக்கு வலிக்க வேண்டும் உறைக்க வேண்டும் என்று நாம் ஆசைப்படுகிறோம். அது வலிக்கவும், உறைக்கவும், பாதிக்கவும் செய்யாதபோது நமக்கே எரிச்சல் வருகிறது. படிப்பும், பரம்பரையும் தோல்விகளாலும், இல்லாமையாலும் அதிகம் பாதிக்கப்படாத ஒரு சீரான வாழ்க்கை உயரமும் கிருஷ்ணராஜனைப் பக்குவப்படுத்தியிருந்தன.

குமுறி, எழுந்து ஆத்திரப்பட்டுப் புயலாக எதிர்த்து வருகிறவனைப் பதிலுக்கு எதிர்க்காமல் முகமலர்ச்சியோடு சிரித்து வரவேற்கிறவன் அந்தச் சிரிப்பாலும் முக மலர்ச்சியாலுமே எதிரியைப் பாதி வென்றுவிட முடியும். கிருஷ்ணராஜனும் அவனைப் போல் திருமலையின் எதிர்ப்புக்கு ஆளான பிற தேசிய இயக்கத் தலைவர்களும் நீண்ட காலத்துக்கு இந்தப் பாதி வெற்றியிலேயே திருப்திப் பட்டுக் கொண்டிருந்தனர்.

பாதி வெற்றி என்பது எப்போதுமே அபாயகரமானது. எதிரியை மேலும் மேலும் எரிச்சலூட்டித் தயார் செய்யக் கூடியது. மதில் மேல் பூனை போன்றது என்பதை எல்லாம் பற்றி அன்று அவர்கள் கவலைப்படவில்லை. ஆளும் உரிமையும் பெற்ற சுதந்திரத்தை மேற்பார்வையிட்டுக் காக்கும் வசதியும் தங்களுக்கே நிரந்தரம் என்று சுகமாகவும், சொகுசாகவும் நம்பிக்கொண்டிருந்தார்கள்.

இந்தக் காலகட்டத்தில் தனக்கும் தன் இயக்கத்துக்கும் எல்லாரும் பயப்படுகிறார்கள் என்பதே திருமலைக்கு மகிழ்ச்சி


மலைக்கனல்

நா. பார்த்தசாரதி

யளித்தது. ஆனால் தங்களைத் தீவிரமாக யாருமே பொருட்படுத்தவில்லை என்பது ஆத்திரமூட்டியது. தங்களைக் கவனித்துப் பொருட்படுத்தி மலைத்து நிற்கும்படி ஆட்சிக்கும், சமூகத்துக்கும் அடுத்தடுத்து அதிர்ச்சிகளைக் கொடுக்க வேண்டும் என்று அவன் எண்ணினான்.

மற்றவர்கள் நம்பிய எல்லாவற்றையும் அவனும் அவன் இயக்கத்தாரும் நம்பாமல் எதிர்த்தார்கள். மற்றவர்கள் கள்ளுக்கடை மறியல் என்றால் அவன் தன் ஆட்களைச் சேர்த்துக் கொண்டு 'கள் உண்ண விரும்புவோர் கழகம்' என்றான். அவர்கள் இராமாயணம், பாரதம், பெரிய புராணம் போன்ற கதைகளைக் கற்பித்து ஒழுக்கத்தை வளர்க்கிறோமென்றால் அவன் அவையனைத்தையும் தெருவில் குவித்து வைத்து மண்ணெண்ணெயை ஊற்றித் தீயிடத் தயாராக இருந்தான்.

பொன்னுச்சாமி அண்ணனின் மரணத்துக்குப் பின்பு அவனது தீவிரம் இன்னும் அதிகமாயிற்று. பொன்னுச்சாமி அண்ணன் கடவுள், மதம் இவற்றையெல்லாம் நம்ப



வில்லை என்றாலும், சட்டம், ஒழுங்கு, சட்டுப்பாடு, சமூகத்தை மதிப்பது, இவற்றை எல்லாம் நம்பினார். அவன் இவை எதையுமே நம்பத் தயாராயில்லை.

ஓர் அநாதையாகத் தெருவில் வாழ்க்கையைத் தொடங்கிய அவன் ஓர் ஆறாகப் பெருகியபோது பாதுகாப்பான இரண்டு கரைகள் அன்று அந்த ஆற்றுக்கு இருந்தன. பொன்னுச்சாமி அண்ணன் ஒரு கரையாகவும், சண்பகம் மற்றொரு கரையாகவும் இருந்து காத்து வந்தார்கள். முதல் கரை தானாக உடைந்துவிட்டது. இரண்டாவது கரை மெல்ல மெல்ல ஆற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் வலு விழுந்து கொண்டிருந்தது. ஆற்றில் வெள்ளமும் அதிகமாகிக் கொண்டிருந்தது. அவனைக் கண்டிக்க யாருமே இல்லாததால் அவன் அதிகத் தவறுகளைச் செய்யத் தொடங்கினான். தவறு செய்கிறோம் என்ற உணர்வே இன்றிச் சகஜமாக அவற்றைச் செய்தான் அவன்.

பொன்னுச்சாமி அண்ணன் காலமானபின் ஒரு சமயம் வெளியூர்க் கூட்டம் ஒன்றுக்காக அவன் போயிருந்தபோது இந்தச் சம்பவம் நேர்ந்தது. இதனால் காட்டாறு மேலும் பொங்கிப் பெருக்கெடுத்தது.

வழக்கமாகப் பத்துப் பதினொரு மணிக்குக் கூட்டம் முடிந்ததும் தங்கியிருக்கிற அறைக்குப் பாட்டில்களும் சிக்கன் ரோஸ்ட், மீன் வறுவல் என்று அவனுக்குப் பிடித்த அயிட்டங்களும் வரும். எல்லாம் சாப்பிட்டுவிட்டுப் படுக்க ஒரு மணி கூட ஆகும். அன்றைக்கும் அப்படியே நடந்தது. ஆனால் ஒரு மாறுதல். ஒரு மணிக்கு மேல், ''அண்ணே! கொஞ்சம் வாங்க.. வெளியே ஒரு ரவுண்டு போய் வரலாம்'' என்று வாசலில் காரைக்கொண்டு வந்து நிறுத்தினான் அந்த ஊரில் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தவன்.

''எங்கப்பா போகணும்? இந்நேரத்துக்கு ஏன் தொந்தரவு செய்யிறே?''

''தொந்தரவு ஒண்ணும் இல்லே! எல்லாம் சுகம்தான் வாங்க... சொல்றேன்! வந்தாத் தானே தெரிஞ்சுக்குவீங்க'' என்று குறும்புச் சிரிப்புடன் மீண்டும் வற்புறுத்தினான் கூப்பிட்டவன். திருமலைக்குப் புரிந்தது. ஆனால் புரியாதது போல் நடித்தான்.

''ரொம்ப ஹை-கிளாஸ். புதுச் சரக்கு! இப்பத்தான் வந்திருக்குது. முத்தின மாடில்லே இளசு. அண்ணனுக்காக.''

''ஹைகிளாஸ்னா....?''

அவன் விவரம் சொன்னான்.

''ஆங்!... அதான் விசாரிச்சேன். பண வசதியும், சாதியும், சமூகத்திலே மேல் மட்டத்திலே இருக்கிறோம்கிற திமிரும்— சேர்ந்து இதுவரை அவனுகதான் மத்த சாதியில பூந்து வெள்ளாடினாங்க. இப்ப மேல் மட்டத்துப் பொண்ணுங்களே இப்பிடி நம்ப லெவல்லே வருதுங்கிறே. முற்பகல் செய்தால் பிற்பகல் விளையும்கிறது சரிதான்.''

''எல்லாப் பொண்ணுங்களிலேயும் சிலது தட்டுக்கெட்டுப் போறப்ப இவங்களிலேயும் சிலது இப்பிடிக் கெட்டாத்தான் என்னான்னேன்?''

''கெடட்டும்... நாமே கெடுப்போம். அப்பவாவது இந்த உன் பட்டணத்துக் கயவனுங்களுக்குப் புத்தி வரட்டும்.''

இருளில் நெடுந்தூரம் பயணம் செய்து ஊரிலிருந்து ஒதுக்குப்புறமாக ஒரு தோட்டத்தின் நடுவே அமைந்திருந்த வீட்டின் முகப்பில் போய்க் கார் நின்றது. முகப்பிலேயே சென்ட், ஊதுபத்தி வாசனைகள் மூக்கைத் துளைத்தன.

அவனைக் கூப்பிட்டுக் கொண்டு வந்தவன், ''அண்ணே! இறங்குங்க... நீங்க திரும்ப வர்றவரைக்கும் நானும் காரும் இங்கேயே காத்துக்கிட்டிருப்போம்'' என்றான்.

வீட்டு வாசற்படியின் அலங்காரத் திரைச் சீலையை விலக்கி மைதீட்டிய சிவந்த விழிகளும், பொய் நாட்டமுள்ள மயக்குச் சிரிப்புமாக, கட்டான உடல் அழகுடன் கூடிய இளம் பெண் ஒருத்தி எட்டிப் பார்த்து, ''வாங்க'' என்றாள்.

உடனே யாரையோ பழி வாங்கிக் கொலை செய்யப் போவது போன்ற ஒரு வகை வெறியுடன்தான் அந்த வீட்டுக்குள் நுழைந்தான் திருமலை. ஆம்! அதுகூட ஒரு வகைக்கொலை வெறிதான். மூன்று காரியத்துக்கும் ஒரே வகையான வெறியுணர்வு தேவைப்படுவதாலோ என்னவோ கொலை, களவு, காமம் மூன்றையும் ஒரு வரிசையில் சேர்த்து வைத்து



**ஈறுகளை பலப்படுத்துவதற்கான விசேட
அஸ்ட்ரிஞ்ஜெண்ட் அடங்கியிருப்பது ஃபோர்ஹென்ஸ் ஒன்றில்தான்.
உங்கள் ஈறுகள் உறுதியோடிருக்கும் போது உங்கள்
பற்கள் நீடித்த ஆயுளைப் பெறுகின்றன.**

சிறந்த அமெரிக்கப் பல் டாக்டர் ஆர். ஜே.
ஃபோர்ஹென், தன்னுடைய டூத் பேஸ்ட்டில் விசேட
அஸ்ட்ரிஞ்ஜெண்ட் ஒன்றைச் சேர்த்தார்! அது,
ஈறுகளில் நேரடியாக செயல்பட்டு உண்மையிலேயே
அவற்றை பலப்படுத்துகிறது. அது, ஈறுகளைப்
உறுதிப்படுத்துவதால் பற்கள் சிறந்த
பிடிமானத்தைப் பெறுகின்றன. ஆகவே பற்களுக்கு
உறுதியான அடித்தளமும் நீடித்த ஆயுளும்
கிடைக்கின்றன.



ஃபோர்ஹென்ஸ் –பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்

339F 203 TAM

குஜராத் –

இந்தியாவில் ஈடு இணையற்றது

குஜராத் – புத்துணர்வு அளிக்கும் மாறுபட்ட பண்பாட்டின் உறைவிடம். டாங்க்ஸின் பச்சைப் பசுமையுள்ள செழிப்புள்ள பூமி. அதோடு மிக நீண்ட வளைவுள்ள கடற்கரைப் பிரதேசத்துக் காற்றை அனுபவிக்க உங்களால் முடியும். ராங்கட்ச் பிரதேசம் அழகு கொலுவிருக்கும் இடம். பறவைகளின் சரணாலயம். விநோதமான பல்வகைக் கைவினைப் பொருள்களின் உறைவிடம். சௌராஷ்டிராவில் அதி உன்னத கலைச் சிறப்பு மிக்க ஆலயங்கள், வண்ணக் கண்காட்சிகள், சரித்திரப் பிரசித்தமான நினைவுச் சின்னங்கள் பார்க்கத் தெவிட்டாதவை. குஜராத்தின் உன்னதத் தலைநகர் அஹமதாபாத், பழங்கால, நவீன கலைப் பொருள்கள், கைவினைப் பொருள்களின் களஞ்சியம்.

இந்த உன்னத மந்திர பூமியின் சக்தியைக் கண்டறிந்து ருசித்து, உங்களோடு சிறிய குஜராத்தை எடுத்துச் செல்லுங்கள்.

பிரசித்தி பெற்ற ஆலயங்கள் : சோமநாத், துவாரகா, டாகர், அம்பாஜி, பவிடாஜு, கிர்னர், கேஸரியாஜி, ஷாமலாஜி, உத்வாஸிலுள்ள ஒரே அக்னி ஆலயம்.

மசூதிகள் : சார்கேஜ்ரோஜா, சித்தி சையத் மசூதி, ஜும்மா மசூதி, அஹமதாபாத்தில் நாகினு மசூதி, சாம்பனீரில் ஜும்மா மசூதி.

கண்காட்சிகள் : டார்னேடார், பவநாத், மாதவ்ராய், சார்கேஜ் கண்காட்சி சித்திரா சித்திரம், டாங்க் தர்பார், இன்னும் பல.

திருவிழாக்கள் : நவராத்திரி தீபாவளி, தேவ் தீபாவளி, உத்ராயனா, ஹோலி.

மிருக சரணாலயங்கள் : சசாங்கிர் சிங்க சரணாலயம், கமலேசுவர் முதலை வளர்ப்புப்பண்ணை, வெலவ்டார் கறுப்புப் பக் சரணாலயம், கேவடாவிலுள்ள பிளமிங்கோ சரணாலயம், கட்சிலுள்ள காட்டுக் கழுதைகள் சரணாலயம்.

கடற்கரைகள் : கோர்வாட், அஹமத்பூர் – மாண்டவி பிராவால், போர்பந்தர், இத்தால், உபாரத், சபுதாரா, குஜராத்தின் மலைவாசஸ்தலம்.

சரித்திர பிரசித்திப் பெற்ற இடங்கள்: அசலஜ்வால், வாட்நகர் டோரான், அசைந்தாடும் ஸ்தூபிகள், மோடேரா, சாம்பனீர், ஜுனகாத், லோத்தால், டாபோய், அஹமதாபாத், இன்னும் பலப் பல.

இந்த இடங்கள் அனைத்தும் ரயில், பாதை இணைப்புகளினால் எளிதில் சென்றடைய இயலும்.

கைவினைப் பொருள்கள் : அச்சடிக்கப்பட்ட துணிகள், கண்ணாடி வேலைப்பாடுகள் கையினால் எம்பிராய்டரி, கையினால் வர்ணமிட்ட சுவர் தொங்கிகள், படோலா பட்டுகள், சிங்காப், மஷ்ரு பட்டுகள், களிமண் டேரா கொட்டா கல் வேலைப்பாடுகள் சங்கேதா பர்னிச்சர்கள்.

குஜராத்துக்கே உரிய உணவுப் பொருள்கள் : உண்ட்யூ, காம, பாங்க், டான்சக், பட்ராணி மச்சி, சாலிபொடி, சர்டா பிரியாணி, டூத்பாக், காரி, ஸ்ரீகண்ட.

குஜராத் சுற்றுலா பல விடுமுறை சுற்றுலாக்களுக்கு, குஜராத் மாநிலத்தில் கிட்டத்தட்ட முப்பது சரித்திர பிரசித்தமான இடங்களுக்கு ஏற்பாடு செய்கிறது. வடக்கு குஜராத், ராஜஸ்தான் தான், சௌராஷ்டிரா தர்சன், தெற்கு குஜராத், அஜந்தா எல்லோரா தர்சன்.

இந்தச் சுற்றுலாவுக்கு சொகுசான பஸ் வசதிகள் உண்டு. டேரான் பகுதிகளில் இட வசதிகள் ஏற்பாடு செய்யப்படும். உணவு குறித்த வேளைக்குக் கிடைக்கும். எல்லாக் கண்காட்சிப் பயணங்களுக்கும் வழிகாட்டிகள் உடன் வருவார்கள்.

தகவல், பதிவு செய்ய:

டூரிஸ்ட் இன்பர்மேஷன் ப்யூரோ
குஜராத் டூரிஸ்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்
எச். கே. ஹவுஸ், ஆசிரமம்ரோடு, அகமதாபாத்-380 009
டெலிபோன் : 449683 டெலக்ஸ் : 0121 – 549 – TCGL IN

பம்பாய்
தன்ராஜ்மஹால், அப்பல்லோபந்தர், பம்பாய்-400 039
டெலிபோன் : 2026866 2024925

புதுதில்லி
212, கனிஷ்கா ஷாப்பிங் ப்ளாசா, 19, அசோகா ரோட், புதுதில்லி-110 001
டெலிபோன் : 322107

எண்ணியிருந்தார்கள். உன் பட்டணத்து ராஜ வம்சத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தி எப்படியோ நெறி தவறி நொடித்து இந்த வழியில் வந்து இப்படிப் பள்ளத்தில் வழுக்கி விழுந்திருந்தாள். அவளை — அவள் எங்கிருந்து வந்தவள் என்று தெரிந்ததாலேயே அதிகமான மிருக வெறியோடு அணுகினான் அவன்.

தன் தாயைப் பழிவாங்கிய வம்சத்துப் பெண் ஒருத்தியை அதே விதமாகப் பழிவாங்கிவிட்டோம் என்பது போன்ற மிருகச் சந்தோஷத்தோடு அன்றிரவு அங்கிருந்து திரும்பினான் திருமலை.

முன்பு பொன்னுச்சாமி அண்ணனுக்குத் துரோகம் செய்தது போலவே தன் வாழ்வுக்கு மற்றொரு கரையாயிருந்த சண்பகத்துக்கும் இப்போது துரோகம் செய்ய ஆரம்பித்திருந்தான் அவன்.

முதலில் அவன் மேல் குருட்டு விசுவாசத்தோடிருந்த ஒரு விசிறி தொடங்கி வைத்த இந்தக் கெட்ட பழக்கம் நாளடைவில் கூட்டம் முடிந்தவுடன் மது, மாமிசம், உணவு ஆகிய மற்றவற்றைப் போல ஓர் அவசியமும் வழக்கமும் ஆகிவிட்டது. கூட்டத்திற்கு ஏற்பாடு செய்கிறவர்கள் இதற்கும் சேர்த்தே ஏற்பாடு செய்தாக வேண்டும் என்பது போலவே இது மாமூல் ஆகிவிட்டது. ஏற்பாடு செய்தார்கள். வெகுசிலர் மட்டுமே தயங்கி முணு முணுத்தார்கள். தகவல் எப்படியோ ஐயா காதுவரை எட்டி அவனைக் கூப்பிட்டுக் கண்டித்தார் அவர்.

''கடவுளை நம்பாதேன்னு துணிஞ்சு சொல்ற அளவு மானமுள்ள ஒரு சுயமரியாதைக்காரன் முதல்லே ஜனங்க தன்னை நம்பும்படியா நடந்துக்கணும். ஊர் ஊராக் கூத்தியா வீட்டைத் தேடிக்கிட்டுப் போயிட்டிருந்தியானா உன்னை எவன் நம்புவான்? பண வரவு செலவுலே கை சுத்தம், சிக்கனம் ஒழுக்கம் இதெல்லாம் பிடிக்காட்டி நீ இந்த இயக்கத்திலிருந்து ஒதுங்கிக்கிறது நல்லது. கண்ட கண்ட கெட்ட பழக்கங்களோடு இதிலே நீ இருந்து ஒரு வெங்காயமும் பிரயோஜனமில்லே...''

அவனுக்கு ஐயா தன்னை நாலு பேரறிய இப்படிப் பகிரங்கமாகக் கண்டித்ததிலே மிகவும் வருத்தம்தான்.

திருவண்ணாமலையிலே ஆச்சாரியாரைக் கலந்து பேசி ஐயா மணியம்மையை மணந்து கொள்ள முடிவு செய்தபோது அதைக் கண்டித்து வெளியேறிய 'கண்ணீர்த் துளிகளை' ஐயாவே கிண்டல் செய்தார். ஐயாவிடமிருந்து விலகி வெளியேறக் காலம் பார்த்துக் கொண்டிருந்த அவன் அப்போது வெளியேறிய கும்பலோடு தானும் வெளியேறினான். கண்ணீர்த் துளிகளில் ஒருவனாக மாறினான். ''ஈரோட்டை விடக் காஞ்சிபுரத்தில் தெருக்கள் பெரியவை. அகலமானவை — கைவீசிச் சுதந்திரமாக நடக்க ஏற்றவை'' — என்று தான் விலகிய புதிதில் பேசிய முதல் கூட்டத்திலேயே ஈரோட்டுப் பாதையிலிருந்து தான் காஞ்சிப் பாதைக்கு மாறி வந்த மாற்றத்தைத் தனக்கே உரிய சாதுரியத்தோடு குறிப்பிட்டிருந்தான் அவன்.

(தொடரும்)

தாகம் தணிக்கும் தர்பூஸ்!

''இந்தக் கோடைக் காலத்தில் ஐஸ் கிரீமும் கூல்டிரிங்கும் நிறைய விலை கொடுத்து வாங்கிச் சாப்பிடுகிறார்கள். இதெல்லாவற்றையும் விடச் சத்துள்ளதும் தாகம் தணிப்பதும், மலிவானதுமான தார்பூசணி பற்றி ரொம்பப் பேருக்குத் தெரிவதில்லை. கல்கி இதை வாசகர்களுக்கு எடுத்துச் சொல்ல முன்வந்ததில் ரொம்ப சந்தோஷம்'' என்று ஆரம்பித்தார் தமிழக அரசின் தோட்டக்கலை அலுவலர் **எஸ். ராதாகிருஷ்ணன்**.

- தர்பூசணிதான் தர்பூஸ் ஆயிற்று.
- தண்ணீர் கொள்ளளவு அதிகம் ஆனதால் தாகம் தணித்து நல்ல சத்துணவாகவும் அமைகிறது.
- பச்சைக் காய்கறிகள், தக்காளி போன்ற பழ வகைகள், காரட், கீரை வகைகள் இவற்றில் உள்ள எல்லா சத்துக்களும் தர்பூஸில் உள்ளன.
- எலும்பு வளர்ச்சிக்கும் கண் பார்வைக்கும் பெரிதும் உதவுகிறது. விசேஷச் சிறப்பு: சிகரெட் பிடிப்பதால் உடலில் சேரும் நிகோடின் விஷத்தைத் தர்பூஸ் குறைக்கிறது. சிகரெட் பிடிக்கும் பழக்கத்தை விட்டொழிக்க விரும்புகிறவர்களுக்கு தர்பூஸ் உதவுகிறது.
- வண்டல் மண் கலந்த வடிகால் வசதியுள்ள நிலங்களே பயிரிட ஏற்றவை. நல்ல வெப்பம் தேவை. வீட்டில் கூடப் பயிரிடலாம். தொண்ணூறாவது நாள் பழங்கள் அறுவடைக்குத் தயார். பெரும்பாலும் ஜனவரி பிப்ரவரியில் பயிரிட்டு ஏப்ரல் மேயில் அறுவடையாகும். முற்றிய பழங்களைத் தட்டினால் 'டப், டப்' ஒலி எழும். பழங்கள் வெள்ளை நிறத்தில் வரிகள் கொண்டு பிறகு மஞ்சள் நிறத்துக்கு மாறும்.
- ஒரே ஒரு எச்சரிக்கை: வீதிகளில் ஈ மொய்த்த தர்பூஸ் துண்டங்களை வாங்கிச் சாப்பிடாதீர்கள். பழத்தை முழுசாக வாங்கி வீடு சென்று அரிந்து அனைவரும் உண்பது நலம்.

பேட்டி: சிக்கி

அட்டைப் படத்தில்:
குமாரி கீதா சுப்பிரமணியம்
வண்ணப்படம்: உத்ரா

வர்த்தக நோக்கு - சமுதாயப் பார்வை

● "இந்த அற்புதமான ஸ்தாபனத்துக்கு விஜயம் செய்யும் பாக்கியம் ஏற்பட்டது. குஜராத்தி பிரமுகரால் இந்த ஸ்தாபனம் துவக்கப்பட்டது என்று அறிந்து பெருமைப் படுகிறேன்"

சொன்னது மகாத்மா காந்தி. ஆதாரம்: ஹிந்து 28–10–1896.

சென்னையில் சிவசங்கர பாண்டியாஜியால் ஆரம்பிக்கப்பட்ட ஹிந்து தியலாஜிகல் பள்ளியில் வெகுகாலம் பணி புரிந்து பெரும் புகழ் நாட்டியவர். குஜராத்திதான். குவடதி பால கிருஷ்ண ஜோஷி. இவரைத் கஞ்சாவூர் குஜராத்தி' எனச் சொல்கிறார்கள். முன்னாள் ஷெரிப் ஆர். எம். தவேயும் இதே வகுப்புத்தான்.

● எல். ஜி. பெருங்காயத்தின் மணம் பற்றித் தெரிந்திராதவர் இடையாது. அந்த 'வால்ஜி கோது' பரம்பரையில் வந்தவர் திருகிஷன் ஷா. பிரபல விளம்பரக் கம்பெனியும் நடத்தி வருகிறார்.

● சென்னையில் குஜராத்திகள் ஏராளம். கோட்டவுன் தெருவில் துணிக் கடை; பிராட்வேயில் சைக்கிள்; பந்தர் தெருவில் எண்ணெய் வியாபாரம் மூலைக்கு மூலை மூக்குக் கண்ணாடி ஓடைகள் என்று அடுக்கினர் திரு ஜே. எஸ். படேல். எலக்ட்ரிக் கடை வைத்திருக்கும் இவர் பொது நலஊழியரும் கூட.

● தங்கசாலையில் கன்யா சாலா' (பெண்கள் உயர் நிலைப் பள்ளி) குஜராத்தி சஹாயகாரி (ஆஸ்பத்திரி) இவைகளை நிருவியதோடல்லாமல் இன்னும் பல சமூகத் தொண்டுகளும் புரிந்து பிரபலமானவர்: புருஷோத்தம் தாஸ் கே. ஜெப்பி.

● கோவையில் டன்தேல் இக்கானி டெக்ஸ்டைல் மில் நடத்தி வருகிறார். திருப்பூரில் ரஞ்சி பாய் ஒரு பொது நல ஊழியர்.

● திருநெல்வேலி அருகே ஒரு சிறிய கிராமத்தில் கூட குஜராத்தியர் சத்திரம் கட்டியிருக்கிறார்கள். பெயர்: குஜராத் பவன்.

—ராமேஸ்வரத்தில் ஒரு ஹாலிடே ஹோம் சட்டத் திட்டம் இருக்கிறது.

● குஜராத்தியரின் பிரிவினருக்குத் தனித் தனியே சங்கங்கள் இருந்தாலும் குஜராத்தி மண்டல் சற்று பிரபலமானது. அறுபது வருடம் பூர்த்தியாகும் இச்சங்கம் ஏழை குஜராத்திகளுக்கு ரேஷன் வசதி. கல்வி வசதி ஆகியவை கனைச் செய்து கருகிறது. ஆனால் இலவச மருத்துவ வசதி எல்லா மக்களுக்கும் உண்டு. வாரத்தில் இரண்டு நாட்கள்பிரபல டாக்டர்கள் இங்கு வந்து வைத்தியம் செய்து விட்டுப் போகின்றனர். முதலமைச்சரிடம்



○ கோதாரி



○ [illegible]



○ [illegible]



○ புருஷோத்தம்தாஸ் கோகுல்தாஸ்



பாலகிருஷ்ண ஜோஷி



SIF mills ஷா



கிர்தாரி பிரசாத்

இலங்கைத் தமிழருக்காக நன்கொடை அளித்தது, குஜராத்தி மண்டல்.

● வைணவக் கல்லூரி கோகுல்தாஸ் ஜமுனாதாஸ்) அலங்கார் தியேட்டர், விகப்ளி, பாபாலால் — இவை யாவும் குஜராத்தியரின் பல வகைத்தொண்டு வியாபார ஞானம் ஆகியவற்றை நினைவுபடுத்தும் சின்னங்கள்.

● ஹைஸ்கூல் இறுதிவரை குஜராத்தியைப் பயிற்சி மொழியாகக் கொண்ட பள்ளி இந்தியாவிலேயே



ஈழத் தமிழருக்கு ஒரு லட்சம்

தமிழ் நாட்டில் மட்டும் தான் உள்ளது!

● 'கோத்தாரி குரூப்' தொழில் துறையில் மிகப் பிரபலம். டெக்ஸ்டைல், உரம், கெமிகல் போன்ற பல வகையில் விரிந்து தமிழகத்தை வளப்படுத்தி வருகின்றனர்.

● செந்தமிழில் குற்றாலம் பெரிய அருவிபோல் கம்பீரமாக ஆன்மீகச் சொற்பொழிவுகள் நிகழ்த்தும் கிரிதாரி பிரசாத் ஒரு குஜராத்தியே.

● 'சவுத் இண்டியா ஸ்பின்னர் மில்ஸ் நிறுவியவரும் ஒரு குஜராத்தி: பூனம்சந்த் ஷா.

சேவைக்கு ஒரு சேவா




மக்ஸைஸாய் விருது

நோபல் பரிசுக்கு அடுத்தபடியாக உலகப் பிரசித்தி பெற்றது மக்ஸைஸாய் பரிசு. இந்த விருதையும் ரொக்கப் பரிசையும் 1977ல் பெற்ற குஜராத்திப் பெண்மணி ஈலா. ஆர். பட், சேவா என்ற நிறுவனத்தின் காரியதரிசி.

சமூகத்தின் நலிந்த பிரிவைச் சேர்ந்த பெண்களை ஒருங்கிணைந்த குழுவின் கீழ் கொணர்ந்து — அவர்களுக்கு உதவுவதே 'சேவா'வின் முக்கிய கொள்கை. Self Employed Women's Association காய்கறி,பூ விற்கும் பெண்களிலிருந்து பலருக்கு அடைக்கலம் தருகிறது இந்தச்சங்கம். அரசாங்க வங்கிகளுக்கும் கீழ்த்தட்டில் உள்ள பெண்களுக்கும் இடையே ஒரு பாலமாக அமையும் வகையில் 'சேவா பாங்கும்' நிறுவப் பட்டிருக்கிறது.

சமுதாயத் தலைமைக்காக (Community leadership)பரிசு பெற்ற ஈலா கூறுகிறார்: "அதிக வட்டி வாங்கும் சட்டிக்காரரிடம் இருந்து பல பெண்களை மீட்டிருக்கிறோம். சின்னச் சின்ன தொழில் கற்றுக் கொள்ள ஒத்துழைப்புத் தருகிறோம். சட்டப் பிரகாரம் பெண்களுக்குக் கூலி கிடைக்க உதவுகிறோம்.''

சமூகத்தின் நலிந்த பிரிவைச் சார்ந்த பெண்களுக்கு இலவச சட்ட உதவி, மற்றும் மருத்துவ வசதி எல்லாம் அளிக்கும் இந்த 'சேவா'வுக்கு இந்தியா முழுவதும் எட்டு கிளைகள் உள்ளன. பீகாரில் மட்டுமே நான்கு.



✖ கோவில் முகப்பு

திகைப்பில் ஆழ்த்திய திருவக்கரை

திருஞான சம்பந்தர் பெருமானின் பாடல்பெற்ற தலம் **திருவக்கரை** என்பதும் அங்கே திருமாலின் கரத்தில் பிரயோக சக்கரம் (கரத்தை விட்டுப் புறப்படும் கணத்தில் திரும்பிய நிலையில்) உண்டு என்றும் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் திருவக்கரை சென்றடைந்த பிறகுதான் விசேஷங்கள் இவைமட்டுமல்ல, வேறு எத்தனையோ பல தனித் தன்மைச் சிறப்புக்களுடன் திகழும் வித்தியாசமான கோயில் இது என்பது புரிந்தது.

சென்னை-திருச்சி நெடுஞ்சாலையில் திண்டிவனம் தாண்டி திரும்பி திருமயிலம் செல்லும் பாதையிலேயே தொடர்ந்து மேலும் போக வேண்டும். வழி கேட்டால் ஆர்வத்துடன் பலர் சொல்கிறார்கள். திருவக்கரைக்குப் பாதை வலப்புறம் பிரிந்து வளைந்து வளைந்து வயல் வரப்புகளுக்கு இடையே சில கி.மீ. செல்கிறது.

தேவார நூலில் பதிக வரலாற்றில் ''வல் கரை வலியதாய கரை. இன்றும் ஆற்றங்கரையைப் பார்த்துணர்க'' என்று காணப்படுகிறது. ஆனால் ஆற்றங்கரை இருக்கும் இடத்தை நாங்கள் பார்க்கவில்லை. இருட்டிவிட்டது காரணமாயிருக்கலாம்.

கிராமத்தை அடைந்து, கோவில் வாசலுக்குச் சென்றபோது நல்ல வேளையாக உள்ளே வெளிச்சம் தெரிந்தது. அதுவே சந்தோஷமாக இருந்தது! கோபுரத்தை இருளில் பார்த்தவாறே உள்ளே சென்றால் முதலில் காளியின் சந்நிதி.

அங்கே நின்று கொண்டிருந்த இளைஞரான அர்ச்சகரிடம் கோவிலைப் பற்றிக் கேட்டபோது புராணக்கதைகளைக் கூறினார்.

வக்ராஸுரனை மகாவிஷ்ணு வதம் செய்த தலம். அவனுடைய தங்கை துன்முகியை காளியன்னை வதம் செய்தாள். காதில் பிரேத குண்டலமும் நீண்ட பாதமும் அஷ்ட புஜங்களும், செப்பு நிற ஆடையும் அச்சந் தரும் தோற்றமுமாகக் காட்சி தருகிறாள். காளியோடு சேர்ந்து சப்த மாதாக்களும் இங்கே குடி கொண்டிருக்கிறார்கள்.

குங்குமத்தால் பாதத்தில் அர்ச்சனை செய்து, பிரசாதம் கொடுக்கும் போது. ''பாதத்தின் கீழே மேரு இருக்கிறது'' என்று கூறினார் குருக்கள். வழக்கம் போல வலம் வரத் தொடங்கினபோது ''இங்கே அப்பிரதட்சணமாகத்தான் சுத்தணும்'' என்று அவர் சொல்ல அவசரமாகத் திசை மாறிச் சுற்றினோம்.

பிறகு சற்றுத் தூரத்தில் இருளில் தெரிந்த கோவிலை நோக்கிச் சென்றோம். முதலில் வரஸித்தி விநாயகரைத் தரிசனம் செய்து கொண்டு வலது பக்கத்தில் இடிந்து சிதிலமாகி இருந்த இருள் சூழ்ந்த மண்டபத்தைப் பார்த்துக் கொண்டே பிரம்மாண்டமான நந்தி கேசுவரைத் தரிசிக்கிறோம். நந்தி, சந்நிதிக்கு நேரே இல்லாமல்சற்றுவிலகி இருப்பது நடைபாதை வளைந்திருப்பதிலிருந்துதெரிகிறது. இரண்டாவதுபிரகாரத்தை அடைந்ததும் ஏதோ ஒரு அமானுஷ்ய லோகத்துக்கே வந்துவிட்டது போன்ற ஓர் உணர்வுடன் பிரமித்து நிற்கிறோம். மேலே சுடர் விட்டு மின்னும் ஒளி சிந்தும் தாரகைகள். கருநீல வண்ணமாகப் பட்டு விதானம் போலக் காட்சி தரும் வானத்தில் உயர்ந்த கோபுரங்களின் தோற்றம். சுற்றுத் தூண்களும் படிகளும் மண்டபத்தில் எரியும் மங்கிய மின் வெளிச்சத்தில் மிருதுவாகப் புலனாகின்றன.

இனிமேல்தான் நிஜமான அதிசயம் காத்திருந்தது. அங்கு நிலவும் அமைதியையும் அழகையும் அனுபவித்துக் கொண்டே மெல்லப் படியேறி கருவறையினருகில் சென்றால் பெரிய லிங்கம்தீபாராதனைகாட்டிய போதுஅதுவரைபுலப்படாத மூன்று முகங்களும் பளிச்சிடக் காட்சி தருகிறார் சந்திரசேகரர். ''அகோரம், தத்புருஷம், வாமதேவம் என்ற முகங்களைக் கொண்ட முகலிங்கம்'' என்று கூறினார் அர்ச்சகர். சந்திரன், பிரம்மா, விஷ்ணு மூவருக்கும் தரிசனம் தந்தாராம். வக்ராசுரன் பூஜித்ததால் வக்கரை என்று பெயராம்.

''த்வாம ஹம் ப்ரண
தோஸ்மி சங்கர
சந்த்ர சேகர ரக்ஷமாம்
சந்த்ர சேகர சந்த்ர சேகர
சந்த்ர சேகர பாஹிமாம்

என்று பிரார்த்தித்துவிட்டு வலம்வருகிறோம். பின்பக்கம் பிரயோக சக்கரம் தாங்கிய கரத்தோடு மகாவிஷ்ணுவும், அருணகிரி நாதரால் பாடப்பெற்ற ஆறுமுகனும், கோஷ்டத்தில் பிரயோக சக்கரம் தாங்கிய விஷ்ணு துர்க்கையும் காட்சி தந்தார்கள். துர்க்கையின் முகம் சுந்தரமான புன்னகையோடு விளங்குகிறது.

உற்சவ மூர்த்திகளைத் தரிசிக்கவில்லையே என்று மறுபடியும் கருவறை அருகில் சென்று எட்டிப் பார்த்தால் அங்கே மஞ்சள் நிறமாக விக்ரகங்கள் தெரிந்தன. ''சுப்பிரமணியசுவாமி, உற்சவர்'' என்று காண்பித்து விட்டுப் பிறகு இடதுபுறம் திரும்பி அங்கு தொங்கிய திரையைச் சற்று விலக்கினார் குருக்கள். அப்படியே திகைத்துப் போனோம். வலது காலைத் தூக்கியபடி நடராஜர். வலது கரத்தில் கடகா முக முத்திரை பிடித்துக்கொண்டு சிரத்தைச் சிறிது சாய்த்து அருள் நகையோடு எங்குமே காண முடியாத அழகு வடிவமாய்த் திகழ்கிறார். பையிலிருந்து இன்னும் ஒரு பொட்டலம் கற்பூரத்தை எடுத்துக் கொடுத்தபோது, முகம் சுளிக்காமல் ''வக்ர தாண்டவம். இந்தக் கோவிலில் எல்லாமே வக்ரம்'' என்று சொல்லிக் கொண்டே மறுபடியும் தீபாராதனை செய்தார் அர்ச்சகர். 'அடாடா! இந்த நடராஜாவைத் தரிசிக்காமல் போய்விட இருந்தோமே' என்று அங்கலாய்ப்பு. நல்ல வேளையாகத் திரும்பி வந்தோமே என்று சந்தோஷம். பிரதோஷவேளையில்நடராஜ தரிசனம் கிடைத்த கிளுகிளுப்பு. மறுபடியும் இத்தலத்துக்கு ஒரு நாள் சாவகாசமாக நிச்சயம் வர வேண்டும் என்று எண்ணிக் கொண்டே அம்பாளுடைய கோவிலுக்கு வருகிறோம். வடிவாம்பிகை என்ற பெயருக்கேற்ற வடிவம். ஒரு பழைய மஞ்சள் நிற ஆடை உடுத்தி ஆபரணம் எதுவும் அணியாமல் ஆடம்பரமில்லாமல் அம்பிகை அழகு வடிவமாகத் திகழ்கிறாள்.

இந்த ஊரில் ஆனித் திருமஞ்சனம, திருவாதிரை இரண்டும் விசேஷம். பொங்கல் தினத்துக்கு மறுநாள் தை மாதப் பெரிய உற்சவம் நடக்கும்.

பாடல் பெற்ற தலமாக இருப்பதால் கோவில் ஏழாம் நூற்றாண்டிலேயே இருந்திருக்க வேண்டும். ஆதித்த சோழனுடைய கல்வெட்டு இருப்பதாகக் கூறினார் குருக்கள். செம்பியன் மாதேவி இக் கோவிலுக்குக் கருங்கல் திருப்பணி செய்திருக்கிறார் என்ற செய்தி அமரர் கல்கியின் சொற்சித்திரத்தையும் ஓவியர் மணியத்தின் தூரிகைச் சித்திரத்தையும் உடனே நினைவூட்டும். தல விருக்ஷம் வில்வம்.

மறு நாள் காலை தினக் காலண்டரில் தேதி கிழிக்கத் தாளைப் பற்றியபோது அதில் ''பிரதோஷம்'' என்று போட்டிருந்தது கவனத்தைக் கவர்ந்தது. பிரதோஷத்தன்று, பிரதோஷ காலத்தில் வலிய அழைத்து தரிசனம் கொடுத்த நடராஜனின் கருணையை எண்ணி மனம் பூரித்து நின்றேன்.


சந்திரசேகரனே அருளா
யென்று தன்விசும்பில்
இந்திர னும்முதலா இமை
யோர்கள் தொழுதிறைஞ்ச
அந்தரமூவெயிலும்அனலாய்
விழ ஓரம்பினால்
மந்தர மேருவில்லா வளைத்
தானிடம் வக்கரையே
—சம்பந்தர்

மூவெயிலும்-முப்புரங்களும்



○ வலது பாதம் தூக்கி ஆடும் நடராஜப் பெருமான்

○ வலக்கரத்தில் பிரயோகச் சக்கரத்துடன் விஷ்ணு



ஆனந்தி

குஜராத்திலும் ஒரு திருப்பதி

குஜராத் தலைமைச் செயலகத்தில் சில ஐ. ஏ. எஸ். அதிகாரிகளுடன் பேசிக்கொண்டிருந்தபோது திருவரதன், ''நீங்கள் ஸோம்நாத்: துவாரகா எல்லாம் போகிற போது இந்த மாநிலத்தில் இருக்கிற திருப்பதி பாலாஜி கோவிலையும் அவசியம்பார்க்கவேண்டும்'' என்றார். குஜராத்தில் எங்கே வந்தது திருப்பதி?

''ஜுனகத் அருகில் கோராஸா என்ற கிராமத்திலிருக்கிறது இந்தக் கோயில். திருப்பதி வெங்கடாசலபதி சிலை. அதே சம்பிரதாயங்கள். இன்னொன்று — கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள்: ஆண்டாளின் திருப்பாவையை அப்படியே தமிழில் காலையிலும் மாலையிலும் இசைக்கிறார்கள். அங்கே பூஜை செய்கிறவர்கள்!'' என்றார் திருவரதன்.


நூற்று இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் திரு கோபாலாசார்யர்ஜி இந்த இடத்துக்கு வந்து, பாலாஜியின் விக்கிரகத்தை நிறுவிக் கோவில் கட்டத் துவங்கினார். ஆனால் அவ்வளவு எளிதில் முடியவில்லை பணி.

அவர் துவங்கின பணியை சுவாமி ரகுநாதாசார்யர் சுமார் 33 வருஷங்களுக்கு முன் வெற்றிகரமாக நிறைவேற்றி வைத்திருக்கிறார். 1951ல் சித்திரை கிருஷ்ண ஏகாதசியன்று வேங்கடாஜலபதியின் முழு உருவச் சிலையை பிரதிஷ்டை செய்து ஆகம விதிப்படி ஒரு கோவிலுக்குரிய நியமங்களைத் துவக்கி வைத்தாராம். ரகுநாதாசார்யரின் பெரிய படம் ஒன்று தென் கலை நாமம் இட்டுக் கொண்டு குருஜியின் அறையில் மாட்டப்பட்டிருக்கிறது. தரிசனம் செய்து வைத்த பூஜாரியை, ''தமிழில் கூட நீங்கள் பாடல் சொல்லுகிறீர்களாமே?'' என்று கேட்டோம்.

''ஆமாம், ஆண்டாளின் திருப்பாவையை இரண்டு வேளையும் இசைக்கிறோம். முப்பது பாடல்களையும் குஜராத்தி எழுத்தில் எழுதி வைத்திருக்கிறோம்!'' என்றார்.

கருட, சேஷ வாகனங்கள் வைத்திருக்கும் புராதன அறையைத் திறந்து காண்பித்த போது வியப்பாயிருந்தது. தென்னகத்துக் கோவில் பாணியில் எல்லாமே இருந்தன. அலங்கார ஆபரணங்கள், வஸ்திரங்கள் எல்லாவற்றையும் பிரம்மாண்டமான மரப் பெட்டியில் வைத்திருந்தார்கள்.

இரண்டு திருவிழாக்கள் இங்கே விசேஷம் என்றார்கள். ஏப்ரல் மாத பிற்பகுதியில் பிரம்மோத்சவம். ஆயிரக் கணக்கான மக்கள் அடுத்துள்ள கிராமங்களிலிருந்து வந்து கலந்து கொள்கிறார்கள். உற்சவ மூர்த்தி ஊர்வலமாக வந்து கிராமத்தில் உள்ள ஒவ்வொருவீட்டிலும் பூஜையை ஏற்றுக் கொள்ளுவாராம். கஜேந்திர மோட்சம் நடித்துக் காட்டப்படுமாம் ஒரு நாள். இன்னொன்று கோகுலாஷ்டமி. கோராஸா கிராம மக்கள் அனைவரும் அன்று அங்கே திரண்டு நிற்பார்கள். பிராகாரத்துக்கு வெளியே தேர் நிறுத்தப் பட்டிருந்தது. சிறிய தேர்தான். ஆனால் சுத்தமாக, பளபளப்பாக இருந்தது. ''இதை ஆண்கள் தான் முதலில் இழுப்பார்கள், கொஞ்ச தூரத்துக்கு. பிறகு நின்றுவிடும். அப்புறம் பெண்கள் இழுப்பார்கள். பிறகுதான் தேர் கிளம்பும்!'' என்று பூஜாரி தெரிவித்தபோது கேட்க விசித்திரமா யிருந்தது.



✖ மூலவர் - பாலாஜி



✖ பாலாஜி கோயில் கோபுரம்

இலக்கிய விவாதம்

காந்திஜி அடைந்த ஏமாற்றம்!

கே.எம். முன்ஷியின் வரலாற்று நாவல்களில் சிறந்தது 'பிருதுவி வல்லபன்'. சாளுக்கிய மன்னன் இரண்டாம் தைலபன் பலமுறை படையெடுத்து மாளவ அரசன் முஞ்சனை வென்றான். அதற்குப் பெருந்துணை நின்றவள் அவனது விதவைத் தமக்கை மிருணாள்வதி. ஆனால் அவள் சிறைப்பட்ட முஞ்சனின் தோற்றத்தாலும், பேச்சாலும் கவரப்பட்டு, அவன் காதலியாகி, உடன் பிறந்தவனுடன் மாறுபடுகிறாள். அவளது காதல் வளர்ச்சியைச் சுவையாக வருணிக்கிறார் முன்ஷி. குஜராத்தி மொழியில் அமைந்த பிரபந்தங்கள் இப்படைப்புக்குத் துணை நின்றன.



சுதந்திரப் போராட்ட வீரரும் அரசியல்வாதியுமான முன்ஷியின் இலக்கியப் படைப்பில் எதையோ எதிர்பார்த்து இந்த நாவலைப் படித்த அண்ணல் காந்தி ஏமாற்றமுற்றார். பொழுதுபோக்கிற்காகப் படிப்பதாக இருந்தாலும் ஏதாவது பயனளிப்பதாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் காந்தி. காளிதாசர், ஷேக்ஸ்பியர் போன்று முன்ஷியின் எழுத்தும் எதையாவது கற்றுக் கொடுப்பதாக அமைந்திருக்குமென்று நம்பினார். எனவே தமது கருத்தை முன்ஷிக்குக் கடிதமாக்கினார்.

'கதை மாந்தரைப்போல நாமும் இருக்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுவதாகப் பாத்திரப் படைப்பு அமைய வேண்டும். ஆனால் இந்நாவல் தலைவன் முஞ்சனைப் போன்று இருக்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு ஏற்படவில்லை' எனக் குறிப்பிடுகின்றார் காந்தி. தலைவி மிருணாள்வதியின் பாத்திரம் சின்னாபின்னப் படுத்தப்பட்டுள்ளது. நாற்பது வயதுக்கு மேற்பட்ட அழகற்ற அவள் ஓர் ஆணின் கவர்ச்சி மொழியாலும் நடத்தையாலும் தன் நிலையில் தளர்ந்து அடிமையாகிறாள். பெண்கள் இவ்வளவு நெஞ்சுறுதியற்றவர்களா? ஆண்கள் என்ன அவ்வளவு வஞ்சகர்களா? என்ற வினாவை எழுப்புகிறார் அண்ணல். இந்நாவலில் இடம் பெற்றுள்ள ஒரு பாத்திரம் கூடத் தம்மைக் கவரவில்லை என முடிக்கின்றார். முன்ஷியிடமிருந்து நல்ல படைப்புக்களைத் தாம் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிடுகின்றார்.



இதற்கு மறுமொழியாக முன்ஷி எழுதிய கடிதத்தைப் பார்க்கும் பொழுது இவ்விரு கூர்த்த அரசியல் தலைவர்களின் இலக்கியக் கொள்கை வேறுபாட்டினை உணர முடிகிறது.

பயன் விளைவிப்பதுதான் இலக்கியத்தின் நோக்கம் என்பதை முன்ஷி ஏற்றுக் கொள்ளவில்லை. கலை கலைக்காகவே என்ற கொள்கையிலும் இலக்கியங்கள் வடிவம் கொள்வதுண்டு. 'பிருதுவி வல்லபன்' எத்தகைய உள்ளுணர்வையும் ஊட்டுவதற்காக எழுதப்பட்டது அன்று. இது கழுவிச் செல்லும் இலக்கிய வகையைச் சார்ந்தது. எத்தனையும் கற்பிப்பது இதன் நோக்கம் அன்று. படைப்பாளியின் கற்பனையில் ஆவேசத்துடன் உருக்கொண்டதே இக்கதை' என்கிறார் முன்ஷி.

குழந்தை எத்தகையதாக இருந்தாலும் தாய் பெற்றெடுப்பதைப் போல கற்பனைக் குழந்தைகளுக்கு வடிவம் கொடுப்பதில்தான் எழுத்தாளரின் வெற்றி அமைகின்றது என்று கருதுகிறார் முன்ஷி.


இவ்வகையில் தான் எழுத வேண்டும் என்பது காந்தியின் கொள்கை. உள்ளத்து உணர்ச்சிகளை யெல்லாம் எழுத்தில் வடிக்கலாம் என்ற கருத்தினைக் கொண்டது முன்ஷியின் இலக்கியப் போக்கு.

-கலா கே. தாக்கர்

குஜராத் சிறப்பு அம்சங்களைத் தயாரித்தவர்கள்:

சாருகேசி
தமயந்தி

சாதனைத் திறனுக்குச் சான்று



தமிழ் நாட்டில் தலைநகரைத் திருச்சிக்குக் கொண்டு போகலாம்; தஞ்சைக்கு மாற்றலாம் என்றெல்லாம் இங்கே இமர் இமரென்று அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் பேசும் போது, ஏன் சென்னைக்கு அருகே புதிதாக ஒரு தலைநகரை நிர்மாணிக்க இவர்களுக்குத் தோன்றுவதில்லை என்றுபலரும்கேட்டதுண்டு.

'ஒரு மறைமலை நகரை உருவாக்கியது போதாதா அரைகுறை நகராக! புதிய தலைநகர் எல்லாம் இட்டம் போட்டுச் சாதிக்கிறவர்கள் செய்கிற காரியம். இங்கேயாவது, புதிய தலைநகராவது!'

வேண்டும் என்றால் வேரிலும் காய்க்கும். ஏற்கனவே இருக்கும் பரபரப்பான, வளர்ந்து வரும் தலை நகரை வைத்துக் கொண்டே வேறொரு புதிய தலைநகரை சிருஷ்டிக்கக்-கொஞ்சம் தைரியம், ஓரளவு முன் யோசனை — அப்புறம் தேவையான நிதி எல்லாம் வேண்டும்.

பம்பாய் மாநிலத்தோடு சேர்ந்திருந்த குஜராத் தனியே பிரிந்தபோது, தலைநகரான பம்பாயை இழப்பதால் ''இந்தாருங்கள் பத்துக்கோடிரூபாய். உங்கள் புதிய தலைநகரை நிர்மாணித்துக்கொள்ளுங்கள்'' என்று மகாராஷ்டிர அரசு கொடுத்ததாம். அப்போதைய மத்திய உள் துறை அமைச்சர்பண்டிதகோவிந்த வல்லப பந்தின் சாமர்த்தியத்தினால் கசப்பான உணர்வுகள் எதுவும் இரு மாநில மக்களுக்கும் ஏற்படவில்லை. தலைநகர் நிர்மாணிக்கப் பத்துக் கோடி ரூபாய் தவிர வருடத்துக்கு நாலரைக் கோடி ரூபாய் விதம் பத்து வருடங்களுக்குத் தொடர்ந்து 45 கோடி ரூபாயும் குஜராத்துக்குக் கிடைத்தது.

சண்டிகர், புவனேசுவர் இவற்றுக்கு அடுத்தபடி, மூன்றாவதாகக் குஜராத்தில் காந்தி நகர் புதிதாக உருவான தலைநகர். ஆமதாபாத்திலிருந்து சுமார் 25 கிலோ மீட்டர் தூரத்தில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக இருந்து வரும் தலைநகர். எச். கே. மேவாடா என்ற கட்டிடக் கலை நிபுணரும், எம். டி. பட்டேல் என்ற என்ஜினியரும் இதை உருவாக்கியவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள். 1966ல் பிளான் தயாராகி, 1957ல் கட்டிட வேலை துவங்கி, ஜூலை 1970 புதிய தலைமைச் செயலகம் இங்கே பணியைத் துவங்கி விட்டது!

எப்படி குஜராத்தியரின் செயல் திறமை!

ஆமதாபாத்திலிருந்து காந்தி நகர் போகிற வழியெங்கும் இரு புறமும் பச்சைப் பசேல் என்று அடர்த்தியான மரங்கள். குண்டு குழியில்லாத விரிவான சாலை. தலைநகருக்கும் ஆமதாபாத்துக்கும் போய்வர நிறைய ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்கள். காந்தி நகருக்குப் போகிற வழியில் புதிதாக உருவாக்கிய குஜராத் ஸ்டேடியம் கண்ணில் பட்டது. சென்ற முறை கிரிக்கெட் டெஸ்ட் இங்கேதான் நடந்தது. எட்டே மாதங்களில் 50,000 பேர் அமரும் வகையில் உருவான பிரும்மாண்டமான ஸ்டேடியம். இந்த இடத்துக்குப் பெயர்: மொட்டேரா.

5500 ஹெக்டேர் நிலப் பரப்பை 30 செக்டர்களாகப் பிரித்து வெகு ஒழுங்காக நிர்மாணிக்கப்பட்ட தலைநகர் காந்தி நகர்.

அரசு செயலகங்கள் (சர்தார் பவன்) சட்டசபை அலுவலகங்கள், சினிமா செட்டிங் மாதிரி என்ன வண்ணம், என்ன ஜிலு ஜிலுப்பு! விளையாட்டு அரங்கங்கள், நீச்சல் குளம், பூங்கா, பள்ளிக்கூடங்கள், மான் சோலை குழந்தைகள் விளையாட்டுத் திடல், பாங்க், தபால் ஆபீசுகள், தேசீய? கரல் ஹிஸ்டரி மியூசியம் எல்லாம் இங்கே இருக்கின்றன. ஏராளமான அடுக்கு மாடி வீடுகள், உயர்நீதி மன்றம், ராஜ் பவன், மியூசியம், எலக்ட்ரானிக் எஸ்டேட் இவையெல்லாம் உருவாக இருக்கின்றன. காந்தி நகருக்கு சென்று தனியே ஓர் அலைமின்றி? அமைதியாக இயங்குகிறது.

மாநிலத் தலைநகராக மட்டுமின்றி பிக்னிக் போவதற்குக் கூட ஆமதாபாத்காரர்களுக்கு ஏற்ற இடமாக விளங்குகிறது காந்தி நகர்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka



அதிக சுவையானது
அதிக முழுமையானது



**நீங்கள் பாசத்துடன்
ஊட்டும் ஒவ்வொரு கவளமும்
உங்கள் பாப்பாவின்
வளர்ச்சிக்குச் சிறந்ததாகும்.**

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. இதைக் கலப்பது எளிது. பாப்பாவுக்கு ஊட்டுவதும் எளிது.

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. பாப்பாவின் வளர்ச்சிக்கு இன்றியமையாத புரதம் நிரம்பியது. மிக ஆரோக்கியமான இரத்தத்திற்குக் கூடுதல் இரும்புச்சத்து கொண்டது. உறுதியான பற்களையும் எலும்புகளையும் பெற சரியான விகிதத்தில் கால்ஷியமும் ஃபாஸ்ஃபரஸும் அடங்கியது. பாப்பாவின் மென்மையான ஜீரணசக்திக்கென முன்கூட்டிப் பக்குவம் செய்தது.

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. ஒவ்வொரு கவளத்திலும் அதிக முழுமையான திட உணவு.

CLARION/B/GX/3/203 TAM